0ங்கள்: பதினெட்டு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2035 கார்த்திகை 18 வெள்ளிக்கிழமை (03.12.2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர் 07



வவுனியா - மன்னார்ப் பிரதேசங்களில் நேற்று முழு அளவில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. ஹர்த்தாலை முன்னிட்டு வெறிச்சோடியிருக்கும் மன்னார் நகரூடாகப் படையினர் மோட்டார்ச் சைக்கிளில் பவனி வருவதை முதலாவது படத்திலும் வவுனியா நகரப்பகுதியில் பொலீஸார் ஒருவர் கடமையில் ஈடுபட்டிருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். வவுனியாவில் பெருந்தெருக்களில் டயர்கள் கொளுத்தப்பட்டிருப்பதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

## வவுனியா – மன்னாரில் நேற்று பூரண ஹர்த்தால்!

### கண்டி வீதிப் போக்குவரத்தும் தடைப்பட்டது

வவுனியா, டிசெ.3

மாவீரர் தின நிகழ்வுகளின்போது வடக்கு-கிழக்கில் அசம்பாவிதங்களைத் தூண்டிவிட்ட நடவடிக்கைகளைக் கண்டித்து நேற்று மன்னார், வவுனியா ஆகிய பிரதேசங்களில் முழு அளவில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. அதனால் அப்பிரதேசங்கள் முற்றாகச் செயலிழந்தன.

யாழ்.-கண்டி (ஏ-9) வீதியில் ஓமந்தைச் சோதனைச் சாவடி மற்றும் வவுனியா-மன்னார் வீதியில் உயிலங்குளம் சோதனைச்சாவடி ஆகியவற்றுக்கு ஊடான போக்குவரத்தும் இதனால் நேற்றுத் தடைப்பட்டது.

மேற்படி மன்னார், வவுனியா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மாணவர் ஒன்றியங்கள், வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியங்கள் மற்றும் பொது அமைப்புகள் என்பன இந்தக் ஹர்த்தாலுக்கான அழைப்பை விடுத்திருந்தன.

வவுனியாவில் நீதிமன்றம், அரச செயலகம் உட்பட அனைத்து அரச திணைக்களங்களும் வங்கிகள், பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள் போன்றவையும் தனியார் காரியாலயங்களும் செயலிழந்தன. போக்குவரத்துக்கள் இடம்பெறவில்லை.

(18ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் – புலிகள் திருமலையில் சந்திப்பு

கொழும்பு, டிசெ.3

திருகோணமலையில் படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்றுக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பின் போது, மாவட்டத்தின் தற்போதைய நிலைமை குறித்து ஆராயப்பட்டது.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைப் பேணிப் பாதுகாப்பதுடன், அமைதியை நிலைநாட்டுவதற்கு அனைத்துத் தரப்பும் ஒத்துழைக்க வேண்டுமெனக் கண்காணிப்புக் குழு இச்சந்திப்பில் வலியுறுத்தியது.

இச்சந்திப்பில் புலிகள் தரப்பில் திருகோண

(18ஆம் பக்கம் பார்க்க)

# சொல்ஹெய்ம் வன்னி வரும்போது புலிகளின் முடிவு தெரிவிக்கப்படும்

கிளிநொச்சி, டிசெம்பர்3

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப்படையில் பேச்சை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்று விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் விடுத்த அவசர வேண்டுகோளை இலங்கை அரசு உத்தியோகபூர்வமாக நிராகரித்துள்ள பின்னணியில் -

அவ்விவகாரம் தொடர்பான புலிகளின் நிலைப்பாடு அடுத்த பத்து நாள்களில் இலங்கை வரவிருக்கும் நோர்வே அனுசரணைக்குழுவின் விசேட பிரதிநிதியான எரிக்சொல்ஹெய்மிடம் தெரியப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எரிக் சொல்ஹெய்ம் நேற்றுமுன்தினம் லண்டனில் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசியிருந்தார்.

ஆனால், மாவீரார் தின உரையில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் வெளியிட்ட அவசர கோரிக்கையை இலங்கை அரசு நிராகரித்திருப்பது பற்றிய உத்தியோகபூர்வத் தகவல் பாலா - சொல்ஹெய்ம் சந்திப்புக்குப் பின்னரே அவர்கள் இருவருக்கும் தெரிய வந்ததாக அறியமுடிந்தது.

எனினும், மாவீரர் தின உரையில் தலைவர் பிரபா வெளிப்படுத்திய அம்சங்களின் மேல் விவரங்களையும் விளக்கங்களையும் மதியுரை

(18ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவிலிருந்து 93 அகதிகள் நேற்று விமானத்தில் திரும்பினர்

தமிழ்நாட்டில் அகதிகளாகத் தஞ்சமடைந்திருந்த இலங்கையர்களில் 93 பேர் நேற்று விமானம் மூலம் இலங்கைக்கு அழைத்துவரப்பட்டனர்.

இவர்களில் பெரும்பாலானோர் வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களாவர். யுத்தகாலப் பகுதியில் இவர்கள் கடல் மார்க்கமாகத் தமிழ்நாட்டுக்குச் சென்றிருந்தனர். இவர்

(18ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி திடீரென நேற்று நாடாளுமன்றத்துக்கு விஜயம்

கொழும்பு, டிசெ.3

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று திடீரென நாடாளுமன்றுக்கு விஜயம் செய்தார்.

வரவு-செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் திடுதிப்பென சபைக்குள் பிரவேசித்த ஜனாதிபதி குமாரதுங்க, ஆளும் தரப்பில் பிரதமர் வழமையாக அமரும் முன்வரிசை ஆசனத்தில் அமர்ந்தார்.

சபை நடவடிக்கைகளைச் சுமார் ஒரு மணி நேரம் பார்த்துக்கொண்டிருந்த அவர், பின்னர் புறப்பட்டுச் சென்றார்.

நேற்று நாடாளுமன்றத்தில் கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு குறித்துக் குழுநிலை விவாதம் நடைபெற்றது.

ஜனாதிபதியே கல்வி அமைச்சைத் தன்வசம் வைத்திருப்பதால் அந்த விவாதத்தின் முடிவில் கல்வி அமைச்சர் என்ற ரீதியில் அவர் பதிலளிப்பதற்காகவே நாடாளுமன்றத்துக்கு வந்திருந்தார் எனக் கருதப்பட்டது.

ஆனால், ஒரு மணிநேரம் சபையில் அமர்ந்திருந்த ஜனாதிபதி, திடீரெனப் புறப்பட்டுச் சென்றார். சம்பந்தப்பட்ட விவாதத்தில் அவர் பங்குபற்றவோ அல்லது பதிலளிக்கவோ இல்லை.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசு பதவிக்கு வந்தபின்னர் ஜனாதிபதி குமாரதுங்க நாடாளுமன்றத்துக்குவருவது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

அரசமைப்புச் சட்டத்தின்படி ஜனாதிபதி

(18ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேத் தூதுவர் வன்னியில் நேற்று சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்தார்

யாழ்ப்பாணம், டிசெ.3

நாட்டில் தற்போது இடம்பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

நேற்றுக்காலை ஏ-9 வீதியூடாகக் கிளிநொச்சிக்கு வருகைதந்த நோர்வேத் தூதுவர், புலிகளின் சமாதான செயலகத்தில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளரைச் சந்தித்துத் தற்போதைய நிலைமைகள் தொடர்பாகக் கலந்துரையாடினார்.

(18ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றில் மகேஸ்வரன் எம்.பியை தாக்கப் பாய்ந்தனர் ஆளும் கட்சியினர்

### படைக்கல சேவிதரும் மற்றும் சிலரும் தடுத்ததால் தப்பினார்

கொழும்பு, டிசெ.3

நாடாளுமன்றில் நேற்று அமளிதுமளி, மகேஸ்வரன் எம்.பியைத் தாக்க ஆளும் கட்சியினர் முஷ்டியை முறுக்கிக்கொண்டு பாய்ந்து சென்றனர். ஆனால், படைக்கல சேவிதரும், சிரேஷ்ட அமைச்சர்களும் அவர்களை இழுத்துப்பிடித்ததால் செம்மையாக வாங்கிக் கட்டுவதிலிருந்து அருந்தப்பில் தப்பினார் மகேஸ்வரன் எம்.பி.

இந்த இழுபறிக்கு மத்தியில் சபை அல்லோல கல்லோலப் பட்டது.

மேர்வின் சில்வா, பிரதியமைச்சர் டிலான் பெரேரா, பிரதியமைச்சர் தி.மு.தஸநாயக்க போன்றோரே எதிரணிப்பக்கத்திற்குப் பாய்ந்து செல்ல முயன்றனர்.

நேற்றுக்காலை துறைமுகங்கள், விமான சேவைகள் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதம் நாடாளுமன்றில் நடைபெற்றுக்கொண்டிருந்தபோதே இந்த விரும்பத்தகாத சம்பவம் இடம்பெற்றது.

ஐ.தே.கட்சியின் எம்.பியும், முன்னாள்

(18ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# ஜனாதிபதியின் கல்வித் திட்டத்திற்கு கடும் எதிர்ப்புக் காட்டுகின்றது ஜே.வி.பி.

## அமைச்சரவையில் காரசாரமான விவாதம்

கொழும்பு,டிசெ.3

அரச பாடசாலைகளின் தராதரத்தை மேம்படுத்துவது சம்பந்தமாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கல்வியமைச்சர் என்ற அடிப்படையில் வகுத்திருக்கும் செயற்றிட்டத்திற்கு ஜே.வி.பி. கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதியின் இந்தத் திட்டங்கள் தனியார் துறைக்குக் கல்வித்துறையைக் கொண்டு சென்றுவிடுமென அவர்கள் அச்சம் தெரிவித்திருக்கின்றனர்.

ஜனாதிபதியின் தலைமையில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது ஜே.வி.பியின் அமைச்சர்கள் இது தொடர்பான தங்களது கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

அரச பாடசாலைகளின் தராதரத்தை மேம்படுத்துவது சம்பந்தமான ஜனாதிபதியின் யோசனை அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட போது ஜே.வி.பி. அமைச்சர்களான விஜித ஹேரத், அனுரகுமார திஸாநாயக்க, கே.ரி. லால்காந்த ஆகியோர் இதற்கு ஆட்சேபனை வெளியிட்டுள்ளனர்.

பாடசாலைகளின் தராதரத்தை மேம்படுத்துவது, அதற்காகப் பாடசாலைகளில் தனிக் குழுக்களை அமைப்பது போன்ற செயற்பாடுகளைச் சுட்டிக்காட்டிய ஜே.வி.பி. அமைச்சர்கள், இவை எதிர்காலத்தில் கல்வித்துறையைத் தனியார் மயமாக்கலுக்கு மாற்றிவிடுமென்று அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இவ்விடயம் குறித்து அமைச்சரவையில் காரசாரமான விவாதம் இடம்பெற்றதாகத் தெரிய வந்தது.

இந்தச் செயற்பாட்டின் மூலம் ஒருபோதும் தனியார் மயமாக்கல் இடம்பெறாதென்று ஜனாதிபதி சுட்டிக்காட்டியபோதும் ஜே.வி.பி. அமைச்சர்கள் அதனை ஏற்கமறுத்த காரணத்தினால் இந்த யோசனையை வேறொரு தினத்தில் ஆராய்வதென்று அமைச்சரவை தீர்மானித்தது என அறியவந்தது. (எ-க)

# குளியாப்பிட்டியில் 4 கடைகள் தீக்கிரை!

கொழும்பு,டிசெ.3

குளியாப்பிட்டிய நகரிலுள்ள கடைத்தொகுதியில் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்ற தீ விபத்தொன்றில் நான்கு கடைகள் முற்றாக எரிந்துள்ளன. இதனால் ஒரு கோடி ரூபாவிற்கும் அதிகமான சேதம் ஏற்பட்டுள்ளதாகக் குளியாப்பிட்டியப் பொலீஸார் தெரிவித்தனர்.

இரண்டு புடைவைக்கடைகளும், ஹோட்டலொன்றும், இரும்புக்கடையொன்றும் இந்த விபத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டன. இந்த விபத்திற்கு மின் ஒழுக்கா அல்லது வேறெதுவும் காரணமா என்பது பற்றிப் பொலீஸார் விசாரணைகளை நடத்திவருகின்றனர்.(எ-க)

# பண்டா குடும்பத்தாலேயே நாடு இப்படி நாசமானது!

## அனுராவுக்கு மகேஸ்வரன் பதிலடி

"சகோதரத்துவத்துடன் ஐக்கியமாக வாழ்ந்த இந்நாட்டு மக்கள் மத்தியில் இனத்துவேசத்தைத் தூண்டிவிட்டதே பண்டாரநாயக்கா பரம்பரைதான்.

"தனிச்சிங்களச் சட்டத்தை அறிமுகப்படுத்தி விதைத்த விதைதான் இன்று நாட்டையே குட்டிச்சுவராக்கிவிட்டது." - இப்படி ஆவேசத்துடன் நாடாளுமன்றத்தில் கூறினார் கொழும்பு மாவட்ட ஐ.தே.கட்சி எம்.பியான தியாகராஜா மகேஸ்வரன்.

நாடாளுமன்றம் நேற்றுக்காலை சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார தலைமையில் கூடியபோது, சபாநாயகரின் அனுமதியுடன அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா தன்நிலை விளக்க உரை ஒன்றை விடுத்தார்.

சில தினங்களின் முன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான நடராஜா ரவிராஜ் வெளியிட்ட சில கருத்துக்கள் தொடர்பாக அனுரா பண்டாரநாயக்க விளக்கமளித்தார்.

"பண்டாரநாயக்காவின் குடும்பத்தை விமர்சிக்கும் அருகதை ரவிராஜ் எம்.பிக்கு அறவே கிடையாது. பண்டாரநாயக்கா பரம்பரையை அரசியலில் இருந்து வெளியேற்றினால்தான் இந்த நாடு உருப்படும் என ரவிராஜ் கூறியுள்ளார். இவர் அரசியல் அறிவு சிறிதும் இல்லாதவர். சரித்திரம் தெரியாதவர். இத்தகையோரால் எங்களை ஒருபோதும் அரசியலில் இருந்து ஓரங்கட்டிவிட முடியாது." - என சவால் விடுத்தார் அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கா.

இந்தச் சந்தர்ப்பத்திலேயே அனுரா பண்டாரநாயக்கவுக்கும், மகேஸ்வரன் எம்.பிக்கும் இடையில் காரசாரமான வாக்குவாதம் ஏற்பட்டது.

"பண்டாரநாயக்கா குடும்பம்தான் இந்த நாட்டைக் குட்டிச்சுவராக்கியது. அரசியலில் இனவாதத்தைத் தூண்டிவிட்டு மக்கள் மத்தியில் அமைதியைச் சீரழித்தது. அதேபோன்று இவர்களுடைய ஜனாதிபதியின் அரைகுறைப் பொருளாதாரக் கொள்கைப் போக்கே நாட்டையே வறுமைக் கோட்டிற்குக் கீழ் தள்ளிவிட்டது. இந்த நாட்டை நாசமாக்கியதற்கான முழுப் பொறுப்பையுமே பண்டாரநாயக்கா குடும்பமே ஏற்கவேண்டும்." - எனக் கூறினார் மகேஸ்வரன் எம்.பி.

இதனால் ஏற்பட்ட சர்ச்சையால் சபையில் அமைதி ஏற்பட சில நிமிடங்கள் பிடித்தன. இவ்விடயம் தொடர்பாக அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா மேலும் கூறியதாவது:-

"எனது தந்தை நாட்டில் சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்றவர். எனது தாயார் சர்வதேச அரங்கில் முதலாவது பெண் பிரதமர் என்ற இடத்தைப் பிடித்தவர்.

"எனது சகோதரியான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கதான் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான பேச்சுக்களை ஆரம்பித்தவர். இப்படிப் பல்வேறு சேவைகளை இந்த நாட்டிற்காகச் செய்தவர்கள் நாம்.

"எனது தந்தை இந்த நாட்டிற்காகவே உயிரையே தியாகம் செய்தவர். எனது சகோதரி ஒரு கண்ணையே இழந்தார். இப்படிப் பல தியாகங்களைச் செய்த குடும்பம் எங்கள் குடும்பம்.

"இதே போன்று பல மூத்த தமிழ்த் தலைவர்கள் இந்த நாட்டில் தேசிய உணர்வுடன் செயற்பட்டுள்ளனர் என்பதையும் நினைவு கூறுகிறேன்" - என்று அநுரா பண்டாரநாயக்கா கூறினார். (எ-க)





நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் நேற்றுக் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்துவதை முதலாவது படத்திலும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட புலிகள் தரப்புப் பிரதிநிதிகளை 2ஆவது படத்திலும் காணலாம்.

# நிவாரணப் பொருளில் நிறை வெட்டு: கூட்டுறவு சமாசம் நேற்று அறிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.3

கூட்டுறவுச் சங்கக்கிளை நிலையங்களில் நிவாரண விநியோகத்திற்குப் பொருள்கள் குறைவாகக் கிடைப்பதாக நேற்றைய 'உதயனில்' வெளியான செய்தி தொடர்பாக யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் ப.கனகலிங்கம் அறிக்கை ஒன்றைவெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கை வருமாறு:-

பாவனையாளர்கள் இது விடயத்தில் விழிப்புடன் இருக்கவேண்டும் சிட்டைப்படி பொருள்களைச் சரிபார்த்துப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

அவ்வாறு மேற்கொள்வதில் கிளைமுகாமையாளர்களால் ஏதும் அசௌகரியங்கள் ஏற்படின் உடனடியாக அப்பகுதி ப.நோ.கூ.சங்கத் தலைமைக் காரியாலயத்துடன் தொடர்புகொள்ள வேண்டும்.

அவர்கள் இதற்கான நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளாதவிடத்து சமாசத்தின் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமிடத்து பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என சமாசத் தலைவர் தெரிவித்துள்ளார். (எ)

# சங்கீத சபைப் பரீட்சை விண்ணப்ப திகதி நீடிப்பு

வட இலங்கைச் சங்கீத சபையினரால் நடதப்படும் பரீட்சைகளுக்கான விண்ணப்ப திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

திருமுறைப் பண்ணிசை, வாய்ப்பாட்டு, வயலின், வீணை, புல்லாங்குழல், மிருதங்கம், பரதம், கதகளி ஆகிய பாடங்களுடன் இவ்வாண்டு புதிதாகத் தவில், நாதஸ்வரம், ஹார்மோனியம் ஆகிய பாடங்களுக்கு இந்த ஆண்டு முதல் பரீட்சைகள் நடைபெறும் என்றும் -

எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# மெல்லமெல்ல வழமைக்குத் திரும்புகின்றது திருமலை

திருகோணமலை,டிசெ.3

கடந்த சில நாள்களாகப் பதற்றத்துக்கு உள்ளாகியிருந்த திருகோணமலை நகரப்பகுதி நேற்று மெல்லமெல்ல வழமைக்குத திரும்பத் தொடங்கியது.

கடந்த சில தினங்களாகத் திருமலையில் இடம்பெற்ற வன்செயல்கள், அனர்த்தங்கள் காரணமாக நகரம் செயலிழந்து இருந்தது. சன நடமாட்டமும் குறைந்து வழமைநிலை பாதிக்கப்பட்டிருந்தது.

நேற்றுமுனதினம் இரவு தமிழ்க் கிராமங்கள் தாக்கப்படலாம் என்ற வதந்தி கிளம்பியிருந்த போதும், பொலீஸாரும், படையினரும் நிலைமையைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

நேற்று சுமுகநிலை காணப்பட்டதால் மக்கள் தமக்கு அத்தியாவசியமான பொருள்களை வாங்கும் பொருட்டு சந்தை மற்றும் கடை வீதிகளுக்குச் சென்றனர்.

படிப்படியாகச் சகயநிலை தோன்றத் தொடங்கியுள்ளது. பாடசாலைகள், வங்கிகள், நிறுவனங்கள் இயங்கின. போக்குவரத்தும் அதிகரித்துக் காணப்பட்டது.

ஆசிரியர் தெரிவுக்கான நேர்முகப் பரீட்சைகளும் மாகாணக் கல்வி அமைச்சில் தொடர்ந்து இடம்பெறுகின்றன. (எ-க)

# நாவலரின் குருபூசைத் தினத்தை முன்னிட்டு மூவர்ண திருவுருவப்படம்

## யாழ். சைவ பரிபாலன சபையினர் வழங்குவர்

யாழ்ப்பாணம்,டிசெ.3

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 125ஆவது குருபூசைத் தினத்தை முன்னிட்டு யாழ். சைவபரிபாலன சபையினர் ஆறுமுகநாவலரின் மூவர்ண திருவுருவப்படத்தை அச்சிட்டு இலவசமாக வழங்கவுள்ளனர்.

ஆறுமுகநாவலரின் குருபூசை தின நிகழ்வுகளை நடத்தும் பாடசாலைகள், அறநெறிப் பாடசாலைகள், ஆலயங்கள், இந்துசமய நிறுவனங்கள் இந்தத் திருவுருவப்படத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என சைவபரிபாலன சபையின் தலைவரும், சபையின் பரீட்சைச் செயலாளருமான சைவப்புலவர் வ.கந்தசாமி தெரிவித்தார்.

குருபூசைத்தினம் சனிக்கிழமை வருவதால், அன்றையதினம் குருபூசைத் தின நிகழ்வுகளை நடத்த இயலாதவர்கள் 4ஆம் திகதிமுதல் 10ஆம் திகதி வரையிலான நாள்களை நாவலர் நினைவு நாள்களாகக் கருதி நினைவு விழாக்களை நடத்தலாம் என்றும் - அவர் கூறினார்.



நாவலரின் மூவர்ண திருவுருவப் படங்களைப் பெறவிரும்புவோர் "சைவபரிபாலனசபை, 66, கஸ்தூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்" என்னும் முகவரியில் அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் - கூறப்பட்டது. (எ)

# இஸ்ரேல் சிறைச்சாலையிலுள்ள மார்வன் பர்கோதி பலஸ்தீனத் தேர்தலில் போட்டியிடுவாரென அறிவிப்பு

காஸா,டிசெ.3

பலஸ்தீன ஜனாதிபதித் தேர்தலில் தாம் போட்டியிடுவதை இஸ்ரேல் சிறையில் இருக்கும் மார்வன் பர்கோதிஉறுதிப்படுத்தியுள்ளார்.

இதற்கான தீமானம் நேற்றுமுன்தினம் எடுக்கப்பட்டதாகவும், அத்தீர்மானம் பலஸ்தீனத் தேர்தல் ஆணையகத்திற்குத் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

தனது கணவரின் பெயர் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் நடைபெறவுள்ள பலஸ்தீன அதிகார சபையின் தலைவருக்கான தேர்தலில் பதிவுசெய்யப்பட்டிருக்கிறது - என்று திருமதி மார்வன் பர்கோதி தெரிவித்தார்.

மார்வன் பர்கோதியின் இந்த முடிவை - நகர்வை பலஸ்தீன அல்-பதாஹ் அமைப்பு ஆட்சேபித்திருக்கிறது.

அரசியல் பொறுப்பற்ற செயலாகவே மார்வனின் தேர்தல் பிரசன்னம் அமைந்திருப்பதாகவும் இவ்வமைப்பு மேலும் குற்றஞ்சாட்டியிருக்கிறது.

முன்னதாகத் தான் அல்-பதாஹ் அமைப்பின் சார்பில் வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருக்கும் முன்னாள் பிரதமர் மஹ்மூத் அப்பாஸுக்கே ஆதரவு வழங்குவதாக மார்வன் அறிவித்திருந்தார்.

ஆனால், பின்னர் தனது முடிவை அவர் மாற்றிக்கொண்டுள்ளார். மார்வன் பர்கோதிக்குப் பலஸ்தீன மக்களிடையே பெரும் செல்வாக்கு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மார்வன் பர்கோதி இத்தேர்தலில் போட்டியிடுவது மஹ்மூத் அப்பாஸுக்கும் பெரும் சவாலாக அமையும் என்கின்றனர் அரசியல் அவதானிகள். மார்வன் சுயேட்சையாகவே இத்தேர்தலில் போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (க-10)

## அமெ.ஜனாதிபதியை கொலைசெய்ய திட்டமிடவில்லை என்கின்றனர் கொலம்பிய இடதுசாரிகள்!

வாஷிங்ரன், டிசெ.3

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷை கொலைசெய்யத் திட்டமிட்டதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை கொலம்பிய இடதுசாரித் தீவிரவாதிகள் மறுத்துள்ளனர்.

ஜோர்ஜ் புஷ் கடந்த வாரம் கொலம்பியாவில் கட்டகான துறைமுகத்திற்கு விஜயம் செய்த போதே இக்கொலை மிரட்டல் விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொலம்பிய அரசுக்கு எதிராக 40 வருடங்களுக்கு மேலாக இடதுசாரித் தீவிரவாதிகள் போராடி வருகின்றனர். இந்த அமைப்பில் சுமார் 17 ஆயிரம் பேர் அங்கம் வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-10)

## வாஜ்பாயும் அத்வானியும் கைது; சிலமணி நேரத்தின் பின் விடுதலை

புதுடில்லி,டிசெ.3

விலைவாசி உயர்வைக் கண்டித்து இந்தியாவின் முன்னாள் பிரதமர் வாஜ்பாய், பா.ஜ.கவின் தலைவர் எல்.கே.அத்வானி ஆகியோர் தலைமையில் டில்லியில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது. இதில் வாஜ்பாயும், அத்வானியும், நூற்றுக்கணக்கான தொண்டர்களுடன் கைதுசெய்யப்பட்டனர்.

ராம் லீலாத்திடலிலிருந்து புறப்பட்ட பேரணி மத்திய டில்லியில் அமைந்துள்ள அம்பேத்கர் அரங்கைச் சென்றடைந்தபோது, அங்கு வாஜ்பாய், அத்வானி மற்றும் நூற்றுக்கணக்கான பா.ஜ.க. தொண்டர்களைப் பொலீஸார் கைதுசெய்தனர். பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். (க-10)

# மியன்மார் எதிர்கட்சித் தலைவர் ஆங்ஷாங் சூகியை விடுதலை செய்யுமாறு ஐ.நா. செயலர் கோரிக்கை!

நியூயோர்க்,டிசெ.3

மியன்மாரில் கடந்த 15 ஆண்டுகளாக வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ஆங்ஷான் சூகியையும், பிறஅரசியல் கைதிகளையும் விடுதலைசெய்யவேண்டும்.

- இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கோபி அனான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மியன்மாரில் கடந்த 1962 ஆம் ஆண்டு முதல் இராணுவ சர்வாதிகார ஆட்சியே நடைபெற்று வருகிறது. நாட்டின் ஜனநாயக ஆட்சி நடைபெறவேண்டுமென அந்நாட்டு எதிர்க்கட்சியான தேசிய லீக் கட்சித் தலைவர் ஆங்ஷான் சூகி போராடி வருகிறார். இம்முயற்சியைப் பாராட்டும் வகையில் அவருக்கு நோபல் பரிசும் வழங்கப்பட்டது.

கடந்த 1990 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஆங்ஷாங் சூகி தலைமையிலான தேசிய லீக் பெரும்பான்மை இடங்களை வென்றது.

ஆட்சியமைக்கும் அதிகாரங்களையும் கைப்பற்றியது. ஆனால், அவரிடம் ஆட்சியை ஒப்படைக்கப்படாமல், தொடர்ந்தும் இராணுவ ஆட்சியே நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பின்னர் யான்கூன் எனும் இடத்தில் உள்ள அவரது இல்லத்தில் கடந்த 15 ஆண்டுகளாக வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஆங்ஷான் சூகிக்கு தற்போது வயது 59 ஆகும். இவரைப் பார்வையிட கடும் பிரயத்தனங்களை மேற்கொள்ளவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது என ஆதரவாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இவர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள வீட்டின் தொலைபேசி இணைப்பும் துண்டிக்கப்பட்டுள்ளது.

இந்திய - ஆசியான் அமைப்பின் உச்சி மாநாடு அண்மையில் லாவோஸில் நடைபெற்றது. இதில் பங்கேற்ற பல்வேறு நாட்டுத் தலைவர்களால் ஆங்ஷாங் சூகியை வீட்டுக்காவலிலிருந்து விடுதலை செய்யவேண்டும் என மியான்மார் இராணுவ ஆட்சியாளர்களுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. இதனையடுத்தே, ஆங்ஷான் சூகி உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கோபி அனான் தனது அறிக்கையில் வலியுறுத்திக் கேட்டுள்ளார்.

"மியன்மாரில் 9ஆயிரம் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என அண்மையில் அறிவிப்புகள் வெளியாகியிருந்தன. இத்தருணத்தைப் பயன்படுத்தி ஆங்ஷான் சூகியையும், ஏனைய அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும். ஆங்ஷான் சூகியை தொடர்ந்தும் வீட்டுக்காவலில் வைப்பது அந்நாட்டின் சீரமைப்பு முயற்சிகளுக்கும் ஜனநாயகம் ஏற்படுவதற்கும் எடுக்கப்பட்டுவரும் முன்னெடுப்புகளுக்கு எதிராகவே அமையும்." என்று கோபி அனான் எச்சரித்தார்.

மேலும், ஒரு வருடத்திற்கு ஆங்ஷாங சூகி வீட்டுக்காவலில் வைக்கப்படுவார் என அண்மையில் அறிவிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

# உக்ரைன் தேர்தல் சர்ச்சையைத் தீர்க்க நாடாளுமன்றமும் நீதிமன்றமும் முயற்சி

கியேவ்,டிசெ.3

உக்ரைன் ஜனாதிபதித் தேர்தலில் எழுந்துள்ள சிக்கல்களைத் தீர்க்கும் முயற்சிகளை நாடாளுமன்றமும் உயர்நீதிமன்றமும் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்கின்றன. இந்தத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கு மத்தியில் சமரசத்தை ஏற்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. பிரதமர் விக்டர் யனுகோவிச், எதிர்க்கட்சித் தலைவர் விக்டர்யுஷ்ஷெங்கோ ஆகியோர்களுக்கிடையிலான பேச்சுக்களை ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் வழிநடத்தினர்.

இருதரப்பும் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்து, நாடாளுமன்றத்தைப் பலப்படுத்தும் அரசியல் யாப்புச் சீர்திருத்தங் களை முன்னெடுத்துச் செல்ல இணங்கியிருப்பதாகத் தெரிகிறது.

உக்ரைனில் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவை ரத்துச் செய்யும்படி பிரதமர் விக்டர் யனுகோவிச் உயர்நீதிமன்றத்தைக் கேட்டுள்ளார். ஆனால், இந்தத் தேர்தலில் நடந்த மோசடிகள்தான் பிரதமர் யனுகோவிச்சைத் தேர்தலில் வெற்றியீட்டச் செய்தன என்று எதிர்க்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

இதேவேளை -

பிரதமர் யனுகோவிச்சை ஆதரித்து வந்து பதவிவிலகும் உக்ரைன் ஜனாதிபதி லியோனிட் குச்மா, ஜனாதிபதித் தேர்தல் முழுமையாக மீண்டும் நடத்தப்பட வேண்டும்" - எனக் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றம் ஏற்கனவே நிறைவேற்றியிருக்கும் தீர்மானம் தமக்கு ஒரு வெற்றி என எதிர்க்கட்சிகள் குதூகலித்தாலும், ஜனாதிபதியின் இக்கோரிக்கை எதிர்க்கட்சியின் உத்வேகத்தை மழுங்கடிக்கச் செய்யும் நோக்குடன் முன்வைக்கப்பட்டிருப்பதாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (க-10)

# வீரப்பன் கொலை செய்யப்பட்ட சம்பவம்: ஆறு பொலீஸ் அதிகாரிகள் வாக்குமூலம்

சந்தன மரக்கடத்தல் வீரப்பனும் அவனது சகாக்களும் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து அதிரடிப்படையைச் சேர்ந்த ஆறு பொலீஸ் அதிகாரிகள் நேற்றுமுன்தினம் வாக்குமூலம் அளித்துள்ளனர்.

வீரப்பனையும் அவனது சகாக்களையும் சுட்டுக்கொன்ற அதிரடிப்படைப் பொலீஸ் குழுவில் பங்குகொண்ட ஆறு பொலீஸ் அதிகாரிகளே மேற்படி வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.

இவர்களின் வாக்குமூலத்தையடுத்து வீரப்பன் சுட்டுக்கொலை செய்யப்பட்ட விடயத்தில் நிலவிவரும் மர்மம் நீங்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. வீரப்பனின்கொலை சம்பந்தமாக பொலீஸ் உயர் அதிகாரிகள் பலர் வாக்குமூலம் அளித்துள்ளனர். அத்தோடு, வீரப்பனின் மனைவி முத்துலட்சுமி உட்பட 10 உறவினர்களும் வாக்குமூலம் அளித்துள்ளனர்.

இவ்விரு தரப்பினரும் வழங்கியுள்ள வாக்குமூலங்கள் எதிர்மறையானவையாக உள்ளன. இதனடிப்படையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. - என்று வீரப்பன் சுட்டுக கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பிரகாஷ் தெரிவித்தார். (க-10)

# தமது அரசு கவிழாமல் காக்க இஸ்ரேல் பிரதமர் தீவிர முயற்சி

இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோன் ஆட்டம் காணும் நிலையில் இருக்கும் தமது அரசு கவிழ்ந்து விடாமல் இருக்கும் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றார்.

நாடாளுமன்றத்தில் ஏரியல் ஷெரோனின் அரசு முன்வைத்த வரவு - செலவுத் திட்டம் தோல்வியடைந்ததையடுத்து, ஆளும் கூட்டணியின் பிரதான பங்காளியான ஷினூயி கட்சியை நீக்கியதன் விளைவாகவே இந்நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஷினூயிக் கட்சி வரவு -செலவுத் திட்ட யோசனைக்கு எதிராக வாக்களித்தது. இதனையடுத்தே அக்கட்சியை கூட்டணியில் இருந்து நீக்கினார் ஷெரோன். இப்போது தொழிற்கட்சியின் ஆதரவைக் கோரும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். கூட்டணி அமைக்கும் தொடர்பான புதிய பேச்சுக்களை ஷெரோன் ஆரம்பிக்கலாம் எனத் தெரிகிறது. இஸ்ரேலியப் பிரதமர் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் பதவியேற்றார். தமது பதவிக்காலத்தில் ஷெரோன் எதிர்கொள்ளும் மிக முக்கியமான சவால் இதுவெனெ தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-10)

# ரஷ்ய ஜனாதிபதி இந்தியா விஜயம்!

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் இன்று இந்தியாவுக்குச் செல்கிறார்.

எரிபொருள் அணுசக்தித் துறைகளில் ஒத்துழைப்பைப் பலப்படுத்தி இந்திய இராணுவத் தளபாடச் சந்தையில் தமக்கு இருக்கும் பங்கைத் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்வதுவே புடின் விஜயத்தின் நோக்கம் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்தியாவில் இரு நாள்கள் தங்கியிருக்கும் புடின் கடந்த சில ஆண்டுகளாக நலிவடைந்து காணப்பட்ட கேந்திர ரீதியான உறவுகளைப் புதுப்பித்துக் கொள்ளும் முயற்சிகளில் ஈடுபடுவார் என எதிர்பாக்கப்படுகிறது. இந்தியாவுடன் ரஷ்யா செய்துகொண்ட பாதுகாப்புத் தொழில்நுட்பம் தொடர்பான இரகசிய உடன்படிக்கையிலும் புடின கைச்சாத்திடலாம் என விமர்சகர்கள் கூறுகின்றனர். இவரது இந்திய விஜயம் முக்கியத்துவம் வாய்ந்தவொன்றாகக் கருதப்படுகிறது. இன்று காலை வேளையில் புடின் தலைநகர் மொஸ்கோவிலிருந்து விசேட விமானம் மூலம் புறப்படுகிறார்.

# ஐ.நா. சபையில் ஊழல் மோசடிகள் இடம்பெற்றதாக அமெ. குற்றச்சாட்டு

## அங்கத்துவ நாடுகள் பல அதிருப்தி

நியூயோர்க்,டிசெ.3

ஐக்கிய நாடுகள் சபையில் ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

அமெரிக்கா தெரிவித்திருக்கும் இக்குற்றச்சாட்டுத் தொடர்பாக ஐநாவில் அங்கம் வகிக்கும பல நாடுகள் அதிருப்தி வெளியிட்டுள்ளன.

உலக அரங்கில்

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையின் மறுசீரமைப்புக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட ஆர்ஜென்ரீனா, அல்ஜீரியா, கொலம்பியா, எகிப்து, இத்தாலி, மொரோக்கோ மற்றும் பாகிஸ்தான் உட்பட பல நாடுகள் ஐ.நா.செயலாளர் கோபி அனானுக்கு ஆதரவாகக் குரலெழுப்பின.

எந்தவித அடிப்படையும் இன்றி அமெரிக்கா கோபி அனான் மீது குற்றம் சாட்டியுள்ளதாகக் குறிப்பிட்ட நாடுகளின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையில் இடம்பெற்றுள்ள ஊழல் மோசடிகள் தொடர்பாக கோபி அனான் பெறுப்பேற்கவேண்டும் என்று அமெரிக்கா கேட்டுள்ளது. (க-10)

# பலஸ்தீனத் தேர்தலைப் புறக்கணிக்குமாறு ஆதரவாளர்களுக்கு ஹமாஸ் வேண்டுகோள்

காஸா,டிசெ.3

பலஸ்தீனத்தின் அடுத்த ஆண்டு ஜனவரியில் நடைபெறவுள்ள தேர்தலைப் புறக்கணிக்குமாறு ஹமாஸ் போராட்ட இயக்கம் தமது ஆதரவாளர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

1993 ஆம் ஆண்டு பலஸ்தீன - இஸ்ரேல் தலைவர்களிடையே கையொப்பமிடப்பட்ட ஒஸ்லோ உடன்படிக்கையில் ஹமாஸ் இயக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு அமைப்பாகக் கருதப்படவில்லை.

எனவே, ஒஸ்லோ ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட பலஸ்தீன நிர்வாகம் சட்டவிரோதமானது என ஹமாஸ் தெரிவித்து வருகிறது.

நடைபெறவுள்ள தேர்தலை ஹமாஸ் அமைப்பின் ஆதரவாளர்கள் புறக்கணித்தால் அல் - பதாஹ் அமைப்பின் சார்பில் இத்தேர்தலில் போட்டியிடும் முன்னாள் பிரதமர் மஹ்மூத் அப்பாஸ் பெரும்பான்மைப் பலம் பெற்று வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளன என்று அங்குள்ள செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை - குறிப்பிடத்தக்க அளவில் இத்தேர்தலில் வாக்களிப்போரின் எண்ணிக்கை குறைவாக இருந்தால் அப்பாஸிற்கு கிடைக்கும் மக்கள் ஆதரவும் குறைவாகவே மதிப்பிடப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மார்வன் பர்கோதி தேர்தலில் போட்டியிடுவார் என அறிவித்திருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. (க-10)

உங்கள் எதிர்காலத்தை நீங்களே நிர்ணயிக்க...

"பட்டப்படிப்பிற்கான வழிகாட்டல் கருத்தரங்கு"

உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமானதாக மாற்ற விரும்பும் பெற்றோர்களே நீங்களும் கலந்து கொள்ளுங்கள்




*வடமராட்சியில*
காலம் - 07.12.2004
இடம் - நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்
நேரம் - பி.பகல் 3.30 மணி முதல் 5.30மணி வரை

*யாழ்ப்பாணத்தில்*
காலம் - 09.12.2004
இடம் - நாவலர் மண்டபம்
நேரம் - பி.பகல் 3.30 மணி முதல் 5.30மணி வரை

**Dr.M.G.R.**
**Deemed University**

OFFSHORE CAMPUS INFORMATION AND ADMISSION CENTRE

No.195, Navalar Road, Jaffna,
T.P.: 021-222 2840

(சி39455) Graphics


## முன்பள்ளி ஆசிரியர் கலந்துரையாடல

யாழ்ப்பாணம்,டிசெ.3

தென்மராட்சி முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் தென்மராட்சிக் கல்விவலய அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு தென்மராட்சி வலய முன்பள்ளி உதவிக்கல்வி பணிப்பாளர் சு.பாக்கியராசா கேட்டுள்ளார். (10-202)

## ஆண்டு நிறைவும் பரிசளிப்பும்

மூளாய் றெமிங்ரன் கல்வி வளர்சோலையின் 30 ஆவது ஆண்டு நிறைவும், பரிசளிப்பும், மலர்வெளியீடும் நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 8மணிக்கு மூளாய் பிரசாத் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

சி.ஸ்கந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும், சிறப்பு விருந்தினராக தேசிய கல்வியியற்கல்லூரியின் உப பீடாதிபதி பா.தனபாலனும், கௌரவிருந்தினராக சங்கானை அரசியல்துறைப் பொறுப்பாளர் அ.அன்பும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் 'றெமிங்ரன் தீபம்' என்னும் மலர் வெளியீடும் இடம்பெறவுள்ளது. தொடர்ந்து சிறப்புரைகளும் இசைகானமும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (10-202-28)

## பகிரங்க ஏல விற்பனை

"யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபருக்கான வதிவிடத்திலுள்ள (பழைய பூங்கா) பட்ட மலை வேம்பு - 04, முதிரை மரம் 01 என்பன 2004-12-18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

இந்த ஏல விற்பனையில் குறிப்பிட்ட மரத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் அன்றையதினமே அவற்றுக்குரிய பணத்தைச் செலுத்தி ஒரு வாரத்தினுள் மரங்களைப் பழைய பூங்கா வளாகத்திலிருந்து அகற்றுதல்வேண்டும்.

மேற்படி மரங்களைப் பார்வையிட விரும்புபவர்கள் யாழ். மாவட்டச் செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தருடன் தொடர்புகொண்டு பார்வையிடலாம்.

செ.பத்மநாதன்
(சி-39458)(34-14-45) அரச அதிபர், யாழ். மாவட்டம்.


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 2070248 இலிருந்து 2088236 வரை

சீட்டிழுப்பு இல. 1561
திகதி 1.12.2004

வெற்றி எண்கள்
**08 13 15 22 51**

போனஸ் எண் **45**

ஜக்பொட் பரிசு ரூபா.16,26,900/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்த பரிசுத்தொகை |
|---|---|---|---|
| 5 | - | 16,26,900/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 02 | 1,00,000/- | 2,00,000/- |
| 4 | 104 | 10,000/- | 10,40,000/- |
| 3 | 5,557 | 500/- | 27,78,500/- |
| 2 | 94,080 | 20/- | 18,81,600/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 08ம் எண் (போனஸ் எண் தவிர்ந்து) | 1,14,887 | 10/- | 11,48,870/- |

இந்த சனிக்கிழமை ஜக்பொட் **Rs. 25,18,700/-**

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ.75,48,970/-

தொடர் இல. 3003205 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுக்கள் 2004 டிசம்பர் 4 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

சனிக்கிழமை அதிர்ஷ்டச் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகை, தையல் இயந்திரம் மற்றும் ஸைக்கிளை வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2071607-4-53
2084895-3-69
2074986-9-01
2071094-4-56
2072389-8-46

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.



இளம் படைப்பாளிகளிற்கான திறன் வெளிக்கொணர் போட்டிகள்
யாருக்கு?
எங்கே?? எப்போது???
(விவரங்கள் நாளைய பத்திரிகையின் இப்பகுதியில் இடம்பெறும்)
(சி-39452)


## யாழ்.Y.M.C.A. சிற்றுண்டிச்சாலை

2005 ஆம் ஆண்டிற்கான
(01-02-2005 - 31-12-2005)

**கேள்விக் கோரிக்கை**

யாழ். Y.M.C.A. சிற்றுண்டிச்சாலை குத்தகைக்குக் கொடுக்க கேள்விக்கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

முடிவு திகதி: 15-12-2004

கோரிக்கைகள் அனுப்பவேண்டிய முகவரி
பொதுச்செயலாளர், Y.M.C.A. JAFFNA
109, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

- பொதுச்செயலாளர்.

(சி-39449) (26-14-15)

## 31ம் நாள் நினைவஞ்சலி



திருமதி. யோகராஜா சத்தியதேவி
(சத்தி)

மொட்டாக 22.04.1946 | சருகாக 04.11.2004

திதி : 04.12.2004

நாட்கள் முப்பத்தொன்று கடந்தாலும்
ஆறாதெம் துயர்.
என்புதோல் தந்தெம்மை உலகுக்கு
ஈந்தவளே!
நீண்டதோர் பாசம் ஊட்டி எம்முடன்
உறைந்த தாயே!
வறுமைகள் வந்தபோதும் எம்மை
வாடாமல் காத்தவளே!
வசதிகள் வந்தபோது எம்மை வாட
விட்டுச்சென்றதேனோ!

உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் பிரார்த்திக்கும்

கணவர் :- அ. யோகராஜா
பிள்ளைகள் :- யோ. தீபராஜா (லண்டன்), திருமதி செ.சங்கீத்தா
மருமகன் :- செ.செல்வரஞ்சன்
பேரப்பிள்ளை :- செ. துஷாலினி

15ம் கட்டை
உடுப்பிட்டி
T.P. 0712-541917

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நம

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**சின்னத்தம்பி கனகம்மா**

தோற்றம் 14-05-1926 | மறைவு 08-12-1998

திதி: அபரபக்க சஷ்டி 03-12-2004
வெள்ளிக்கிழமை

ஆறு ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
நீங்கள் எங்கள் மீது வைத்த பாசமும்
அன்பும் எங்களை விட்டு நீங்காதம்மா
என்றும் உங்கள் நினைவின் நிழலின் இருக்கும்.

சி.முருகமூர்த்தி,
முருகன் இரும்புத் தொழிற்சாலை,
அன்ட் மணப்பந்தல், மீசாலை.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(39206)(26-34-11-45)

## கண்ணீர் அஞ்சலி

*பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பயிற்றப்பட்ட கணித ஆசிரியை*
**க.விஜயகுமாரி**

அவர்களின் மறைவால் நாம் துயரமடைகின்றோம். அவரது பிரிவால் ஆறாத்துயரில் ஆழ்ந்துள்ள அன்புக் கணவர் மற்றும் அவரது குடும்பத்தினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

*பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை*
*2002 /2003 கணிதப் பிரிவு.*

(39211)(34-11-45)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றும் திருமதி *நகுலானந்தரூபி தவசீலன்* அவர்களது தந்தை

திரு. **நாகலிங்கம் கந்தசாமி**

அவர்களது மறைவையொட்டி துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அன்னாரது குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

(சி-39447)(34-11-45)

## மரண அறிவித்தல்



**தம்பிப்பிள்ளை தவராஜா**
(முன்னாள் ஊழியர், பெற்றோலியக் கூட்டுத்தாபனம்)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை தவராஜா 01.12.2004 புதன்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

3 ஆம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.

தகவல்:
மச்சான்மார், மருமக்கள்.

(39213)(34-14-15)


# சர்வதேச எய்ட்ஸ் தினமும் கொடிவாரமும்

உங்கள் பங்களிப்பை நல்கிவிட்டீர்களா?
எய்ட்ஸ் கொடிவாரம் தொடர்கிறது. எய்ட்ஸ் இல்லா சமுதாயம் காண எல்லோரும் ஒன்றிணைவோம்!

TRRO Ltd (சி39450) (34-11-45) FORUT UNHCR

## உதயன்

# யுத்தத்தை நோக்கி நகர்கின்றது நாடு

இனி அடுத்தது என்ன?

மீண்டும் யுத்தமா?

இதுதான் இலங்கையர் பலரின் மனதையும் இப்போது அரிக்கும் கேள்வி.

பொறுமையின் எல்லைக் கோட்டிலிருந்து தாம் விடுக்கும் அவசர அழைப்பு என்று தெரிவித்து விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் முன்வைத்த கோரிக்கையை அப்படியே நிராகரித்து விட்டது இலங்கை அரசு.

அப்படி இலங்கைஅரசு தமது கோரிக்கையை நிராகரித்தால் அடுத்தது என்ன என்பதையும் தமது வேண்டுகோளில் தலைவர் பிரபாகரன் முன்கூட்டியே தெளிவுபடுத்தியிருந்தார். அதுவே அடுத்ததாகப் போகின்றது. அது தவிர்க்க முடியாதது.

"பொறுமைக்கும் எதிர்பார்ப்புக்கும் எல்லைக்கோடுகள் உள்ளன. அந்த எல்லைக் கோடுகளை நாம் அடைந்து விட்டோம். இந்த நெருக்கடியான சூழ்நிலையில் ஸ்ரீலங்கா அரசுக்கு நாம் அவசரமான அழைப்பு ஒன்றை விடுக்க விரும்புகின்றோம். அதாவது, நாம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தின் அடிப்படையில், நிபந்தனையற்ற முறையில், காலம் தாமதிக்காது, பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு வேண்டுகோள் விடுக்கிறோம். எமது இந்த அவசர வேண்டுகோளை நிராகரித்து, காலத்தை இழுத்தடித்து, எமது மக்களின் துயரவாழ்வை நீடித்துச் செல்ல சிங்கள அரசு முற்படுமானால் நாம் எமது தேசத்தின் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதைத் தவிர வேறு வழியில்லை."

- இப்படி தமது மாவீரர் தின உரையில் முத்தாய்ப்பாய்க் குறிப்பிட்டிருந்தார் பிரபாகரன். அந்த உரையின் அடிப்படை சாராம்சமாக - மூலக் கருத்தாக - அமைந்தது இது தான்.

இலங்கை அரசிடம் அவர் விடுத்த வேண்டுகோளுக்கு பதில் தருவதுபோல - தனது பிரதிபலிப்பை வெளிப்படுத்துவது போல - அரசுத் தரப்பும் தனது நிலைப்பாட்டை ஓர் அறிக்கை மூலம் வெளிப்படுத்தியிருக்கின்றது.

தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரையில் குறிப்பிடப்பட்ட விவகாரம், அரசுத் தரப்பு தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியது போன்று மிரட்டல் தொனியில் அமைந்திருக்கலாம். அதை மறுப்பதற்கில்லை. ஆனால், யதார்த்த நிலைமை அவ்வளவு கடுமையாக இருப்பதால், அதை வெளிப்படுத்துவதற்கு அத்தகைய நாசூக்கான பாங்கை அவர் கையாள்வதை எப்படித் தப்பு என்று கூற முடியும்?

பிரபாகரனின் கோரிக்கைக்குப் பதிலாக அரசுத் தரப்பு வெளியிட்ட அறிக்கை, பிரபாகரனின் கோரிக்கையை அரசு நிராகரிக்கின்றது எனத் திட்டவட்டமாகத் தெரிவிக்கவில்லை. ஆனால், அதன் அர்த்தம் - அந்த அறிக்கையின் வரிகளுக்கு இடையில் எழுதப்படாமல் பொதிந்துள்ள அம்சம் - அந்த நிராகரிப்புத்தான் என்பது தெளிவு.

தமது கோரிக்கையை இலங்கை அரசு நிராகரித்தால், அடுத்தது என்ன என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார் விடுதலைப் புலிகளின் தலைவர். அதையும் பொறுமையின் எல்லைக் கோட்டில் நின்று தாம் உரைக்கின்றார் என அவர் கூறியிருப்பதில் அர்த்தங்கள் ஆயிரம் பொதிந்துள்ளன.

எனவே,புலிகளின் இந்தக் கோரிக்கையை அப்பட்டமாக நிராகரித்ததன் மூலம், புலிகளை, அவர்களின் தலைவர் கூறியபடி போராட்டத்தை முன்னெடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்குத் தள்ளி விட்டுள்ளது அரசு.

அமைதி முயற்சி விவகாரம் தொடர்பான அம்சத்தில் தமது மாவீரர் தின உரை மூலம் பந்தை அரசின் களத்துக்குள் அனுப்பினார் புலிகளின் தலைவர்.

அந்த உரையில் அவர் குறிப்பிட்ட அம்சத்தை அப்படியே நிராகரித்ததன் வாயிலாக அந்தப் பந்தை திருப்பி புலிகளின் களத்துக்குள் அடித்து விட்டிருக்கிறது அரசு.

இப்போது மீண்டும் பந்தைக்கையாளவேண்டிய - விளையாடவேண்டிய - பொறுப்பு விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

அதைப் புலிகள் எப்படி விளையாடப் போகின்றார்கள்?

மாவீரர் தின உரையில் தலைவர் பிரபாகரன் குறிப்பிட்டது போல சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை. ஆகவே, போரின் திசையில் பந்தை அடிப்பது தான் அவர்களுக்கு உள்ள ஒரே வழியாக இருக்கும்.

அடுத்து வரும் நாள்களில் - அல்லது வாரங்களில் - ஏதேனும் திடீர் நிலைமாற்றங்கள் ஏற்பட்டாலன்றி -

அரச நிலைப்பாட்டில் மாற்றங்கள் நேர்ந்து, போக்குகள் மாறினாலேயேயொழிய -

நாடு யுத்தத்தில் மீண்டும் மூழ்குவதை யாராலும் தடுக்க முடியாமல் போகும் என்பது தவிர்க்க முடியாததாகி வருகின்றது.

மீண்டும் யுத்தம் வெடிக்காது என்ற நப்பாசையில் மூழ்கிக்கிடப்பது பகல் கனவாகவே போய் முடியும் என்றே அரசியல் கள நிலைவரங்க்ள் எடுத்தியம்புகின்றன.

# தப்பியோடிய கைதிகளில் இரண்டாவது நபரும் சிக்கினார்

கரவெட்டி,டிசெ.3

பருத்தித்துறை நீதிமன்றத்துக்கு அருகே வைத்துப் பொலீஸாரின் பிடியிலிருந்து தப்பி ஓடிய கைதிகளில் இரண்டாவது நபரும் சிக்கினார்.

சீக்கியன் என்று அழைக்கப்படுபவரும், வடமராட்சிப் பகுதியில் இடம்பெற்ற பல கொள்ளைகள், திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபருமான இவரை நெல்லியடிப் பொலீஸார், துன்னாலையில் உள்ள அவரது வீட்டில் வைத்து செவ்வாயன்று மாலை மடக்கிப் பிடித்தனர். அவரிடமிருந்து பெருந்தொகைப் பணத்தையும் மீட்டனர்.

சீக்கியன் தலைமையிலான கொள்ளைக் கோஷ்டி கடந்த சில மாதங்களுக்கு முன்பு பல கொள்ளைகளில் ஈடுபட்டது. யார்க்கரு பகுதியில் வெளிநாட்டிலிருந்து திரும்பிய ஒருவரது வீட்டில் எட்டு லட்சம் ரூபா பணம் மற்றும் வெளிநாட்டு காசோலைகள், இலத்திரனியல் சாதனங்களை இக்குழுவினரே கொள்ளையிட்டிருந்தனர் என்று சந்தேகிக்கப்பட்டது. பின்னர் இந்தக் கொள்ளை தொடர்பாக சீக்கியனையும் அவரது சகாவான சுமன், என்பவரையும் பொலீ ஸார் கைது செய்திருந்தனர்.

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர்கள் கடந்த 20 ஆம் திகதி நீதிமன்ற விசாரணைக்காக வாகனத்தில கொண்டுசெல்லப்பட்ட சமயம் இருவரும் தப்பி ஓடினர். பின்னர் சுமன் மீண்டும் பிடிபட்டு சிறையிலடைக்கப்பட்டார்.

தப்பித் தலைமறைவான சீக்கியனை பொலீஸார் வலை விரித்துத் தேடி வந்தனர்.

யாழ் உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் லக்ஸ்மன் குரோலின் ஆலோசனைப்படி நெல்லியடிப் பொலீஸ் பொறுப்பதிகாரி பொ.ப. ஜெயசிங்க, சார்ஜன்ட்களான வரதராசா, ரட்நாயக்கா, ஜெயசேகரா மற்றும் சுமணதாச, சாந்த, ஜோன்சன், சுகிந்த, தர்மப்பிரிய ஆகியோர் அடங்கிய பொலீஸ்படை கடந்த செவ்வாயன்று சீக்கியனின் வீட்டைச் சுற்றி வளைத்து அவரைக் கைது செய்தது.

சீக்கியன் தப்பி ஓடிய பின்பு 3 லட்சம் ரூபா பெறுமதியான நகை, பணம் என்பவற்றைத் திருடியிருப்பது தற்போதைய விசாரணையின் போது தெரியவந்துள்ளது. இதுவரை சீக்கியன் திருடிய பொருள்களை ஒளித்து வைத்திருக்கும் இடம்பற்றியும் தகவல் கிடைத்திருப்பதாகப் பொலீஸார் தெரிவித்தனர். (ஜ-70-202-13)

### தென்மராட்சிப் பிரதேசத்தில்

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோரின் விவரங்கள் திரட்டப்படுகின்றன

தென்மராட்சிப் பிரதேசத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டோரின் விவரங்கள் சமூக சேவைகள் திணைக்களத்தினால் திரட்டப்படுகின்றன.

வெள்ளத்தினால் ஏற்பட்ட பயிர்அழிவு, வீடு இழப்பு, இடம்பெயர்ந்தோர் ஆகிய விவரங்கள் இவ்வாறு திரட்டப்படுகின்றன.

இதற்குரிய படிவங்கள் அந்தந்தப் பிரிவு கிராம அலுவலர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும், பாதிக்கப்பட்ட மக்கள் தத்தமது பிரிவு கிராம அலுவலரிடம் உரிய படிவத்தினைப் பெற்று விண்ணப்பிக்குமாறும் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

(10-117)

# இளைஞரைக் காணவில்லை என்று ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு

சுருவில் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரைக் காணவில்லையென்று நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப் பட் டுள்ளது.

ஊர்காவற்றுறை, சுருவிலைச் சேர்ந்த சபாபதி கிருஷாந்தன் (வயது 17) என்ற இளைஞரே காணாமற்போய்விட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 29 ஆம் திகதி ஊர்காவற்றுறையில் இருந்து தங்கிப் படிப்பதற்காக நல்லூர் குறுக்கு வீதியில் உள்ள விடுதிக்குச் சென்ற இளைஞனே இதுவரை வீடு திரும்பவில்லை என்று அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்.பற்றிக் கல்லூரியில் கல்வி கற்ற இவர் இரண்டாம் தடவையாக இம்முறை ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சையில் தோற்றுவதற்காக யாழ் நகரிலுள்ள தனியார் கல்வி நிறுவனத்தில் கல்வி கற்று வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (10-13)

# வலி.வடக்கு பிரதேச அபிவிருத்திக்கு 10 லட்சத்து 25ஆயிரம் ரூபாஒதுக்கீடு

வலி.தெற்கு,டிசெ.3

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் வலிகாமம் வடக்கு பிரதேச அபிவிருத்திக்கென இவ்வருடம்பத்து லட்சத்து இருபத்தையாயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலையின் கட்டடத் திருத்த வேலைகள், வசாவிளான் மத்திய மகா வித்தியாலய அபிவிருத்தி வேலைகள் என்பன உட்பட பல அபிவிருத்தித்திட்டங்கள் இந்நிதியைக் கொண்டு முன்னெடுக்கப்படவுள்ளன.

மேலும், சனசமூக நிலையங்களின் திருத்தவேலைகள், புத்தகங்கள் கொள்வனவு, தளபாடங்கள் கொள்வனவு மற்றும் சனசமூக நிலையங்களில் மலசல கூடங்கள் அமைத்தல், கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு தையல் இயந்திரம் வழங்கல், விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல் போன்ற செயல் திட்டங்களுக்கு இந்நிதி பகிர்ந்தளிக்கப்படவுள்ளது. (10-152)

### வடமராட்சி கிழக்கில்

# கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகம் அமைத்துத் தருமாறு கோரிக்கை

செம்பியன்பற்று,டிசெ.3

வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகம் ஒன்றை அமைத்துத் தருமாறு மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் வாழும் கால்நடை வளர்ப்போர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் "பட்டி"யாக பெருமளவில் கால்நடைகளை வளர்ப்போர் அதிகம் பேர் உள்ளனர். இவற்றிற்கான மருத்துவ வசதி இன்மையால் தொற்று நோய்கள் பரவும் போது ஏராளமான கால்நடைகள் இறக்க நேரிடுகின்றது.

அத்துடன் கோழி வளர்ப்போரும் அதிகமாகவுள்ளனர். பருத்தித்துறைக்கோ, சாவகச்சேரிக்கோ, கிளிநொச்சிக்கோ சென்றுதான் கால்நடைகளின் நோயைக் குணமாக்க வேண்டிய நிலையில் இவர்கள் உள்ளனர்.

இதனால் வீண் செலவுகளும் அலைச்சலும் ஏற்படுவதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இப்பகுதிக்கு கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகம் ஒன்றினை நிறுவி வைத்தியரை நியமிக்குமாறு சம்பந்தப்பட்டவர்களை இப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (10-36)

# ஒழுக்காற்று விசாரணை அலுவலர்களின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம்,டிசெ.3

நாடளாவிய ரீதியில் ஒழுக்காற்று விசாரணை அலுவலர்களது விவரங்களை அரச நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எஸ்.சி.மன்னப்பெரும வெளியிட்டுள்ளார்.

விசாரணை அலுவலர்களாகத் தற்போது கடமையில் உள்ள உயரதிகாரிகளும் ஓய்வுபெற்ற அரச நிர்வாக அதிகாரிகள் உட்பட 69 பேரும் இதில் அடங்கியுள்ளனர். இதில் 2 தமிழர்களுக்கு மட்டுமே வடக்கு - கிழக்குப் பகுதியில் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ஒழுக்காற்று விசாரணை அலுவலர்களாக நியமிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு அதிகாரிகளின் விவரம் வருமாறு:

எஸ்.சந்தான கிருஸ்ண ஐயர்,123, காலி வீதி, பம்பலப்பிட்டிய, கொழும்பு - 04. எஸ்.அமிர்தலிங்கம், செயலாளர், வடக்கு - கிழக்கு மாகாணசபை,திருகோணமலை.

(10-185)

# அதிபர் நியமனத்தை மாகாணசபையிடம் ஒப்படைக்கக் கல்வியமைச்சு யோசனை

யாழ்ப்பாணம்,டிசெ.3

நாட்டிலுள்ள 1ஏபி, 1சி தரப் பாடசாலைகளில் நிலவும் அதிபர் பதவிக்கான வெற்றிடங்களை நிரப்பும் அதிகாரத்தை மாகாண சபைகளிடம் ஒப்படைக்க கல்வியமைச்சு திட்டமிட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பாடசாலைகளுக்கு அதிபர் நியமனங்களை வழங்குவதற்குப் பலத்த தாமதம் நிலவி வருவதால், மத்திய அமைச்சிடமிருந்து நியமன அதிகாரத்தை மாகாண சபைகளிடம் ஒப்படைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டிலுள்ள 84 தேசியப் பாடசாலைகளில் நிலவும் அதிபர் பதவிக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தற்போது நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன.

தேசியப் பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்கள் ஓய்வுபெறும் போது பொருத்தமான அதிபரை நியமிக்கத் தற்போது தகுதியானவர்களை இனங்காணும் பணியும் நடைபெற்று வருகின்றது.

(10-204)

### நாளை

*கார்த்திகை 19*
*சனிக்கிழமை*
*(04.12.2004)*
*திதி: ஸப்தமி*
*பிற்பகல் 02.12*
*நட்சத்திரம்: மகம்*
*பிற்பகல் 03.57*
*சுபநேரம்: 03.16 - 04.46*
*ராகுகாலம்: 09.16 - 10.46*
*(பழையநேரப்படி)*

# தொலைத்தொடர்புக் கோபுரங்களின் திறப்புவிழா பிற்போடப்பட்டுள்ளது

## 'ரெலிக்கொம்' யாழ்.முகாமையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.3

ஸ்ரீலங்கா 'ரெலிக்கொம்' நிறுவனத்தினால் புதிதாக அமைக்கப்பட்ட தொலைத் தொடர்பு கோபுரங்களின் திறப்பு விழாக்கள் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா 'ரெலிக் கொம்' நிறுவனத்தின் யாழ்.கிளை முகாமையாளர் என்.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நிர்மாணிக்கப்பட்ட கோபுரம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30மணிக்கும் யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கோபுரம் இன்று மாலை 4 மணிக்கும் திறந்து வைக்கப்படவிருந்தன. ஆனால் தவிர்க்கமுடியாத காரணத்தால் விழாக்கள் பிற்போடப்பட்டுள்ளன.

இதுவரை மன்னார் ஊடாக மட்டும் பெறப்பட்டு வந்த தகவல் பரிமாற்றங்கள், புதிய கோபுரம் அமைக்கப்பட்ட பின் கிளிநொச்சி ஊடாகவும் பெறப்படும். இதன் மூலம் இரண்டு பாதைச் சேவையாகத் தொலைத் தொடர்புகள் விரிவாக்கம் பெறவுள்ளன.

இதன் மூலம் ரெலிக்கொமின் சேவைத் தரம் அதிகரிப்பதுடன், இலகுவாகப் பாவனையாளர்கள் தொலைத் தொடர்புகளை உடனுக்குடன் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் எனவும் தற்போது அவசரத் தேவைகளுக்கு மட்டும் புதிய தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோபுரங்கள் திறக்கப்படுவது தொடர்பாகப் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(10-12-202-6)

### உதயவாக்கு

*மனதை வெற்றிகொண்டால் உலகத்தை வெற்றிகொள்ளலாம்.*

# மாவீரர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.3

மாவீரர் தினத்தை முன்னிட்டு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் கடந்த 25ஆம் திகதி மாவீரர் தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் பொதுச் சுடரினை கல்லூரியின் உப பீடாதிபதி எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைப் பொறுப்பாளர் ந.கண்ணன் ஏற்றிவைத்தார். முதல் மாவீரர் சங்கரின் உருவப்படத்திற்கு உப பீடாதிபதி பா.தனபாலன் மலர்மாலை அணிவித்தார்.

தொடர்ந்து மலர் வணக்கமும் நினைவுரைகளும் இடம்பெற்றன. (10-202)

★ ★ ★

யாழ்ப்பாணம்,டிசெ.3

மாவீரர் தினத்தை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழகத்தில் கடந்த 25ஆம் திகதி மாவீரர் தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.செல்வக்குமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொதுச் சுடரினை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ்ும், ஈகச் சுடரினை யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் அருள்வேல், கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், வணிக முகாமைத்துவ பீடாதிபதி நடராஜசுந்தரம், பேராசிரியர் வி.பி.சிவநாதன் ஆகியோரும் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியினை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைப் பொறுப்பாளர் ந.கண்ணன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து மலர் அஞ்சலியும், நினைவுரைகளும் இடம்பெற்றன.

(10-202)

★ ★ ★

மாதகல்,டிசெ.3

மாவீரர் தினத்தை முன்னிட்டு இளவாலைப் பிரதேச மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு கடந்த மாதம் 23ஆம் திகதி இளவாலை புனித யூதாததேயு சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது.

சனசமூக நிலையத் தலைவர் எம்.லூயிஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொதுச் சுடரினை சண்டிலிப்பாய் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் இன்பன், மாதகல் வலய அரசியல் துறைப்பொறுப்பாளர் ரமேஸ் ஆகியோர் ஏற்றினர். ஈகச்சுடரினை மாவீரர்களின் பெற்றோர் ஏற்றினர்.

சிறப்புரைகளைத் தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர்களுக்கு தென்னங்கன்றுகளும் அன்பளிப்புப் பொருள்களும் வழங்கப்பட்டன. தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

(10-95-202)

★ ★ ★

வேலணை,டிசெ.3

வேலணை பிரதேசத்திற்குட்பட்ட மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு கடந்த மாதம் 23ஆம் திகதி வேலணை கிழக்கு மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

வேலணை பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ம.அம்பிகைபாகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தீவக கோட்ட மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் சிவா பொதுச் சுடரினையும், வேலணை பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் யாழ்நம்பி தேசியக் கொடியினையும் ஏற்றி வைத்தனர்.

60இற்கும் மேற்பட்ட மாவீரர்களின் உருவப் படங்கள் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் மாவீரர் பெற்றோர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

மாவீரர்தினச் சிறப்புரைகளை வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன், வேலணை ம.ம.வி. அதிபர் பொ.அருணகிரிநாதன், ஊர்காவற்றுறை பிரதேசப் பொறுப்பாளர் ரதன் ஆகியோர் நிகழ்த்தினர்.

(10-204)

★ ★ ★

வலி.தென்மேற்கு,டிசெ.3

மாவீரர்எழுச்சி வாரத்தை முன்னிட்டு வலி. மேற்கு அரசியல்துறை பிரிவில் மாவீரர் பெற்றோர்கள் கௌரவிப்பு கடந்த வாரம் பல்வேறு இடங்களிலும் பொது அமைப்புக்களால நடத்தப்பட்டன.

அராலி வடக்கு சனசமூக நிலையம், சங்கானை உருத்திரா சனசமூக நிலையம், சங்கானை மேற்கு விழிசிட்டி சனசமூக நிலையம் அகியவற்றில் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு இடம்பெற்றது.

இதேவேளை வலிமேற்கு சிகை அலங்கரிப்பாளர் சங்கம் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடத்திய மாவீரர்கள் பெற்றோர்கள் கௌரவிப்பில் இப்பிரிவில் உள்ள நூற்றுக்கணக்கான மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

(8-135)

★ ★ ★

யாழ்ப்பாணம்,டிசெ.3

மாவீரர் தினத்தை முன்னிட்டு மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த வாரம் யாழ்.சுகாதாரத் தொண்டர்களின் ஏற்பாட்டில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் இடம்பெற்றது.

யாழ். மாவட்ட சுகாதாரத் தொண்டர்கள் சங்கத் தலைவர் ஜெ.ரவிச்சந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன், பொதுச்சுகாதார பரிசோதகர் எஸ்.விஜயகுமார் மற்றும் பலர் கருத்துரைகளை வழங்கினர். (8-203)

★ ★ ★

யாழ்ப்பாணம்,டிசெ.3

அரியாலை சனசமூக நிலையத்தினரால் மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வு அரியாலை கந்தையா பரமேஸ்வரி ஞாபகார்த்த மண்டபத்தில் எஸ்.கே.விஜயகுமார் தலைமையில் கடந்த மாதம் 26ஆம் திகதி நடைபெற்றது.

இந்நிகழ்வில் அரியாலை சனசமூகநிலைய முன்னாள் தலைவர் ரி.கணநாதன், அபிவிருத்திக் குழுத் தலைவர் எஸ்.ரிபத்மநாதன் ஆகியோரின் உரைகள் இடம்பெற்றன.

தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர்களுக்கு நினைவுப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

(8-203-190)

★ ★ ★

ஒட்டுசுட்டான்,டிசெ.3

ஒட்டுசுட்டான் பிரதேச மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த மாதம் 22ஆம் திகதி கற்சிலைமடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் இடம்பெற்றது.

ஒட்டுசுட்டான் கோட்டப்பொறுப்பாளர் அ.ஈழவன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தேசியக்கொடியினை ஒட்டுசுட்டான் அரசியல் துறைப் பொறுப்பாளர் கதிர் ஏற்றிவைத்தார்.

பொதுச்சுடரினை சாள்ஸ் அன்ரனி படையணிப் பொறுப்பாளர் விமல்நேசனும், ஈகச்சுடரினை ஒட்டுசுட்டான் காவல்துறைப் பொறுப்பாளர் ரவிக்குமாரும் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. (10-341-202)

★ ★ ★

வடமராட்சி,டிசெ.3

மாவீரர்தின நிகழ்வின்போது மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர்களுக்கு மாவீரர்களின் நினைவாக தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன.

கோப்பாய், வடமராட்சி, தென்மராட்சி மற்றும் தீவகம் போன்ற இடங்களில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் மாவீரர் தினத்தன்று நடைபெற்ற நிகழ்வுகளின் போது ஒவ்வொரு நினைவுக்கற்களின் முன்பாகவும் தென்னங்கன்றுகள் வைக்கப்பட்டிருந்தன. நிகழ்வுகள் முடிவடைந்ததும் அவற்றை பெற்றோர், உரித்துடையோர் எடுத்துச்சென்றனர்.

(10-203-173)

★ ★ ★

கிளிநொச்சி,டிசெ.3

கிளிநொச்சி காவல்துறை நடுவப்பணியகத்தில் மாவீரர் தின இறுதிநாள் நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டன. நடுவப்பணியக கண்காணிப்பாளர் சி.மாதவன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச் சுடரினை ஆளணிப்பிரிவுப் பொறுப்பாளர் த.கலையரசனும், தேசியக் கொடியினை காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசனும் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து திருவுருவப்படங்களுக்கு காவல்துறைக்கண்காணிப்பாளரும் பிரதம பரிசோதகருமான சி.குணரட்டணம் மலர்மாலை அணிவித்தார். தொடர்ந்து கருத்துரைகள் பலவும் இடம்பெற்றது.

(10-203)

★ ★ ★

ஒட்டுசுட்டான்,டிசெ.3

மாவீரர் தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு அலைகல்லுப்போட்டகுளம் அ.த.க.பாடசாலையில் கடந்த மாதம் 22ஆம் திகதி மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பு இடம்பெற்றது.

அதிபர் கி.பாலேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் ஈகச்சுடரினை முன்பள்ளி ஆசிரியர் திருமதி ம.ஜெனிதா ஏற்றிவைத்தார். தொடர்ந்து அகவணக்கம், மலர்வணக்கம் என்பன இடம்பெற்றன.

கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

(10-202)

★ ★ ★

யாழ்ப்பாணம்,டிசெ.3

மாவீரர் தினத்தை முன்னிட்டு புங்குடுதீவுப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு கடந்த 22ஆம் திகதி புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

புங்குடுதீவு தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ப.விநாயகமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடகப் பேச்சாளர் ப.கனகலிங்கமும் ஈகச் சுடரினை யாழ். மாவட்ட அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் செம்மணன், மாவீரர் செயற்பாட்டுக் குழுப் பொருளாளர் இ.ரமேஸ், சுப்பிரமணிய மகளிர் வித்தியாலய அதிபர் பஞ்சலிங்கம் ஆகியோரும் ஏற்றினர்.

தேசியக் கொடியை யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து நினைவுரைகள் கலை நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன.


(10-202)

# பொது நிகழ்வுகள்




வட்டக்கச்சி இராமநாதன் ம.வியில் நடைபெற்ற மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் இடம்பெற்ற கவியரங்கில் போராளி ஒருவர் கவிதை வாசிப்பதையும் ஏனைய போராளிகள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

*(படம் : வட்டக்கச்சிச் செய்தியாளர்)*



மானிப்பாய் பரிஷ் லியோக் கழகத்தினர் மானிப்பாய் 'ஆர்க்' சிறுவர் இல்லத்தவர்களுக்கு சமையல் உபகரணங்கள், படுக்கை விரிப்புகள், விளையாட்டு உபகரணங்கள் என்பன வழங்கியபோது எடுக்கப்பட்ட படம். (10-185)




கியூடெக் வேளாண்மியத்தால் கடன் அடிப்படையில் இருபது விவசாயிகளுக்கு தலா 2ஆயிரம் ரூபா அண்மையில் வழங்கப்பட்டது. வேளாண்மியத் தலைவர் எஸ்.என்.உதயகுமார் விவசாயி ஒருவருக்குப் பணம் வழங்குவதையும் அருகில் செயலாளர் எ.யேசுராசா நிற்பதையும் படத்தில் காணலாம்.

*(படம் : மாதகல் செய்தியாளர்)*




வேலணை பிரதேச செயலக சமுர்த்தி வங்கிச் சங்கத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வில் கலந்துகொண்ட விருத்தினர்களையும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களையும் படத்தில் காணலாம். (10)

# நாவலர் பணியை நாமும் தொடர்வோம்: அதுவே அவருக்குச் செய்யும் உபகாரம்

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் குருபூசைத் தினம் நாளை சனிக்கிழமையாகும். அதனை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**

ஈழமணித் திருநாட்டில் இருள்சூழ்ந்து இருந்த இந்து சமயத்திற்கு விடிவெள்ளி போல நாவலர் பெருமான் 1822ஆம் ஆண்டு கந்தப்பிள்ளை - சிவகாமி தம்பதிகளின் புத்திரனாக அவதாரம் செய்தார். பன்னிரண்டாவது வயதுவரை தாய் மொழி, சமயம், அறநெறி சார்ந்த கல்வியினைக் குருகுலக் கல்வி முறையில் பெற்றிருந்தார். இருபாலை சேனாதிராஜா முதலியார் நாவலரின் குருவாக இருந்தார். தனது பன்னிரண்டாவது வயதில் ஆங்கிலக் கல்வியைப் பெறும் நோக்குடன் பேர் சிவல் பாதிரியார் அதிபராக இருந்த உவெஸ்லியன் பாடசாலையில் (யாழ்.மத்திய கல்லூரி) மாணவனாகச் சேர்ந்தார். தனது பத்தொன்பதாவது வயது வரை மாணவனாக இருந்த ஆறுமுகநாவலர் தொடர்ந்து ஏழு வருடங்கள் அதே கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றினார். பதினான்கு வருடங்கள் கிறிஸ்தவ மதச்சூழலில் மாணவனாகவும், ஆசிரியராகவும் கடமையாற்றிய நாவலர் பெருமான் அவர்களுடைய பலத்தையும் பலவீனத்தையும் அறிந்து கொண்டார். ஆங்கிலக் கல்வி என்ற இனிப்புப் பண்டத்தைக் காட்டி நம்மவர்களை மதம் மாற்றும் முயற்சியில் மிஷனரிமார்கள் எவ்வாறு செயற்படுகிறார்கள் என்பதையெல்லாம் அறிந்து கொண்டார்.

சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதற்காக நாவலர் பெருமான் தனது வாழ்வையே பரித்தியாகம் செய்தார். வாழ்வு முழுவதும் நைஷ்டிக பிரமச்சாரியாக இருந்து பணியாற்றினார். "காய்த்த மரம் அது மிக்க கல்லடிபடும்" என்ற சித்த புருஷரின் வாக்கிற்கமைய நாவலர் பெருமான் வாழ்ந்த காலத்தில் அவர் செய்த பணிகளுக்குப் பல்வேறு இடையூறுகளைப் பலரும் செய்தார்கள். தன்னுடைய செயற்பாடுகளுக்குப் பிற சமயத்தவர் தந்த தொல்லையிலும் பார்க்க நம்மவர்கள் தரும் இடையூறே அதிகமாக உள்ளது என நாவலர் பெருமான் தனது கடைசிப் பிரசங்கத்தில் கூறியுள்ளார். தனது வாழ்க்கையில் பல சோதனைகளையும் வேதனைகளையும் சந்தித்த இவர் மனம் தளராது உறுதியுடன் பல சாதனைகளைச் செய்துள்ளார்.



இவர் ஆற்றிய பணிகள் பன்முகப்பட்டவை ஆகும். கல்விப்பணி, சமயப் பிரசங்கப்பணி, நூல்கள் வெளியிடும் பணி, சமுதாயப்பணி எனப் பல நிலைகளில் நின்றும் பணியாற்றிய பெருமை இவரையே சாரும். வாக்காலும் வாழ்வாலும் ஒருமித்து வாழ்ந்த நாவலர் பெருமான் ஓர் உதாரண புருஷராக வாழ்ந்து காட்டினார்.

### பாடசாலைகள் உருவாக்கம்

சைவப் பிள்ளைகள் சைவப் பண்பாட்டுச் சூழலில் கல்விபயில வேண்டும் என்று விரும்பிய நாவலர் பெருமான் 1848ஆம் ஆண்டு ஆவணி மாதம் வண்ணார்பண்ணையில் ஒரு சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவினார். இவருடைய வேண்டுதலை ஏற்ற பல சைவப் பெரியார்கள் ஊர்கள் தோறும் சைவப் பாடசாலைகளை நிறுவினார்கள். சைவ சமயப் பின்னணியில் தாய்மொழிப் பாடசாலைகளும், ஆங்கிலப் பாடசாலைகளும் நமது மண்ணில் உருவாகுவதற்கு வித்திட்ட பெருமை நாவலர் பெருமானையே சாரும்.

இந்துக் கல்விப் பாரம்பரியம் குருகுலக் கல்வி முறையாகவே இருந்து வந்தது. மனனம் செய்யும் முறையே கற்றல் முறையாக இருந்தது. கிடைத்தற்கரிய நூல்கள் பல ஏடுகளிலேயே இருந்தன. மேற்கு நாட்டவர்களும், மிஷனரிமார்களும் அச்சு இயந்திரத்தைப் பயன்படுத்தி நூல்கள் பலவற்றை வெளியிட்டார்கள். நாவலர் பெருமான் இந்தியாவிற்குச் சென்று அச்சு இயந்திரத்தை வாங்கிவந்து தாய்மொழியில் தமிழ், சமயநூல்களை வெளியிட்டார். பழைய நூல்களை அச்சிலே பதிப்பித்தார். பாடநூல்களை எழுதிவெளியிட்டார். பிறசமயத்தவர்கள் வெளியிடும் சைவ தூஷணங்களுக்கு உடனுக்குடன் மறுப்புத்தெரிவித்து துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டார். இக்காலத்தில் நவீன தொழில்நுட்பக் கருவிகளின் துணையுடன் அச்சில் பதிப்பித்து வெளியிடுகின்ற நூல்களில் பிழைதிருத்தம் என ஒரு பக்கம் பிற்சேர்க்கையாகச் சேர்க்க வேண்டியுள்ளது. ஆனால், நாவலர் பெருமானின் பதிப்புகளில் ஒரு பிழையையும் காணமுடியாதிருப்பது மிகச் சிறந்த அம்சம் ஆகும். "செய்யுந் தொழிலே தெய்வம்" என்ற நினைப்போடு தனது கடமைகளை நாவலர்பெருமான் செய்திருந்தார் என்பதை இதனால் அறிய முடிகின்றது.

**ஞானக்கதிர்**

### சைவசமயப் பிரசங்கம்

சைவ ஆலயங்களுக்கு வழிபட வரும் அடியார்களுடைய சிந்தனையிலே தெய்வீக நினைப்பை ஏற்படுத்தவேண்டும் என விரும்பிய நாவலர் பெருமான் சைவப் பிரசங்கம் செய்யும் பணியினை வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் தானே ஆரம்பித்து வைத்தார்.

ஞானதானமாகப் பலன் எதுவும் எதிர்பாராமல் தனது பணியினை முப்பத்தியிரண்டு வருட காலம் செய்துவந்தார்.

இவருடைய நாவன்மையை அறிந்த திருவாவடுதுறை ஆதீனத்தார் இவருக்கு "நாவலர்" பட்டமளித்துக் கௌரவித்தார்கள். சென்ற வருடம் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்பெற்ற நாவலர் குருபூசையில் திருவாவடுதுறை ஆதீன கார்த்தா திருவளர் சிவப்பிரகாச சுவாமிகள் கலந்துகொண்டமை திருவருட்துணையால் ஏற்பட்ட செயலே ஆகும்.

சமூக நீதிக்கு மாறான செயற்பாடுகளை எல்லாம் நாவலர் கண்டித்தார். அநியாயத்திற்கு எதிராகக் குரல் எழுப்பினார். அரச நிர்வாகங்களில் இருக்கும் ஊழல்களை அம்பலப்படுத்தினார். கொடிய பஞ்சமும் கொலரா நோயும் தலைவிரித்தாடிய காலத்தில் அரசால் மக்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணம் உரியவர்களுக்குக் கிடைப்பதற்கு வழிசெய்தார்.

தானே கஞ்சித் தொட்டித் தருமம் நடத்தி ஏழைகளின் பசிப்பிணியைப் போக்கினார்.

ஆலயத்தில் சுவாமி வீதிவலம் வரும்பொழுது சுவாமிக்குப் பின்னால் திருமுறை படிக்கும் மரபை நாவலர் பெருமானே நல்லைக்கந்தன் ஆலயத்தில் ஆரம்பித்து வைத்தார். புராண படன மரபை ஊக்குவித்தார். இவரே கந்தபுராணத்துக்கு நல்லைக் கந்தன் ஆலயத்தில் பயன் சொல்லியிருக்கிறார்.

சைவ மக்களின் கலங்கரை விளக்காகச் சைவ சேனாதிபதியாக, தியாக தீபமாக அருட் செல்வராக எல்லாம் வாழ்ந்த ஆறுமுகநாவலர் பெருமானின் குருபூசை தினத்தில் அவருடைய பணிகளை நினைவு கூருவதோடு தொடர்ந்து சைவப் பெருமக்களாகிய நாம் அனைவரும் அவர் காட்டிய வழியில் நின்று செயற்பட்டுச் சைவத்தையும் தமிழையும் இந்த மண்ணில் வாழவைப்போம் என்று உறுதி கொண்டு செயற்படுவோமாக.

**சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்,**
உதவிப் பணிப்பாளர்,
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

# தமிழ் மந்திரமான திருமந்திரத்துக்கு பெருமைசேர்த்த இணுவில் மாநாடு

**இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் ஏற்பாடு செய்த திருமந்திர மாநாடு அண்மையில் இணுவில் மஞ்சத்தடி முருகன் ஆலயத்தில் நடைபெற்றது. இந்த மாநாடு பற்றிய தொகுப்பு இங்கு பிரசுரமாகிறது.**



தவத்திரு செல்லத்துரை சுவாமிகள் ஆசியுரை வழங்குகின்றார். இளைப்பாறிய ஆங்கிலப் போதனாசிரியர் ச.விநாயகமூர்த்தி, சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

யாழ். குடாநாட்டில் சைவமும் தமிழும் சிறப்புற்று வளர்ந்திருக்கும் கிராமங்களில் இணுவில் பதியும் ஒன்றாகும். பல அருள் வீசும் ஆலயங்கள் இக் கிராமத்தின் பல திசைகளிலும் இருந்து அருளாட்சி புரிகின்றன. பக்தர்கள், ஞானிகள், சித்தர்கள் எனப் பலரும் இக்கிராமத்தில் வாழ்ந்தார்கள். சித்த புருஷர்களில் ஒருவரும் இணுவில் கந்தசுவாமி கோயிலின் சிற்பங்களை உருவாக்கிக் கொடுத்தவரும் ஆகிய சந்நாசி அப்பாவின் சமாதியிலே அமைந்திருப்பது இணுவில் மஞ்சத்தடி முருகன் ஆலயம். சித்த புருஷருடைய ஆலயத்திலே சித்தபுருஷர்களில் மூலவராக இந்த தவயோகி திருமூல நாயனாருடைய குருபூசை அண்மையில் திருமந்திர மாநாடாக மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இணுவில் கந்தசுவாமி கோயிலில் இருந்து திருமந்திரப் பாடல்களை அடியார்கள் பக்தியுடன் பாடத் திருமூலரின் படம் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது. மஞ்சத்தடி முருகன் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூசை ஆராதனையைத் தொடர்ந்து கொடிக்கவி பாடி நந்திக் கொடி ஏற்றப்பட்டது. யாழ்ப்பாணம் தந்த தவயோகியான யோகர் சுவாமிகளின் பிரதம சிஷ்யனாகிய தவத்திரு. செல்லத்துரை சுவாமிகளின் ஆசியுரையுடன் திருமந்திர மாநாடு ஆரம்பமானது. இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் மாநாட்டிற்குத் தலைமை வகித்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இளைப்பாறிய ஆங்கிலப் போனாசிரியர் ச. விநாயகமூர்த்தி "தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறு" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். சாத்திர நூலாக இருக்கின்ற திருமந்திரம் எவ்வாறு தோத்திர நூலாகவும் இருக்கின்றது என்பதைப் பல உதாரணங்களுடன் விளக்கினார். திருமந்திரம் சிவனையே முழுமுதற் கடவுளாகக் கொள் வதுடன் தமிழர்களின் சிந்தனையின் முகிழ்த்த சைவ சித்தாந்த தத்துவத்தை விளக்கும் கருவூலமாகவும் காணப்படுகின் றது - என்றார். இந்நிகழ்வில் பாடசாலைகள், அறநெறிப் பாடசாலைகள் இணைக்கப்பட்டது சிறப்பான அம்சம் ஆகும்.

திருமூலர் குருபூசை திருமந்திர மாநாடாக நடத்தப்பட்டதற்கான சான்றாக நடைபெற்ற நிகழ்வு 'திருமந்திரம் ஒரு பன்முகப் பார்வை' என்ற கருத்தரங்கு ஆகும். 'திருமந்திரத்தில் வழிபாட்டு நெறி' என்ற தலைப்பில் ஆசிரிய ஆலோசகர் சைவப்புலவர் கந்த சத்திய தாசனும் 'திருமந்திரத்தில் வாழ்வியல்' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த் துறை சிறப்பு மாணவன் ச.பாலசண்முகனும் 'திருமந்திரத்தில் சிவசின்னங்கள்' என்ற தலைப்பில் சைவப் புலவர் நித்திய. தசீதரனும் 'திருமந்திரத்தில் சைவசித்தாந்தம்' என்ற தலைப்பில் சைவப் புலவர் ஏ.அனுஷாந்தனும் கருத்துரைகளை வழங்கினர். இறுதி நிகழ்வாகத் திருமூலருடைய வரலாற்றினை வில்லிசை நிகழ்வாக புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரியின் ஆசிரியர் ச.லலீசன் பக்கவாத்தியங்கள் சகிதம் நிகழ்த்தினார்.



புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி ஆசிரியர் ச.லலீசன் தலைமையில் வில்லிசை நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படம்.

திருமுறைப் பற்றாளர்கள் செறிந்து வாழும் இணுவில் கிராமத்தில் திருமந்திர மாநாடு நடத்தப்பட்டமை மிகச் சிறப்பான அம்சம் எனச் சைவச் சான்றோர்கள் பலரும் கூறினர். ஒரு நாட்டினுடைய இதயம் கிராமங்களில் தான் தங்கி உள்ளது என்பது பாரத நாட்டின் தேசபிதா காந்தி அடிகளின் கருத்து சைவப்பற்றுள்ள கிராமங்களின் ஊடாக எழும்புகின்ற தெய்வீக ஒளி ஈழமணித் திருநாடு எல்லாம் பரவி மீண்டும் இலங்கை சிவபூமியாகத் திகழ வழி செய்ய வேண்டும். ☆





உள்ளூராட்சி வாரத்தின் போது கடந்த ஜூலை மாதம் உள்ளூராட்சி மன்றங்களால் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. வேலணைப் பிரதேச சபை ஏற்பாடு செய்த மரம் நடுகை இயக்கத்தை வேலணைப் பிரதேச சபையின் பிரதம நூலகர் ஆரம்பித்து வைப்பதை முதல் படத்திலும் - இறுதி நாள் நிகழ்ச்சிகளை விடுதலைப் புலிகளின் அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் செம்மணன் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

**Invitation**

***The New Nativity***

**A Choral Celebration of the Meaning of Christmas**

*Presented by*

**Uduvil Girls College**

*On December 5, 2004, 4.00 p.m.*

At the Uduvil Church

*Uduvil Girls College Chunnakam.* *Principal, Staff and Students.*

(சி-39431)(34-16-19)


# வலி.கிழக்கில் 59 திட்டங்களுக்கு 22 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

வலி.கிழக்கு,டிசெ.3

வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் பன் முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் 59 வேலைத்திட்டங்கள் மொத்தம் 22 லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்படவுள்ளன.

பிரதேச செயலக அதிகாரி ஒருவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

முன்பள்ளிகள், பாடசாலை ஆகியவற்றிற்கான தளபா டங்கள் கொள்வனவு, நீர் விநியோகம், நூல்நிலையப் புத்தகக்கொள்வனவு, சனசமூக நிலையங்கள், முன்பள்ளி கள் திருத்தம், முன்பள்ளிகளுக்கான மலசலகூடம் அமைத்தல், பாடசாலைகளுக்குக் கணனி, 'பான்ட்' வாத் தியங்கள் வழங்கல் போன்ற பல திட்டங்களுக்கே இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன்னம்பலம் கஜேந்திரகுமார் 9 வேலைத்திட்டங்களுக் கும்-

மாவை சேனாதிராசா 5 வேலைத்திட்டங்களுக்கும்-
நடராசா ரவிராஜ் 3 வேலைத்திட்டங்களுக்கும் -
டக்ளஸ் தேவானந்தா 4 வேலைத்திட்டங்களுக்கும்-
பத்மினி சிதம்பரநாதன் 4 வேலைத்திட்டங்களுக்கும்-
செல்வராசா கஜேந்திரன் 9 வேலைத்திட்டங்களுக்கும்-
சுரேஷ் பிரேமச்சந்திரன் 19 வேலைத்திட்டங்களுக்கும்-
கிருஷ்ணன் சிவனேசன் 4 வேலைத்திட்டங்களுக்கும்-
ஈழவேந்தன் 2 வேலைத்திட்டங்களுக்குமாக மொத் தம் 59 வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்படவுள்ளன.

வலி. கிழக்குப் பிரதேச சபை, யாழ். கல்வி வலயம் ஆகியவற்றின் ஊடாக உடனடியாக வேலைகளை ஆரம் பிக்கப்படவுள்ளன - என்று அந்த அதிகாரி மேலும் தெரி வித்தார். (ஐ-180)

## ஆன்மீகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,டிசெ.3

இந்துசமய விவகார அலுவல்கள் திணைக் களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் நடத் தும ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரின் 104 ஆவது சொறபொழிவு இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றிலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்துசமய விவகார அலுவல்கள் திணைக் களத்தின் உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கத்தின் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் 'நெஞ்சக் கன கல் நெகிழ்ந்துருக' என்னும் தலைப்பில் நா.நவ ராஜ் சிறப்புச்சொற்பொழிவாற்றுவார்.

(ஐ-202)

## தும்புத் தொழிற்சாலை இன்று முதல் இயங்கும்

தென்மராட்சி,டிசெ.3

யாழ். சமூக செயற்பாட்டு மையத்தினால் மறுசீரமைக்கப்பட்ட கச்சாய் தும்பு உற்பத்தி நிலையம் இன்று வெள்ளிக்கிழமை முதல் மீண்டும் இயங்கவுள்ளது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூத ரகத்தின் அனுசரணையுடன் செயற்படவுள்ள தும்பு உற்பத்தி நிலையத்தினைத் தென்மராட் சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் ஆரமபித்து வைப்பார்.

(ஐ-117-202)

## வீடு மீது தாக்குதல்; குடும்பப்பெண் படுகாயம்

யாழ்ப்பாணம்,டிசெ.3

இரவுவேளை எதிர்பாராத விதமாக வீட்டுக் கதவு, யன்னல்களை அடித்துத்தாக்கிய கும் பல் ஒன்றைத் தட்டிக்கேட்க முற்பட்ட குடும்பப் பெண் ஒருவர் இரும்புக் கம்பியால் அடித்துத் தாக்கப்பட்டு உச்சந்தலையில் படுகாயமடைந் தார்.

கந்தர்மடம் பகுதியில் கடந்த செவ்வாய்க் கிழமை இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் எல்.சாந்தநாயகி (வயது 48) என்ற பெண்ணே படுகாயமடைந்தவராவார்.

கதவைப்பூட்டிவிட்டு வீட்டினுள் இருந்த வேளை திடீரெனக் கதவு யன்னல்கள் அடித் துத் தாக்கப்பட்ட சத்தம்கேட்டு கதவைத் திறந்து வெளியே வந்தபோது திடீரென எதிர்ப் பட்ட ஒருவர் தன்னை இரும்புக் கம்பியால் அடித்துத் தாக்கியதாகவும் - தாக்கியதை அடுத்து தான் கூக்குரல் இட்டதைத் தொடர்ந்து அக்குழுவினர் ஓடித்தப்பிவிட்டனர் என்றும் படுகாயமடைந்தவர் தெரிவித்தார். அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட் டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக பொலீஸில் முறை யிடப்பட்டுள்ளது.

(ஐ-15)

## தலங்கமவில் தமிழ் இளைஞர் சுட்டுக்கொலை

கொழும்பு, பத்தரமுல்ல பகுதிக்குச் சமீப மாக தலங்கம ரொபர்ட் குணவர்த்தன மாவத் தையில் தமிழ் இளைஞரொருவர் இனந்தெரி யாத நபர்களால் சுட்டுக்கொலை செய்யப்பட் டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற இந் தச் சம்பவத்தில் சிலாபம் பகுதியைச் சேர்ந்த அசோக பிரேமசீலன் என்ற இளைஞரே உயிரிழந்தார் எனத் தலங்கம பொலீஸார் தெரிவித்தனர்.

தனிப்பட்ட பகைமையின் காரணமாக இந் தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றிருக்கக் கூடுமென ஆரம்ப விசாரணைகளில் தெரியவரு வதாகத் தலங்கம பொலீஸ் நிலையத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஐ-க)

## 40ஆவது ஆண்டில் திருமறைக்கலாமன்றம்

அரியாலை,டிசெ.3

யாழ்.திருமறைக்கலாமன்றத்தின் 40 ஆவது ஆண்டை ஆரம்பிக்குமுகமாக மன்றத்தின் கலைத்தூது மணி மண்ட பத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

அன்றையதினம் மாலை 5 மணிக்குத் திருப்பலிப்பூசை யுடன் நிகழ்வுகள் ஆரம்பித்து தொடர்ந்து கலை நிகழ்வு களும் மாலை 6 மணிக்கு 'கலைமுகம்' என்ற சஞ்சிகை வெளியீடும் இடம்பெறும்.

அத்துடன், மன்றத்தின் 40 ஆவது ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு இந்து மற்றும் கிறிஸ்தவ ஆலயங் களில் விசேட பூஜை வழிபாடுகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மன்றத்தின் பொது சனத் தொடர்பு அதிகாரியான எஸ்.ஜெயசிங்கம் தெரி வித்தார். (ஐ-17-5)


# 31ஆம் நாள் நினைவும் சபிண்டீகரண அழைப்பும்



கடந்த 03.11.2004 புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி

**திருமதி செல்லம்மா இராசரத்தினம்**

அவர்களின் அந்தியேட்டி, சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (03.12.2004) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந் திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

கணவர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

செல்லம் மில்,
கரவெட்டி. (சி-39426)(26-16-19-34) T.P.: 226-3013.



## பின்னுறுதித் தீர்வை யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில்...

வழ/இல. மணநீக்கம்/460.

செல்லையா சுப்பிரமணியம்
மே/பா திருமதி யோகராஜன் பெண் மாலதி
திருமணப்பதிவாளர். உரும்பிராய். மருதனார்மடம் வீதி.
உரும்பிராய் தெற்கு. உரும்பிராய்.
- வழக்காளி,

எதிராக
சுப்பிரமணியம் பெண் பிருந்தா
மே/பா கந்தசாமி கைம்பெண் கைலேஸ்வரி,
பி.பிரேம்குமார் இல்லம்.
நாவலர் பாடசாலை ஒழுங்கை. கோப்பாய் மத்தி
- எதிர்வாதி

இவவழக்கு 2004 ஆம் ஆண்டு ஆடிமாதம் 26ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற நீதிபதி திரு. இ. த. விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வந்த போது வழக்காளியும் வழக்காளி சார்பில் பதிவுபெற்ற சட்டத்தரணி திரு. பொன். பூலோகசிங்கம் அவர்களும் பிரசன்னமாயிருக்க இவ்வழக்கில் எதி ராளிக்கு அழைப்புக்கட்டளை உதயன் தேசியப் பத்திரிகை ஊடாக 15.06.2004 ஆம் திகதி விளம்பரப்படுத்தியதன் மூலம் பதில் சேவகம் செய்யப்பட்டு அடுத்த திகதியான 21.06.2004 இல் எதிராளி மன்றில் சமுகம் இல்லாமையால் ஒருமுக விளக்கத்திற்குத் திகதியிடப்பட்டதற்கு அமைய இன்று (26.07.2004) ஒருமுக விளக்கத்திற்கு எடுக்கப்பட்டு வழக்காளியின் சாட்சியத்தை நெறிப் படுத்திய பின்னர் வழக்காளியின் பிராது வ-01 ஆவணம் என்பவற்றுடன் வழக்காளியின் சாட்சியத்தையும் நன்கு பரிசீலித்து வழக்காளி பிராதில் கோரிய நிவாரணங்களைப் பெறத் தகுதியுடையவர் எனக்கண்டு பின்வருமாறு கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

வழக்காளிக்கும் எதிராளிக்குமிடையில் 1993 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 07 ஆம் திகதி (07.04.1993) நிறைவேறிய திருமணப் பதிவை எதிராளி மாரிமுத்து காளிதாஸ் என்பவருடன் சோர வாழ்க்கை வாழ்வதால் ரத்துச் செய்து கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

அத்துடன் வழக்காளியின் பிள்ளைகளான சுப்பிரமணியம் கஜானி, சுப்பிரமணியம் டிலாந்தன் ஆகியோரின் பாதுகாப்பும் பராமரிப்பும் வழக்காளி யான செல்லையா சுப்பிரமணியம் என்பவரிடத்திலேயே இருக்கவேண்டும் என்று கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

இப்பின்னுறுதித் தீர்வையின் பிரதியை வழக்காளி உதயன் பத்திரிகையின் மூலம் பிரசுரம் செய்த திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் இப்பின் னுறுதித் தீர்வையானது ஏன் முற்றான தீர்வையாக்கப்படக்கூடாது என்பதற்கு ஏதாவது காரணம் எதிராளி காட்டப்பட்டிராதவிடத்து விதிக்கப்பட்ட காலம் முடிவடைந்த பின்னர் இப்பின்னுறுதித் தீர்வை முற்றான தீர்வையாக்கப்படு மென இத்தால் கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

ஒப்பம்:இ.த.விக்னராஜா,
மாவட்ட நீதிபதி. யாழ்ப்பாணம்.
நீதிமன்றின் கட்டளைப்படி து.சிறீமோகன்,பதிவாளர். மாவட்ட நீதிமன்றம். யாழ்ப்பாணம்.

2004ஆம் ஆண்டு ஆடி மாதம் 26ஆம் திகதி வரைந்தது
(சி-39424)(42-16-19) பொன்.பூலோகசிங்கம், வழக்காளியின் சட்டத்தரணி.



உ

# எமது குருக்கள் ஜேர்மனி பயணம்

எமது ஆலய பிரதம குருக்களான கானப்பிரியன் - சபரீசதாசன்

**சிவஸ்ரீ தாணு.வாசுதேவக் குருக்கள்**

அவர்கள் மஹாகும்பாபிஷேகத்தின் பொருட்டு ஜேர்மனிக்குப் பயணமாவதையிட்டு நாம் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றோம்.

குருக்கள் அவர்கள் ஜேர்மனி சென்று கும்பாபிஷேகத்தைச் சிறப்புடன் நடத்தி மீண்டும் ஈழம் திரும்ப எல்லாம்வல்ல சிவபெருமானை வணங்கித் துதித்து மகிழ்கின்றோம். அவரது அருளாசி ஜேர்மனி மக்களுக்கும் கிடைக்க வேண்டு மென்பதை இறையருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

*மயிலணி, சுன்னாகம்.* *அண்ணமார மகேஸ்வரர் திருக்கோயில் பரிபாலனசபை.*

(39178) (26-34-19-16)



# ஆத்மா சாந்தி அடைக!

எமது சக மாணவி

செல்வி **சிவாஜினி அமிர்தலிங்கம்**

எம்மையெல்லாம் மீளாத் துயரில் ஆழ்த்திவிட்டுச்
சென்றனையோ - தோழி
உன் நினைவுகள் என்றும் எம்மை விட்டு நீங்கா......
உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும் .....
(2005 கலைப்பிரிவு)
வகுப்பு மாணவிகள்.
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

(சி-39411)(34-16-19)



# இரண்டாம் ஆண்டு நினைவு தினம்

பிறப்பு 28 - 05 - 1928



இறப்பு 03 - 12 - 2002

அமரர் **கே.ஜி.மகாலிங்கம்**

(இளைப்பாறிய அதிபர்)

மடியதனில் வைத்துவெமை முற்றத்து மணலெடுத்து
மாண்புறு அகரமதை மனதில் பதியவைத்து
கொடியதனில் மணம் பூக்கும் காலைப் பூக்களுமாய்
குருவாகி கல்வி நீர் ஊற்றியெமை மலரவைத்தாய்
படித்துயர கல்லூரிப் படியேற்றிய பொக்கிசமே
பிடிப்போடு குடும்பமதை பல்கலைக் கழகமாக்கி
விடிவுதனை வேதமதாய் இறைமகனின் துணையோடு
வாழ்விலெமை உயரவைத்தாய் வாழும்வரை
துதிப்போமே.

புண்ணிய மகால்,
அல்வாய். (சி-39411)(34-16-19) மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# எங்கே செல்கிறது ஸ்ரீலங்கா....?

கடந்த சில வாரங்களில் மிகவும் சூடுபிடித்த சில விடயங்கள் பற்றி நோக்குவதே இந்தக் கட்டுரையின் நோக்கம். ஜனாதிபதியின் ஆட்சிக்காலம் பற்றிய சர்ச்சை சமாதானத்தின் நகர்விற்கு புலிகள் எதிரானவர்கள் என்ற திருமதி சந்திரிகாவின் கூற்று, சரத் அம்பேபிட்டியவின் கொலை, புதிய வரவு - செலவுத் திட்டமும் பாதுகாப்புச் செலவீனங்களின் ஒதுக்கீடும், தமிழர்களின் அச்சமும்.

திருமதி சந்திரிகாவின் ஆட்சிக்கால முடிவு பற்றி எழுந்த சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்தால் போல் 2006 வரை தான் தனது பதவிக்காலம் என அடித்



துக் கூறியுள்ளார் திருமதி சந்திரிகா. ஆனால், எதிர்க்கட்சியோ 2005இல் எப்படியும் தேர்தல் நடந்தே தீரும். அரசியல் நிர்ணயசபை சட்டரீதியாக சாத்தியமான ஒன்றல்ல என்று தெரிவித்துள்ளது.

2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்படவில்லை. ஆனால், தேர்தல் திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால். வங்குரோத்து நிலையில் உள்ள ஸ்ரீலங்காவின் நிதி நிலையைக் காரணம் காட்டி ஜனாதிபதித் தேர்தல் நடத்த முடியாமைக்குக் காரணம் காட்டினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இலங்கையின் அரசமைப்புச் சட்ட விதிகளின் படி தேர்தல் நடைபெறும் திகதி, தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர், பதிவு செய்யப்பட வேண்டிய திகதி போன்ற விடயங்களை தேர்தல் ஆணையாளர்தான் தீர்மானிக்கவேண்டும். இதனை 30ஆம் , 31ஆம் சரத்துக்கள் சொல்லி நிற்கின்றன. இந்த விடயத்தில் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸ்ஸ நாயக்கா இதுவரையில் எதுவும் கூறியதாகத் தகவல் இல்லை. ஜனாதிபதித் தேர்தலுக்கு நிதி ஒதுக்கப்படாமல் வரவு - செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு தேர்தல் நடைபெறுமா? நடைபெறாதா? என்ற விடயத்தில் மோதிக்கொள்வது சிங்கள அரசியல்கட்சிகளே. தமிழ் கூட்டமைப்பைப் பொறுத்தவரை பெரிதாக அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. காரணம் தமிழர்களுக்கான நீதி எதிர்க்கட்சியிடமும் கிடைக்குமா என்பது கேள்விக்குரியதே. ஜனாதிபதியின் கூற்றுப்படி இடைக்கால நிர்வாக சபை பற்றிப் பேசுவதற்கு முன்பு இறுதித் தீர்வு பற்றிப் பேசுவோம் என்ற நிலைப்பாட்டை புலிகள் நிராகரித்து, இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை பற்றிப் பேசுவோம் என்ற நிலைப்பாட்டிற்கும் இங்கே விளக்கம் கிடைக்கிறது.

அதாவது, இன்னும் ஒன்று அல்லது இரண்டு வருடங்கள் (முழுமையாக அல்ல) மட்டும் ஆட்சியில் இருக்கப்போகும் ஜனாதிபதியுடன் இறுதித் தீர்வு பற்றிப் பேசுவதும் சாத்தியமான ஒன்றுஅல்ல. தவிர, கடந்த ரணில் விக்கிரமசிங்கவின் பிரதமர் ஆட்சிக்காலத்தில் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்ட போது இறுதி நேரத்தில் சில தீர்மானங்கள் நிறைவேற்ற அரசமைப்பு இடங்கொடுக்காமல் தடையாக உள்ளமையைக் காரணம் காட்டினார்கள். ஜனாதிபதியைப் பொறுத்தமட்டிலும் அரசமைப்புத் திருத்தம் பற்றிய தீர்மானங்களை எடுக்க அவராலும் முடியாது. காரணம் ஜனாதிபதியும் ஒரு தங்கி வாழ்பவர். அவரைத் தாங்கிக்கொள்வோர் புலிகள் பற்றிப் பேசினால் பேய் பிடித்தவர்கள் மாதிரி கூச்சல் இடுகின்றனர்.

திருமதி சந்திரிகா முதலில் ஆட்சிப்பீடம் ஏறிய போது பலமான ஒரு நாடாளுமன்றப் பெரும்பான்மையுடன் ஆட்சிப்பீடம் ஏறியவர். இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசமைப்பில் மாற்றம் ஏற்பட்டால் தவிர, இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது என்று அனைவராலும் அன்றும் (இன்றும்) ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. இதனையே தனது தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றாகக் காட்டினார். (கடந்த கால அரசுகள் செய்ததுபோல் நாங்கள் சிங்களம் மட்டும் என்ற கோஷத்துடன் ஆட்சிக்கு வரவில்லை. அரசமைப்பில் மாற்றம் செய்யப்படும்



என்று கூறித்தான் பதவிக்கு வந்தோம் இது பத்திரிகை ஒன்றிற்கு தெரிவித்த கூற்று).

ஆனால், சீர்திருத்தம் பற்றி ஏதேதோ பொதிகளை கொண்டுவந்து மீண்டும் தமிழர்களை ஏமாற்ற முனைந்ததும் அது புலிகளின் பலத்தினால் முறியடிக்கப்பட்டதும் வரலாறுகள் சொல்லும்.

### புதிய வரவு – செலவுத் திட்டமும் பாதுகாப்பு செலவுகளின் ஒதுக்கீடும்

ஸ்ரீலங்கா அரசால் அண்மையில் முன்வைக்கப்பட்ட வரவு - செலவுத் திட்ட அறிக்கையினால் தமிழர்களின் மனதில் ஒருவித பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. ஸ்ரீலங்காவில் சீரழிந்துள்ள பொருளாதார வளங்களை சமாதான காலத்தைப் பயன்படுத்தி மீண்டும் புத்துயிர் பெறவைப்பதை விடுத்து, போர் தொடுத்து மீண்டும் உள்ளதையும் அழிக்க சிங்களத் தலைமைகள் முயல்வதாகத் தெரிகிறது.

பாதுகாப்புச் செலவுகளுக்காகக் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 1300 கோடி ரூபாவை அதிகமாக ஒதுக்கியுள்ளமை எதனை சொல்லி நிற்கின்றது? எந்த ஒரு நாடும் தனது மொத்தத் தேசிய வருமானத்திலிருந்து 20 வீதத்தினை உள்நாட்டுப் போருக்காகச் செலவளித்ததாகத் தரவுகள் இல்லை. இது கடந்த கால நிலைபரம். தற்போது அதற்கும் ஒருபடி மேலே சென்றுள்ளது அரசு.

2004ஆம் ஆண்டுக்கான பாதுகாப்புச் செலவுகளுக்கு 4300 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. 2005ஆம் ஆண்டுக்கான செலவாக 5600 கோடியாக அது அதிகரித்துள்ளது. இதேவேளை, முப்படைகளுக்கும் தேவையான இராணுவ தளபாடக் கொள்வனவிற்கான விவரங்கள் சேகரிக்கப்பட்டு பாதுகாப்பு அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சும் இராணுவத் தளபாட கொள்வனவிற்கான பேச்சுக்களை வெளிநாடுகளின் ஆயுத விற்பனையாளர்களுடன் மேற்கொண்டுள்ளது.

பிரிட்டனிடம் இருந்து 'C130' ரகத்தைச் சேர்ந்த ஹேர்குலிஸ் துருப்புக்காவி விமானத்தை கொள்வனவு செய்வதற்கு அண்மையில் பேச்சுக்கள் நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

### நீதிபதி கொலை

ஸ்ரீலங்கா காவல் துறையும் நீதித்துறையும் மிகவும் ஊழல் நிறைந்த ஒன்று என ஜனாதிபதி அண்மையில் தெரிவித்துள்ளார். கடந்த 19ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய சுட்டுக்கொல்லப்பட்ட போது உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னான்டோவை பணித்திருந்தார்.

இங்கு ஒரு செய்தி தெளிவாக உள்ளது

அம்பேபிட்டியவுக்கு முன்பெல்லாம் தொலைபேசியூடாக மிரட்டல்கள் விடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தநிலையில், கொலைக்கு அண்மைய நாள்களில் அவரது வீட்டுப் பாதுகாப்பிற்கு யாரையும் நியமிக்காமல் தவிர்த்துள்ளனர். அம்பேபிட்டியவின் வீட்டில் அவரது பிரத்தியேகமான சம்பவப் பதிவுப் புத் தகத்தினை பொலிஸார்தான் அகற்றியுள்ளனர் என்று அவரது மனைவி தெரிவித்திருக்கிறார். கொலைக்காக பயன்படுத்திய வாகனத்தை கொலையாளிகள் பொலிஸாரின் வாகனம் திருத்தும் இடத்திற்கு அண்மையில் விட்டுத் தப்பியோடியுள்ளனர்.

சி. கேசவன்

இங்கு தான் அந்தச் செய்தி விளங்கிக் கொள்ளப்படுகின்றது. அதாவது பொலிஸ் படை பற்றிய ஜனாதிபதியின் கூற்று சரியென்பது உச்ச பாதுகாப்பு நிறைந்த இடத்தில் கொலை. இதனை தடுக்க முடியாத பொலிஸ் நீதித்துறையின் சீரழிவுக்கு ஜனாதிபதியும் ஒரு விதத்தில் காரணம் எனலாம். *

# வலுவிழந்தோரின் உயர்வுக்கு உழைக்க ஒவ்வொருவரும் முன்வரவேண்டும்

இன்று சர்வதேச ஊனமுற்றோர் தினமாகும். இன்றைய தினத்தில் வாழ்க்கையில் நொந்து போய் நலிவடைந்துள்ள வலுவிழந்தோர் பற்றியும் நாம் சிந்தித்து அவர்களின் உயர்வுக்காகச் செயற்பட முன்வர வேண்டும். வலுவிழந்தோரை அரவணைத்து, கருணை காட்டி உதவுவது இறைவனுக்குச் செய்யும் தொண்டாக நாம் கருதவேண்டும்.

இன்று உலக நாடுகளின் மொத்த சனத் தொகையில் 500 மில்லியன் மக்கள் வலுவிழந்தவர்களாக உள்ளனர் என கணிப்பீடுகள் சொல்கின்றன. விஞ்ஞானம் வளர்ந்துவிட்ட இன்றைய காலகட்டத்தில் இயற்கையாலும், செயற்கையாலும் வலுவிழந்தோரின் தொகையும் அதிகரித்துக் கொண்டு தான் வருகின்றது.

இன்று எமது சமூகத்தில் பெற்றோரின் வறுமை, கல்வி, அறிவின்மை, மூடநம்பிக்கைகள், போசாக்கின்மை, பாரம்பரியம், மூளை வளர்ச்சியின்மை, இளம்பிள்ளைவாதம், மன நோய், தொழுநோய், காக்கா வலிப்பு, பக்கவாதம் முதலிய அகக் காரணங்களும் விபத்து, போர் முதலிய புறக்காரணங்களும் உடல் உள வலுவிழந்

கா.கணேசதாசன்,
உப தலைவர், யாழ்.வலுவிழந்தோர்
புனர்வாழ்வுச் சங்கம் (அறோட்)

தோர் எண்ணிக்கையை பெருக்கிக் கொண்டே இருக்கின்றன.

இவற்றை எல்லாம் சிந்தித்து 1990 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட எமது யாழ்.வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம் (அறோட்) பல சேவைகளைப் புரிந்து வருகின்றது.

### வலுவிழந்தோரின் நிலை

வலுவிழந்து உடல் குறைபாடு உடையோர் விடயத்தில் எமது மக்கள் மூடக்கருத்துக்களும் அச்ச பீதியும் தவறான கருத்துக்களும் கொண்டுள்ளனர். உடல் வலுவிழந்தவர்களில் வயோதிபர்களிலும் பெரும்பாலானவர்கள் மனப்பக்குவத்தை அடைந்தாலும், இதனால் பெரும்பாலும் பாதிப்புக்குள்ளானவர்கள் சிறுவர்கள் என்றால் மிகையாகாது.

பெரும்பாலும் வறுமையான குடும்பங்களில் வாழும் சிறுவர்கள் அடிப்படை சுகாதார வசதி, கல்வி வசதி குறைந்தவர்களாக அவல வாழ்க்கை வாழ்கின்றனர். சிறுவர் தாழ்வுச் சிக்கல் காரணமாக மக்களுடன் உறவாட மறுக்கும் அதேவேளை, சில குடும்பங்களில் வெட்கத்திற்கு அஞ்சி அவர்களை வீட்டில் மறைத்து வைப்பதும் முழுவியளத்திற்கு உதவாதவர்களென இருட்டறையில் பூட்டி வைக்கும் துர்ப்பாக்கியமான சம்பவங்களும் இடம்பெற்றிருக்கின்றன. இவைதவிர, பெற்றோருக்கும், உடன் பிறந்தோருக்கும், உளரீதியாகவும், பொருள் ரீதியாகவும் பெரும் சுமையாகக் கருதப்படுகின்றனர்.

### மக்களின் மனமாற்றம் தேவை

மேற்கூறிய நிலை மாற்றப்பட வேண்டுமானால் மக்களின் கருத்தோட்டத்திலும், மனதிலும், நடத்தையிலும் மாற்றம் வேண்டும். வலுவிழந்தவர் தான் வலுவிழந்ததற்கு கவலைப்படுவதிலும் பார்க்க ஏனையவர்களின் கேலிச் சிரிப்பிற்கு ஆளாகும்போதே கூடுதலான மனவேதனை அடைகின்றார்கள். இந்நிலை மாற்றப்பட்டு அவர்களும் இறைவனது படைப்புக்கள், எமது சகோதரர்கள் என உணர்ந்து அவர்களையும் மதிக்வேண்டும். அவர்களின் உணர்வுகள், தேவைகள் பூர்த்தியாக்கப்பட வேண்டும். குருடர், செவிடர், ஊமை, நொண்டி என்பதற்குப் பதிலாக அவர்களை அன்புடன் செவிப்புலனற்றோர், விழிப்புலனற்றோர், பேச இயலாதோர், வலுவிழந்தோர் போன்ற சொற்களால் அழைக்க வேண்டும். சமுதாயத்தில் அவர்கள் துணிவுடனும் தன்னம்பிக்கையுடனும், சுதந்திரமாகவும் வாழக்கூடிய நிலையை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். சமுதாயத்தில் தீவிர பங்காளிகளாகும் உரிமை அவர்களுக்கும் உண்டு. வலுவிழந்தோரைக் கண்டதும் அவர்களை ஏளனம் செய்யாது எம்மை வலுவுள்ளவர்களாகப் படைத்த இறைவனை நன்றியுடன் வணங்கி வலுவிழந்தோரும் நன்றாக [illegible] உதவ வேண்டும்.

### மக்களின் ஆதரவு தேவை

இன்று வலுவிழந்தோர் பற்றிய விழிப்புணர்வு பரவலாக ஏற்பட்டதனால் உலக நாடுகள் அவர்களுக்குச் சாதகமான சட்டங்களையும் கொள்கைகளையும் செயற்படுத்தி வருகின்றன. அவர்கள் சமூகத்தில் உயர்ந்த இடத்தில் வைத்து மதிக்கப்படுகின்ற நிலை இன்று உருவாகிக் கொண்டு வருகின்றது. கல்வித் திறனைப்பற்றி நாம் நோக்கும்போது உடல் வலுவிழந்தோரும் ஏனையோரும் ஒரே மாதிரியான பரீட்சைக்கு முகங்கொடுக்கின்றனர். அங்கவீன மாணவ, மாணவி கள் இன்று நல்ல தொழில் செய்து தாம் மற்றவர்களுக்கு ஒரு பாரமாக இல்லாமல் வாழ்வதோடு அன்பும், பண்பும், காதலும், கருணை யும் கொண்ட ஆண்களை வலுவிழந்த பெண்களும், பெண்களை வலுவிழந்த ஆண்களும் விரும்பித் திருமணம் செய்து இல்லறத்தை நல்லறமாக நடத்துகின்றனர்.

இன்றைய தினத்தில் யாழ். மாவட்ட வலுவிழந்தோரின் ஒன்று கூடல் விழா சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி என்.சிவராசா தலைமையில் காலை 9 மணி தொடங்கி ஆடியபாத வீதியிலுள்ள சங்கப் பணிமனையில நடத்தப்படுகின்ற[illegible]



## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

Nokia 3610, 3315 கையடக்கத் தொலைபேசிகள் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777 222269. (39173)

T.V. (Philips), டெக் Zig Zag தையல் மெசின், சோக்கேஸ், அலுமாரி Honda Streem Ladies பாவனைக்கு உகந்தது. சிறிய சைக்கிள, மக்கி, கற்கள் ஆகியன உடனடியாக விற்பனைக்குண்டு. T.குலசிங்கம், இல.7/1, நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(39196)

### காணி விற்பனைக்கு

கோப்பாய் வடக்கு, இராசவீதியில் அமைந்துள்ள (சீரோடை) ஆறு பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: செ.தம்பியையா சுதர்சன், கரந்தன், நீர்வேலி. T.P.: 2718473. (சி-39395)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

3, 4வாரங்களுக்கு முன் கோண்டாவில் கலைவாணி (அன்னங்கை) வீதியில், டிப்போ சந்தியிலிருந்து 200m தொலைவில் தங்க நகை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் அடையாளம்காட்டிப் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: T.P.:0776 277189.

(39171)

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான நம்பர் - 1 பகிரா புறொயிலர் குஞ்சுகள் 04-12-2004 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, T.P.:No, 222 3529, 222 2867, றாஜீவ் கால்நடைத் தீவன விற்பனை நிலையம், சண்டிலிப்பாய்ச் சந்தி.

(39169)

மிகவும் தரமான, இரண்டுமுறை தடுப்பு மருநது வழங்கப்பட்ட Prima Original Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 06.12.2004 திங்கட்கிழமை விநியோகிக்கப்படும். பருத்தித்துறை - நெல்லியடிக்கிளையிலும், சூட்டி பாம் - வட்டுக்கோட்டை, R.S.K. பாம் - உடுவில், சுன்னாகம், ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம்சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(38932)

### இறைச்சிக் கோழிகள் தேவை

Broiler இறைச்சிக்கோழிகள் தேவை. தொடாபு:தனபாலசிங்கம், (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.

(39198)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி

**சிதம்பரப்பிள்ளை இராசம்மா**

பிறப்பு 05-03-1917 இறப்பு 03-11-2004


அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட அனைவரையும் இன்று (03.12.2004) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அந்தியேட்டிக்கிரியையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(39193)(34-11-16)

## இதய அஞ்சலி



அமரர்

**நமசிவாயம் சிவபாதம்**

(புத்தொளி - ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அன்னார் எமது மத்திய மருந்தக மகப்பேற்றுமனை அபிவிருத்திச் சபையின் ஆலோசகரும் வைத்திய சாலைக் காணிக்குழு நிர்வாக உறுப்பினரும் மூத்த எழுத்தாளரும் பத்திரிகை ஆசிரியரும் அகில இலங்கை சமாதான நீதிவானும் சமூகத் தொண்டனுமாவார். அவரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உற்றார், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மாவிப்பாய் ம.ம.ம.மனை
அபிவிருத்திச் சபை.

(சி-39438)(34-11-16)

### துடுப்பாட்டப் போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,டிசெ.3

நல்லூர் றோட்டறக்ட் கழகம் நடத்தும் மென்பந்துத் துடுப்பாட்டப் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

5 ஓவர்களில் 6 பேர் பங்குபற்றும் இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் 5 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கழகத்தின் திட்ட இயக்குநர் கேட்டுள்ளார். (8-202)

### வெளிச்ச வீட்டுக்கு மின்விளக்கு

வடமராட்சி கிழக்கு, வெற்றிலைக்கேணிக் கிராமத்திலுள்ள வெளிச்ச வீட்டில மின்விளக்கு பொருத்தப்பட்டுள்ளது. வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் வெளிச்ச வீடுகள் இல்லாமையால் மீனவர்கள் பலத்தசிரமங்களை எதிர்நோக்கிவந்தனர். இதனைக் கருத்திற்கொணடே வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூ.ச.ச.அ.பிரிவு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதையடுத்து மின்விளக்குப் பொருத்தப்பட்டுள்ளது. (10-36)

## இதயத்தின் மகிழ்ச்சியில் 40 ஆவது ஆண்டு



யாழ். திருமறைக் கலாமன்றத்தின் தோற்றமும் வளர்ச்சியும் நிலைப்பும் நினைத்து நினைத்து பெருமைப்பட வேண்டிய ஒன்றாகும். இம்மன்றம் இன்று (03-12-2004) நாற்பதாவது ஆண்டில் தடம்பதிக்கும் இந்நாளில் இன்னும் பல விழாக்களைக் கண்டு வளரவேண்டும் என்று வாழ்த்துவதுடன்....

அணையிட முடியாத கருணை, ஆழம் காணமுடியாத அன்பு
ஆகியவற்றின் வடிவமாக அனைவரையும் அணைத்துக் காத்து,
அழைத்துச் சென்று இந்த அற்புத சாதனைக்கு
அடித்தளமாக அமைந்த ஸ்தாபகர்
பேராசிரியர் கலாநிதி அருட்திரு
**நீ.மரியசேவியர் அடிகளாரின்** அகவை 65ஐ
நினைவு கூர்ந்து அவரின் தூய தொண்டிற்கு தலை வணங்கும்.

A.V. ஆனந்தன் C.M. நெல்சன்
M. யேசுதாசன் A.பேக்மன் ஜெயராசா
G.P. பேர்மினஸ் F. யூட்ஸ் கொலின்
A.பாலதாஸ் N.S. ஜெயசிங்கம்

(39192)(26-34-11-16)

### அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,டிசெ.3

யாழ். மாவட்ட கீழுழைப்பு பட்டதாரிகளுக்கான அவசர கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பட்டதாரிகள் வேலைவழங்கும் திட்டத்தின் கீழ் நியமனம் வழங்கப்படாது அரச திணைக்களங்கள் மற்றும் கூட்டுறவுத் திணைக்களங்களில் பணியாற்றும் பட்டதாரிகளின் விவரங்கள் கொழும்புக்கு அனுப்பப்படவுள்ளதால் இக்கலந்துரையாடலில் அனைத்து கீழுழைப்பு பட்டதாரிகளையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். (10-7)

### யேசு சபை அகதிகள் பணியக யூபிலி விழா

யாழ்ப்பாணம்,டிசெ.3

யேசு சபை அகதிகள் பணியக 25 ஆவது யூபிலி விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மாரீசன் கூடல் றோ.க.த.க.பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மாரீசன்கூடல் பங்குத் தந்தை யெ.பி.அன்ரனிதாஸ் பிரதம விருந்தினராகவும் மாரீசன்கூடல் றோ.க.த.க. பாடசாலை அதிபர் எஸ்.என்.உதயகுமார் சிறப்பு விருந்தினராகவும் மேற்படி பணியகத்தின் இணைப்பாளர் எஸ்.பிறின்ஸி கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளார். (10-95)

### வருமானப் பரிசோதகர் சங்கத்தின் பொதுக்கூட்டம்

தென்மராட்சி,டிசெ.3

யாழ். மாவட்ட உள்ளூராட்சி வருமானப் பரிசோதகர், வருமான மேற்பார்வையாளர்கள் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வலி.தென்மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் த.நிர்மலானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் அகில இலங்கை உள்ளூராட்சி சேவைகள் ஒருங்கிணைப்புச் சேவைகள் சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர். சில முக்கிய தீர்மானங்களை மேற்கொள்ளவுள்ளதால் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சங்கச் செயலாளர் பொ.கிருஷ்ணகுமார் கேட்டுள்ளார். (ஐ-202-117)

### திருத்தப்பட்ட மதகு உடையும் நிலை

வலி.கிழக்கு,டிசெ.3

கல்வியங்காடு, பருத்தித்துறை வீதி, 3ஆம் கட்டையில் உள்ள மதகு உடைந்துவிழும் அபாயநிலையில் உள்ளது.

அண்மையில் பழுதடைந்திருந்த இந்த மதகு திருத்தப்பட்டது. ஆயினும், அதன் திருத்தவேலைகள் உறுதியற்ற நிலையில் காணப்படுவதால் அம்மதகு மீண்டும் உடையும் தறுவாயில் உள்ளது என்று அப்பகுதி மக்கள் கூறுகின்றனர். (ஐ-180-202)

### ஹாட்லியில் அதிபர்கள் தினம்

யாழ்ப்பாணம்,டிச.3

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் மன்றத்தின் ஏற்பாட்டில் அதிபர்கள் தினம் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் கொண்டாடப்படவுள்ளது.

கல்லூரியின் முன்னாள் அதிபர்களை நினைவுகூரும் இந்நிகழ்வில் வடமராட்சிவடக்கு பிரதேச செயலர் சு.வசந்தகுமார் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார். (ஐ-202)

## 11 ஆம் ஆண்டு

நன்றி நினைவஞ்சலி
(03.12.1993 - 03.12.2004)



**LOURDES RAYMOND MUTHIAH**

**லூர்து றேமண்ட் முத்தையா**

"உம்மை எமக்கு ஈந்தளித்த இறைவன் நம்முடன் என்றும் உம்மை வாழவைப்பார்".
நித்திய இளைப்பாற்றியினை இவருக்கு அளித்தருளும்.

உமது நினைவில் வாழும்:
மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

67/1, ரெம்பிள் றோட்,
யாழ்ப்பாணம்.

(39194)(34-11-16)

## மரண அறிவித்தல்

### அருளானந்தம் சச்சிதானந்தவடிவேல்

(முன்னாள் தாதிய உத்தியோகத்தர், மட்டக்களப்பு - ஓமான் நிர்வாக உத்தியோகத்தர் ICRC, மட்டக்களப்பு)

மட்டக்களப்பை வசிப்பிடமாகக் கொண்ட அருளானந்தம் சச்சிதானந்தவடிவேல் 01-12-2004 புதன்கிழமை காலமானார்.

அன்னார் அருளானந்தம் - இராசம்மா தம்பதிகளின் ஏக புத்திரனும் காலஞ்சென்றவர்களான தெல்லிப்பழையைச் சேர்ந்த பிள்ளைனார் - பரிமளம் தம்பதிகளின் மருமகனும் சிறீமதி (முன்னாள் தாதிய உத்தியோகத்தர், ஓமான்) அவர்களின் அன்புக் கணவரும் சர்மிகாவின் அன்புத் தந்தையும் Dr.சிறீதரன் (மாகாணப் பணிப்பாளர், கால்நடைமருத்துவம் -மத்திய மாகாணம்), சீறிரதி, Dr.சிறீசாந்தினி (விரிவுரையாளர் - லங்கா ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி, யாழ்ப்பாணம்), சிறீவதனி (Attoney at Law, Canada), Dr. சிறீமலர், Canada), சிறீலதிகா (France) ஆகியோரின் அன்பு மைத்துனரும் N.குருசாமி (இளைப்பாறிய T.O.), M.A.செல்வராஜா (உதவிப் பாதுகாப்பு அதிகாரி, இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம்), S.குமரவேள் (உரிமையாளர், டொலர் அலுமினியம், மாவிட்டபுரம்-Kingstan International College - Colombo), S.சிவபாலன் (Canada), M.சாந்தரூபன் (France) ஆகியோரின் சகலனும் கர்ஷன் (Canada), சுதர்ஷன் (Canada), தர்ஷினி, சிந்துஜா, அகிலன் (Canada), அருணன்(Canada), சமிலா (Canada), நிரூஜன் (France), நிரூபன் (France), ஸ்ரேவ்வோன் (France), டிலான் (France) ஆகியோரின் ஆசை அப்பாவும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02-12-2004 வியாழக்கிழமை மட்டக்களப்பில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

19, சின்ன உப்போடை, மட்டக்களப்பு (39197)(34-26-11-16) தகவல்: சிந்துஜா செல்வராஜா.



பிள்ளைகளுக்கு
தாய் - தந்தை இருவரினதும்
அன்பு அவசியம்

TRIAD 13415

இலங்கையில் முதற் தடைவையாக மேலதிக
கொடுப்பனவுகள் ஏதுமின்றி ஓரே தடவையில் பெற்றோருக்கும்
சேர்த்து காப்புறுதியளிக்கும் விசேட சிறுவர் காப்புறுதி
தற்போது ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ் இடமிருந்து

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்
21, வொக்ஷோல் வீதி, கொழும்பு 2. தொலைபேசி: 2357357
24 மணிநேர அழைப்புச்சேவை 011 235 7000

மினிமுத்து
இணைந்த குடும்பத்திற்கு

## தாய் தந்தை இருவருக்கும் பாதுகாப்பு

இந்த விஷேட குழந்தைக் காப்புறுதி மூலம் தாய் தந்தை இருவருக்கும் காப்பீடு கிடைக்கிறது.
இருவருமே காப்பீடு பெற்றிருப்பினும் செலுத்தவேண்டியது ஒரேயொரு தவணைக்கட்டணமே.
தாய் தந்தை இருவரில் ஒருவரை இழந்தால் காப்புறுதித் தொகை இருமடங்காகும்.

## 140% தொகை முதிர்வின் போது கைகளில்

காப்புறுதிக்காலம் முடிவடைந்ததும் காப்புறுதி தொகையில் 140% நிச்சயமாய்க் கிடைக்கும்.
அத்தொகை முதிர்வடைந்த பிறகு நான்கு கட்டங்களில் வழங்கப்படுவதோடு பெற்றோரில் ஒருவர் மறைந்தாலும்
அது பிள்ளைக்கு உறுதியாய் பெற்றுக்கொடுக்கப்படும்.
இதற்கு மேலதிகமாக காப்புறுதித் தொகையுடன் இலாபப் பங்கும் சேர்க்கப்படும்.

## காப்புறுதித் தொகை செலுத்தப்படும் காலத்தினுள் பெற்றோரில் யாரேனும் ஒருவர் மரணமடைந்தாலும் மீதிக் கட்டுப்பணத்தைச் செலுத்தவேண்டியதில்லை

கட்டுப்பணம் செலுத்தப்படும் காலத்தினுள் தாயோ தந்தையோ மரணமடைந்தால்
மீதிக் கட்டுப்பணத் தொகையை செலுத்துவதிலிருந்து விலக்கு
அளிக்கப்படுவதோடு எதிர்பார்த்த இறுதித் தொகையை
எவ்விதக் குறைவுமின்றி பெற்றுக் கொள்ளவும் முடியும்.

## காப்புறுதித் தொகை செலுத்தப்படும் காலத்தினுள் பெற்றோரில் ஒருவர் மறைந்தால் அப்போதிருந்து இருமடங்குத் தொகை பிள்ளையின் கைகளுக்கு

எதோவொரு காரணத்தால் பிள்ளைக்கு நிதி வழங்கும் காலத்தினுள் தாயோ தந்தையோ இறக்க நேரிட்டால்
கொடுக்கப்படவேண்டிய மீதித் தொகை இருமடங்காகும்.

TRIAD 13415

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்
21, வொக்ஷோல் வீதி, கொழும்பு 2. தொலைபேசி: 2357357
24 மணிநேர அழைப்புச்சேவை 011 235 7000

இலங்கையில் முதற் தடைவையாக மேலதிக
கொடுப்பனவுகள் ஏதுமின்றி ஓரே தடவையில் பெற்றோருக்கும்
சேர்த்து காப்புறுதியளிக்கும் விசேட சிறுவர் காப்புறுதி
தற்போது ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ் இடமிருந்து

மினிமுத்து
இணைந்த குடும்பத்திற்கு

# மனித உரிமைகள் தினத்தை விரிவாக அனுஷ்டிக்க ஏற்பாடு

மனித உரிமைகள் தினத்தை யாழ்.குடா நாட்டில் வெகுசிறப்பாக அனுஷ்டிப்பதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகம் ஏற்பாடுகளைச் செய்துவருகின்றது.

உலக மனித உரிமைகள் தினம் எதிர்வரும் 10 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனையொட்டி மனித உரிமைகள் ஆணைக குழு குடாநாட்டிலுள்ள பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் மக்களை ஒன்று திரட்டி, போட்டிகளை நடத்தி, பரிசில்களை வழங்கவுள்ளது.

அரசசார்பற்ற நிறுவனங்களும் இம்முறை உதவிகள் வழங்கவுள்ளதோடு மனித உரிமைகள் தினத்தை கிராமங்கள் தோறும் கொண்டாடுவதற்கும் கிராமப்புற மக்கள் மத்தியில் மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை உருவாக்கவும் ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன.

இம்முறை மனித உரிமைகள் தினத்தை மக்களே தாங்களாக முன்னெடுத்துக் கொண்டாடுவதற்குரிய ஏற்பாடுகளை மனித உரிமைகள் ஆணைக்குழு செய்துவருகின்றது என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-7)

## ஊனமுற்றோர் தினத்தை முன்னிட்டு ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம்,டிசெ.3

சர்வதேச ஊனமுற்றோர் தினத்தை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை திருநெல்வேலி வடக்கு, ஆடியபாதம் வீதி, இலக்கம் 47/2 இல் அமைந்துள்ள ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தில் ஒன்று கூடல் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் சகல ஊனமுற்றவர்களையும தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் க.கோபாலகிருஷ்ணன் கேட்டுள்ளார்.

இதேவேளை,

கிளிநொச்சி ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தினால் சர்வதேச ஊனமுற்றோர் தினம் இன்று கொண்டாடப்படவுள்ளது.

கிளிநொச்சியில் அமைந்துள்ள ஊனமுற்றோர் புனர்வாழ்வு தலைமைச் செயலகத்தில் இன்று காலை 10 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (10-7-202)

## வீதிச் சமிக்ஞைகள் இன்மையால் சிரமம்

புதுக்குடியிருப்பு,டிசெ.3

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் வீதிச் சமிக்ஞைகள் இல்லாத காரணத்தால் பயணிகளும், போக்குவரத்துப்பிரிவினரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

குறிப்பாகப் பாடசாலைகளுக்கு அருகிலும், நெருக்கடி மிகுந்த பாதைகளிலும் சமிக்ஞைகளோ, வீதிக்கடவைக் குறியீடுகளோ இல்லாத காரணத்தால் மாணவர்களும் பயணிகளும் பெரும் ஆபத்துக்களை எதிர்நோக்குவதாகக் கூறப்படுகின்றது. (10-353)

## தரை ஓடு பதித்தல் பற்றிய பயிற்சிப் பட்டறை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.3

லங்கா ரைல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட கட்டடத் திணைக்களம் நடத்தும் தரை ஓடு(மாபிள்) பதித்தல் தொடர்பான இருநாள் பயிற்சிப் பட்டறை நேற்றுக் காலை யாழ்.செயலகத்தில் ஆரம்பமாகியது.

யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி பயிற்சியினை சம்பிரதாயபூர்வமாக ஆரம பித்துவைத்தார்.

இந்தப் பயிற்சி வகுப்பில் லங்கா ரைல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் சேலி மகேந்திரா, பொறியியலாளர் சாந்தி நிர்சிங்க, ஏசியன் இன்ரீரியல் முகாமைத துவப் பணிப்பாளர் சஞ்சீவ தர்மசேன, உற்பத்தி முகாமையாளர் அசோககுபசீன ஆகியோர் கலந்துகொண்டனர்.

யாழ்மாவட்டக் கட்டடத் திணைக்களத் தொழிலாளர்கள் நூற்றுக்கு மேற்பட்டோரும் கலந்து கொள்கின்றனர். இப்பயிற்சி வகுப்புகள் இன்றும் தொடர்ந்து நடைபெறும். இறுதியாக பயிற்சியில் கலந்துகொண்டதற்கான சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (ஐ-13)

## உளமருத்துவ நிபுணர் சிறுவர்களைப் பார்வையிடுவார்

யாழ்ப்பாணம்.டிசெ.3

கொழும்பிலிருந்து வருகை தந்துள்ள சிறுவர் உளமருத்துவ நிபுணர் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் 4 மணி வரையும், நாளை சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரையும் யாழ். போதனா வைத்தியசாலையின் உளநலப் பிரிவில் சிறுவர்களைப் பார்வையிடுவார் என்று வைத்தியசாலையின் உள நலப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (10-202)

## உரக்களஞ்சியம் இல்லை

ஒட்டுசுட்டான்,டிசெ.3

ஒட்டுசுட்டான் கமநல நிலையத்திற்கென உரக்களஞ்சியம் இல்லாததால் அப்பகுதி விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அண்மையில் மீண்டும் இயங்க ஆரம்பித்த இந்த கமநல நிலையத்தில் உரக்களஞ்சியம் இல்லாமையால் உரவிற்பனை மேற்கொள்ளப் படவில்லை. இதனால், விவசாயிகள் அதிக விலை கொடுத்து தனியார் நிறுவனங்களில் உரத்தைக் கொள்வனவு செய்ய வேண்டிய நிலை உள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (10-341-202)



அண்மையில் நடைபெற்ற குரவில் தமிழ் வித்தியாலய கட்டடத் திறப்பு விழாவில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் நாடாவை வெட்டிக் கட்டடத்தை திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். *(படம்:புதுக்குடியிருப்புச் செய்தியாளர்)*

## மின் பிறப்பாக்கி இன்மையால் கணனி தொழிற்படவில்லை

பரந்தன்,டிசெ.3

கிளிநொச்சி, தர்மபுரம் மகாவித்தியாலயத்தில் கணனி ஒரு காட்சிப்பொருளாக மாறியுள்ளது.

இப்பாடசாலைக்கு கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்களத்தால் கணனி ஒன்று வழங்கப்பட்டது. ஆனால், இக்கணனியை இயக்குவதற்கான மின்பிறப்பாக்கி இதுவரை காலமும் வழங்கப்படாததையிட்டு மாணவர்களும் ஆசிரியர்களும் விசனமடைந்துள்ளனர்.

இப்பாடசாலை மாணவர்கள் வேறு பாடசாலைகளுக்கு அல்லது தனியார் நிலையங்களிற்கு சென்றுதான் கணனிச் செயற்பாடுகள் பற்றி அறிய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. (10-352-203)

# உதயன் பதிவில் பொதிந்தவை

**கடந்து வந்த 19 ஆண்டுகளில் உதயன் தந்த பதிவுகள் ஈழத் தமிழர்களின் விடுதலைப்போராட்டத்தில், அவர்தம் வாழ்வியலில் ஒரு பகுதி.**

**உதயனின் உதயகால தொடக்கம் முக்கிய பதிவுகளை மீண்டும் படிக்கும் வாய்ப்பைத் தருகிறோம்.**

## 1985 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில்...

**16.12.1985**
இலங்கைக்கு ஆயுத உதவி வழங்க பாக்: ஜனாதிபதி தயார்
5 நாள் விஜயமுடிவில்

**14.12.1985**
ஏழு அரச கட்டடங்கள் குண்டு வைத்து தகர்ப்பு
மட்டக்களப்பு ஆயித்தியமலைப் பகுதியில்

**15.12.1985**
ஆயுதப் படையினருக்கு
இரவு நேரத்தில் ரோந்து சோதனைக்கு அனுமதி
உயர் அதிகாரி முன் ஆஜர் செய்து விசாரிக்கவும் அதிகாரம்

**16.12.1985**
தமிழ் குழுக்களுக்கு விரைவில் அழைப்பு
பிரதமர் ராஜீவ் சார்பில் பண்டாரி பேசுவார்

**15.12.1985**
6,000 அகதிகள் பசி, பட்டினி!

**16.12.1985**
தற்செயலாக வெடித்த குண்டு: இளைஞன் பலி
யாழ்நகரில் திடீர் பதற்றம்

**16.12.1985**
மகாதேவா தாம்போதி வடக்கில் ஒரு சாதனை
இன்று திறப்பு விழா
★ நீண்டநாள் கனவு நனவாகிறது
★ போக்குவரத்து சிரமம் நீங்கும்
★ விவசாயம் செழிப்புற வசதிகள்

யாழ். நகர்மைய றோட்டறக்ட் கழகம்
கைதடி வளர்மதி சனசமூக
நிலையத்துடன் இணைந்து நடத்தும்

**இலவச பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு**

இடம்:-
கைதடி முத்துக்குமார சுவாமி வித்தியாலயம்

காலம்:-
04.12, 05.12 திகதிகள் 9.00 மணிமுதல்

பரீட்சைக்குத் தோற்றும் க.பொ.த. (சா/த)
மாணவர் அனைவரையும் கலந்து
பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

Rtr.ஆனந்தகுமார்,
Rtr.சயந்தன்
செயற்றிட்ட இயக்குநர்கள்.

யாழ். நகர்மைய
றோட்டறக்ட் கழகம்

---



வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்களின் ஆசியுடன்
கொழும்பு மனவளக்கலை மன்ற ஏற்பாட்டில் தமிழகத்திலிருந்து
வருகை தரும் மனவளக்கலை துணைப் பேராசிரியர்
P.பார்த்தீபன் அவர்கள் வழங்கும்

**சிறப்புப் பயிற்சிகள்**

★எளிய முறை உடற்பயிற்சி
★எளியமுறை குண்டலினியோக தியானப் பயிற்சி
★எளியமுறை காயகல்பப் பயிற்சி

திகதி: 04.12.2004 (மு.ப 8.30 மணி முதல் பி.ப. 4.30 மணிவரை)
05.12.2004 (மு.ப 8.30 மணி முதல் பி.ப 1.30 மணிவரை)
இடம்: திவ்ய ஜீவன சங்கம் (Divine Life Society Hall)
பருத்தித்துறை வீதி, நல்லூர் (சட்டநாதர் கோயில் அருகில்)
கட்டணம்: ரூ.650/= (இரண்டு நாள்களுக்கும்)

**கொழும்பு மனவளக்கலை மன்றம்**
75/3, Veluvanarama Road, Colombo-6
2507668, 0777364885, 0777389281
www.vethathiri.org

(39215)(14-13-32)

*அனைவரும் வருக! வாழ்க வளமுடன். பயின்று பயன் பெறுக!*

---

## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய இசையாசிரியை
செல்வி பொ.தர்ஷிலா அவர்களின் அருமைத் தாயார்

**திருமதி பொன்னுத்துரை பூரணம்**


அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை ஆராதிக்கின்றோம்.

யா/நாரந்தனை கணேச வித்தியாலயம், ஊர்காவற்றுறை. (39217)(14-13-32) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்,

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 - 06 - 1938 | 16 - 10 - 2003 |



அமரர் **கதிர்காமு கணபதிப்பிள்ளை**
(ஓய்வுபெற்ற ஆசிரியர், யா குட்டியப்புலம் அ.த.க. பாடசாலை)
*திதி: அபரபக்க சஷ்டி 03-12-2004*

**பண்பின் இருப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்புடனே அரவணைத்து அறிவூட்டி
இன்பமுடன் எமைவளர்த்து ஆளாக்கி – ஆசானாய்
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறைந்தீர்
ஆண்டு ஒன்றல்ல என்றும் மறவாது
காலமெல்லாம் நினைத்திருப்போம்!**

மாவடிவளவு,
பத்தமேனி,
அச்சுவேலி. (சி-39457) (26-13-14-32)

– குடும்பத்தினர்.

---

# நத்தார் இன்னிசை ஆராதனை

யாழ்ப்பாணம்,டிசெ.3

கைதடி நவீல்ட் செவிப்புலன், விழிப்புலன் இழந்தோர் பாடசாலையின் வருடாந்த நத்தார் இன்னிசை ஆராதனை நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலையின் அதிபர் த.சாம்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இறையுரையினை யாழ்.அகவொளி நிலைய அதிபர் அருட்கலாநிதி எஸ்.ஜே.இராசநாயகம் அடிகளார் வழங்கவுள்ளார். (ஐ-13)

# ஓட்டோ அன்பளிப்பு

வலி.கிழக்கு,டிசெ.3

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள வாதரவத்தை கிராம மக்களின் அத்தியாவசியப பொதுத்தேவைகளுக்கென யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் ஓட்டோ ஒன்றை வழங்கியுள்ளார்.

வாதரவத்தை கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு 2லட்சம் ரூபா செலவில் வழங்கப்பட்டுள்ள இந்த ஓட்டோ அப்பகுதி மக்களின் மருத்துவ போக்குவரத்துத் தேவைக்குப் பயன்படுத்தப்படவுள்ளது. (எ-180-202)

# மிருசுவில் சந்தியில் கடைகள் தீக்கிரை

கொடிகாமம்,டிசெ.3

மிருசுவில் சந்தியில் இரண்டு கடைகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

கடந்த புதனிரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மிருசுவில் சந்தியில் உள்ள பல சரக்கு விற்பனை நிலையமும் தேநீர்ச்சாலையும் இவ்வாறு தீமூட்டி எரிக்கபட்டுள்ளன.

பலசரக்குக் கடையில் 3லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களும் தேநீர்ச்சாலையில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் பெறுமதியான தளபாடங்களும் எரிந்து நாசமாகின. (எ-74)

## மாவீரர் பெற்றோர் இணுவிலில் கௌரவிப்பு

வலிகாமம் தெற்கு,டிசெ.3

இணுவில் பகுதியில் உள்ள மாவீரர்களின் பெற்றோர்களை இணுவில் கிழக்கு தேசிய எழுச்சிப்பேரவையினர் கௌரவித்துள்ளனர்.

பேரவையினருடன் இணைந்து இணுவில் கிழக்கு சிவகாமசுந்தரி சனசமூக நிலையத்தவர்களும் இணுவில் இந்து விளையாட்டுக் கழகத்தினரும் இதனை ஏற்பாடு செய்திருந்தனா.

வலிகாமம் தெற்கு தேசிய எழுச்சிப்பேரவையின் பொருளாளர் செ.இலகுநாதன் தலைமையில் இணுவில் சிவகாமி அம்மன் சனசமூக நிலைய முன்றிலில் கௌரவிப்பு வைபவம் இடம்பெற்றது.

இந்நிகழ்வின்போது இணுவில் மத்திய கல்லூரி அதிபர் துரை எங்கரசு மற்றும் வலிகாமம் தெற்கு அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.பவநீதன் உட்படப் பலர் மாவீரர்களின் தியாகங்களைப் பற்றி எடுத்துக் கூறி உரையாற்றினர்.

மாவீரர்களின் பெற்றோர்களுக்கு அரசியல் துறை பொறுப்பாளரால் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. (எ-152)

## பயிரழிவைத் தடுக்க முட்கம்பிவேலி

தென்மராட்சி,டிசெ.3

தென்மராட்சி தெற்கில் ஐந்தரை மைல் நீளமான தூரத்திற்குப் படையினர் முட்கம்பி வேலியினை அமைத்துள்ளனர்.

இவ்வருடம் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட வயல்களில் பயிர்களை அப்பகுதியில் அலையும் கட்டாக்காலி மாடுகள் அழிப்பதாக முறையிட்டதையடுத்து சுமார் நான்கு லட்சம் ரூபா செலவில் முட்கம்பி வேலியினை அமைந்துள்ளனர்.

அதி உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் கட்டாக்காலியாக அலையும் மாடுகளால் பயிர்கள் அழிப்பதனை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் படை அதிகாரிகளுக்கு அறிவித்ததையடுத்தே படையினர் இந்த முட்கம்பிவேலியை அமைத்துள்ளனர். (எ-117)

## ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பும்

சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்கத்தின 55ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுககிழமை சில்லாலை றோ.க.த.க.பாடசாலையில் நடைபெறவுள்ளது.

சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் அ.யோ.இம்மானுவேல் தலைமையில் பிற்பகல் 5.30 மணியளவில் இந்நிகழ்வு இடம்பெறும். (எ-185)

## மறவன்புலோவில் சனசமூகநிலையம்

தென்மராட்சி,டிசெ.3

மறவன்புலோ மேற்கில் புதிய சனசமூக நிலையம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானைச் சேர்ந்த ஹரிதாஸ் நிறுவனத்தினால் சுமர் ஒன்றரை லட்சம் ரூபா செலவில இந்த நிலையக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

இக் கட்டடத்தில் முன்பள்ளி இயங்கிவருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

---

நல்லூர் றோட்டறக்ட் கழகம் நடத்தும்

**மாபெரும் மென்பந்துத் துடுப்பாட்டப் போட்டி**

**எமது கழகத்தினால் யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்துக் கழகங்களுக்கும் இடையிலான 5 பந்துப் பரிமாற்றங்களைக்கொண்ட, 06 வீரர்கள் பங்குபற்றும் துடுப்பாட்டப் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது. எனவே, மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்பும் அனைத்துக் கழகங்களையும் 06.12.2004 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.**

**படிவங்கள் கிடைக்கும் இடங்கள்:**

**கணேசன் தொலைத்தொடர்பு நிலையம்**
(கொக்குவில் சந்தி, கொக்குவில்)

**ஃபைன் செலெக்சன்**
(சுன்னாகம் சந்தி, சுன்னாகம்)

**அருண்ஸ் போட்ஸ் ஸ்பொட்**
(ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)

**கலாவிற்பனையகம் & போன்சொப்**
(திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி)

**கோல்டன் ஸ்ரார் தையலகம்**
(ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு)

நல்லூர் றோட்டறக்ட் கழகம்.
T.P.: 077 6691287, 077 6056483

Rtr.S.பிரசாத்
(திட்ட இயக்குநர்)

(சி-39460)(33-14-13-32)

---

# மரண அறிவித்தல்கள்

## பவளம்மா வீரசிங்கம்



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் இருபாலை, கட்டப்பிராயை வசிப்பிடமாகக் கொண்டவருமான வீரசிங்கம் பவளம்மா அவர்கள் நேற்று (02.12.2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பொன்னம்பலம் சிவக்கொழுந்துவின் அன்பு மகளும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை செல்லாச்சியின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்லத்துரை, காலஞ்சென்ற சின்னத்துரை இராஜபூபதி (இந்தியா), காலஞ்சென்ற சபாபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் நாகரத்தினம் (கனடா), காலஞ்சென்ற கார்த்திகேசு, காலஞ்சென்ற கந்தசாமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் செல்வநாயகி, பாலசறோஜினி,சிவபாலசிங்கம், தேவராணி, இந்திராணி, சண்முகராஜா (பிரான்ஸ்), விக்கினேஸ்வரராசா (பிரான்ஸ்), கேதீஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற யோசப் அலன், செல்வராசா, கமலா, நாகராசா, சிவலோகநாதன், யோகமலர் (பிரான்ஸ்), நவநீதசெல்வி (பிரான்ஸ்), கமலேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் வசந்தரூபி, சாந்தரூபி (பிரான்ஸ்), ரேணுகாதேவன் (பிரான்ஸ்), சுகந்தினி, தேவதாஸ் (பிரான்ஸ்), நவதாசன் (பிரான்ஸ்), சுதா, கிரிஜா, பாலேந்திரன், பிரபாகரன், சுதாகரன், சிவகுமார், றீகன் (பிரான்ஸ்), ஜெகன், றீகா (பிரான்ஸ்), ஜீகா (பிரான்ஸ்), கலிபிராஜ் (பிரான்ஸ்), புவிராஜ், (பிரான்ஸ்), உதித்தா (பிரான்ஸ்), ஜீகன் (பிரான்ஸ்), ஸ்றீகன் (பிரான்ஸ்), கவிகா (பிரான்ஸ்), றூீகன் (பிரான்ஸ்) பக்தகுணசீலன் (பூங்கனிச்சோலை), சிவநாதன் (பிரான்ஸ்), சிவதர்சினி (பிரான்ஸ்), சாந்தகுமார், சாந்தினி, சிறிதர்சினி (பிரான்ஸ்), சிவகுமார், சந்திரராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அருண்புஜன், ருத்திலா, சந்துஜன், நிலாஜன், சுதர்சன் (பிரான்ஸ்), நிரோஜன் (பிரான்ஸ்), மிரோஜன் (பிரான்ஸ்), றிசி (பிரான்ஸ்), கிஷாந், கஜலக்ஷன், திபீகா, சர்மிலா, குமுதகலா, கோபனா, கரிஸ்லன்ட (பிரான்ஸ்), சிவானுஜா, சிவசுதன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05.12.2004 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'கவிகாவாசம்',*
*பருத்தித்துறை வீதி,*
*கட்டப்பிராய்.*

(சி-39462)(29-14-13-32)

தகவல்:
பிள்ளைகள்.

## நாகலிங்கம் கந்தசாமி (சாக்கர்)



யாழ்ப்பாணம், கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் இல.1A, அம்மன் வீதி, கந்தர்மடத்தினை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கந்தசாமி அவர்கள் 01.12.2004 புதன்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகரெட்ணம் - கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் நித்தியபாக்கியத்தின் அன்புக் கணவரும் பிரபானந்தரூபி, காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராஜா (சிறி), நகுலானந்தரூபி (ரூபி, ஆசிரியை யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), ஸ்ரீதரன் (கண்ணன் - அம்பிகை களஞ்சிய முன்னாள் ஊழியரும் தற்போதைய லக்ஸ்பிறே விற்பனைப் பிரதிநிதியும்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சற்குணானந்தன் (சற்குணம்), தவசீலன் (சீலன்), சகாயமலர் (லதா) ஆகியோரின் அன்பு மாமனாரும் லாவென்னியா (சிந்து - யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவி, தரம் 9), சாமந்தி, சாம்பவி (யாழ்.இந்துமகளிர் ஆரம்ப பாடசாலை மாணவிகள், தரம்4), சாரங்கள், சாதுஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2004) வெள்ளிக்கிழமை மாலை 4மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


*இல.1A, அம்மன் வீதி,*
*கந்தர்மடம்.*

(39216)(14-13-32)

தகவல்:
ஸ்ரீதரன்
(மகன்-கண்ணன்)

# கொண்ட கொள்கையை இறுதிவரை துணிச்சலுடன் பற்றி நில்லுங்கள்!

## ஈழத்தமிழ் மக்களுக்கு இயக்குநர் பாரதிரர்ஜா செய்தி



யாழ்ப்பாணம்,டிசெ.3

ஈழத்தமிழர்கள் கடந்த 20ஆண்டுகளுக்கு மேலாகத் தாம் கொண்ட கொள்கையில் எத்தகைய துணிவுடனும், முனைப்புடனும் செயலாற்றி வந்தனரோ அதே துணிச்சலுடனும் முனைப்புடனும் தொடர்ந்து செயற்பட்டு அவர்கள் வெற்றி பெற வேண்டும்.

- இவ்வாறு ஈழத் மக்களுக்கு தெரிவிக்கிறார் தென்னிந்தியாவின் பிரபல திரைப்பட இயக்குநர் பாரதிராஜா.

கடந்த சில தினங்கள் வடபகுதியில் பல இடங்களுக்கும் விஜயம் செய்த அவர் நேற்று முன்தினம் இரவு 'உதயன் பணிமனைக்கு வருகை தந்தார்.

'உதயன்' பிரதம ஆசிரியர் மற்றும் ஆசிரிய பீடத்தினரோடு அவர் மனம் திறந்து கலந்துரையாடினார்.

அப்போது அவர் கூறியதாவது:-

யாழ்ப்பாணத்தில் நான் பார்த்த காட்சிகள் இயற்கையின் வனப்பு என்பன தமிழ்நாட்டில் எனது சொந்த ஊரில் நிற்பதைப் போன்ற உணர்வையே எனக்குத் தந்தன. அந்த அளவுக்கு யாழ்ப்பாணம் என்னை மிகவும் கவர்ந்து விட்டது. ஆயினும் யுத்தத்தினால் ஏற்பட்ட வடுக்கள் கண்டு மிகவும் கலங்கினேன். வீரம் செறிந்த இந்த மண்ணில் இத்தனை வடுக்களா என்று எண்ணிப்பார்த்தபோது நெஞ்சம் ஒருமுறை கனத்தது. எத்தனையோ பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து இங்கு மக்கள் எல்லோரும் வாழ்ந்திருக்கிறார்கள் என்றால் அது இந்த மண்ணின் பெருமைதான்.

தமிழ்நாட்டில் உள்ள தமிழர்கள் எத்தனையோ சாதனைகளைச் செய்தார்கள். செய்து கொண்டிருக்கின்றார்கள். ஆனால், அதைப்பற்றியெல்லாம் எவரும் பெரிதாகப் பேசுவதில்லை. ஆனால் ஈழத்தமிழர்களின் பெருமை பற்றியே எல்லோரும் பேசுகின்றார்கள்.

உலகில் எந்த நாட்டுக்குச் சென்றாலும் அங்குள்ள தமிழ் அறிஞர்கள் யார் என்று பார்த்தால் அது ஈழத்தமிழர்கள்தான். அவர்களிடம் பேசிப்பார்த்தால் தாம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கற்றதாகவே சொல்வார்கள். அந்த அளவுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ். பொதுநூலகம் என்பன உலக அளவில் பெருமை பெறுகின்றன.

உலகில் சாதனைக்குரிய தமிழர்கள் என்றால் அது ஈழத்தமிழர்கள்தான். இங்குள்ள மக்களிடம் பேசிப்பார்த்தால் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு சோகக் கதை இருக்கிறது. அந்தளவிற்கு போரின் தாக்கம் அவர்கள் மத்தியில் உள்ளது. ஆனாலும், அவர்கள் தளர்ந்து விடவில்லை.

மாவீரர் தின நிகழ்வுகளைப் பார்த்தேன். உண்மையிலேயே நெஞ்சை நெகிழவைத்தது. தீபங்களை ஏற்றிய அந்தக் காட்சி அருமையாக இருந்தது. கோப்பாய், சாட்டி ஆகிய இடங்களில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களுக்குச் சென்றேன்; என்னை மறந்து நின்றேன்.

ஈழத்தமிழர்கள் தங்கள் லட்சியத்தில உறுதியாக நின்று இறுதி இலக்கை அடையவேண்டும்.

- இப்படி பாரதிராஜா கூறினார்.

'ரில்கோ ஹொலிடேய்ஸ்' நிறுவன அதிபர் எஸ்.திலகராஜா, பாரதிராஜாவின் யாழ்ப்பாண விஜயத்துக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். (ஐ-10)



'உதயன்' பணிமனைக்கு விஜயம் செய்த இயக்குநர் பாரதிராஜா ஆசிரியர் குழுவின் பிரதிநிதிகளுக்கு விசேட செவ்வி வழங்கியபோது எடுக்கப்பட்ட படம்.

# 'யாழ்.மக்களின் சோகங்களை திரைப்படமாகத் தருவேன்...!'

யாழ்ப்பாணம்,டிசெ.3

யாழ்ப்பாணக் களத்தில் எத்தனையோ கதைகள் உள்ளன. அவற்றை அடிப்படையாக வைத்து திரைப்படம் ஒன்றை இந்த மண்ணில் தயாரிக்கவேண்டும் என்பது எனது வேணவா. அதற்கான காலம் நிச்சயம் கனிந்து வரும்.

இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டார் 'இயக்குநர் இமயம்' பாரதிராஜா.

ஈழத்தமிழர்களின் வாழ்வு, தென்னிந்திய சினிமாவின் போக்கு என்பன பற்றி உதயனுக்கு அளித்த ஒரு செவ்வியில் அவர் இப்படித் தெரிவித்தார்.

"யாழ்ப்பாண மண்ணில் நான் கண்ட காட்சிகளும் மக்களிடம் கேட்டறிந்த விடயங்களும் என்னை மிகவும் பாதித்து விட்டன. இந்தக் களத்தில் எத்தனையோ கதைகள் உண்டு. அவற்றை அடிப்படையாக வைத்து இலக்கியச்சுவை மிகுந்த நல்லதொரு திரைப்படத்தை நிச்சயம் தருவேன்.

யாழ்ப்பாணம் என்ற இந்தக் களத்தில் தான் எனது படப்பிடிப்பை நிகழ்த்துவேன். அதற்கான காலம் கனியவேண்டும் என்பதே எனது வேணவா. அவ்வாறு காலம் கனிந்தவுடன் நிச்சயமாக நல்லதொரு படத்தைத் தருவேன் - என்று உற்சாகத்துடன் கூறினார் பாரதிராஜா.

அவர் உதயனுக்கு வழங்கிய சிறப்புப் பேட்டி பின்னர் வெளியாகும்.

(ஐ-10)

# கனரக வாகனம் புதைந்து வீதியின் நடுவே ஆழக்குழி!

## போக்குவரத்துக்குப் பெரும் இடைஞ்சல்

வலி.கிழக்கு,டிசெ.3

புத்தூர் - சாவகச்சேரி வீதியில் கனரக வாகனம் ஒன்று புதைந்ததால் ஏற்பட்ட குழி அந்த வீதியில் போக்குவரத்திற்கு பெரும் இடைஞ்சலை ஏற்படுத்தியிருக்கிறது.

புத்தூர் - சாவகச்சேரி வீதியில் ஊறணி கிராமப் பகுதியில் அண்மையில் கனரக வாகனம் ஒன்று புதைந்தது. இதனால் வீதியில் பெரியகுழி ஏற்பட்டது. அந்தக்குழி செப்பனிடப்பட வில்லை.

இதனால், வாகனங்கள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

வீதியை விட்டு ஓரமாக விலகிச் செல்லும் வாகனங்கள் பல, கரையின் இருமருங்கிலும் உள்ள வயல்வெளிகளில் புதையுண்டு போகின்றன. இது நாளாந்த சம்பவமாகிவிட்டது.

(ஐ-180)

# வைத்தியசாலையில் ஊழியர் பற்றாக்குறை

மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையில் ஊழியர்கள் பற்றாக்குறை காரணமாக 'வார்ட்டுகளில்' நோயாளர் தங்கிச் சிகிச்சை பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இதன்காரணமாக இவ்வைத்தியசாலையிலிருந்து தூர இடங்களில் உள்ள பருத்தித்துறை, கிளிநொச்சி வைத்தியசாலைகளுக்கு நோயாளர்கள் மாற்றப்படுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், இங்கு ஒரு வைத்தியர் மட்டுமே பணிபுரிவதால் பலத்த சிரமங்களுக்கு மத்தியில் பணிபுரிய வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

(10-36)




# நகரில் கடைகளின் முன்பாக உள்ள தாழ்வாரங்களை அகற்றக் காலக்கெடு

யாழ்ப்பாணம்,டிசெ.3

யாழ். நகரப் பகுதியில் உள்ள வியாபார நிலையங்களின் பிரதான கதவுகளின் எல்லைக்கப்பால் போடப்பட்டுள்ள தாழ்வாரங்களையும், அதனுள் பரப்பப்பட்டிருக்கும் விற்பனைப் பொருள்களையும் இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் அகற்றிவிடவேண்டும். தவறும் பட்சத்தில் அவற்றை சட்டப்படி அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசா எச்சரித்திருக்கிறார்.

இது தொர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது -

நகரப் பகுதிகளில் உள்ள ஆஸ்பத்திரி வீதி, மின்சாரநிலைய வீதி, கஸ்தூரியார் வீதி, காங்கேசன்துறை வீதி ஸ்ரான்லி வீதி ஆகிய பிரதான வீதிகளிலேயே இவ்வாறு தாழ்வாரங்களில் விற்பனைப் பொருள்கள் பரப்பப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதனால் வீதிகளில் போக்கு வரத்துச் சிரமங்கள் ஏற்பட்டுள் ளன: வீதி விபத்துக்களும் அதிகரித்துள்ளன. இது குறித்து பொது மக்கள் தரப்பிலிருந்து முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதனைக்கருத்தில் கொண்டு உடனடியாக இவற்றை அகற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

தற்போது வழங்கப்பட்டிருக்கும் கால அவகாசம் இறுதியானது. இதனை வர்த்தகர்கள் கவனத்தில் எடுத்து ஒத்துழைப்பு நல்க வேண்டும்.-

இப்படி ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (ஐ-13)

# நாவலர் குருபூசை

யாழ்ப்பாணம்,டிசெ.3

யாழ். சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் 125 ஆவது குருபூசை விழா நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவபரிபாலன சபைத் தலைவர் சைவப் புலவர் வ.கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.கார்த்திகேயன் கலந்துகொள்வார்.

நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளின் அருளுரையும், 'நாவலர் நற்பணி' என்னும் தலைப்பில் யாழ். இந்து மகளிர் கல்லூரியின் இளைப்பாறிய ஆசிரியை செல்வி புஷ்பா செல்வநாயகத்தின் விரிவுரையும் இடம்பெறும். (10-202)

★ ★ ★

யாழ்ப்பாணம்,டிசெ.3

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் நடத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை தின விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றிலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் சிவத்தமிழ்வித்தகர் சிவ.மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் "நாவலரின் சமயப்பணிகள்" என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயரும், "நாவலின் சிந்தனையும் சைவத்தின் இன்றைய நிலையும்" என்னும் தலைப்பில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆசிரியர் சைவப்புலவர் ஏ.அனுசாந்தனும் சிறப்பு சொற்பொழிவாற்றுவர்.

தொடர்ந்து கலைநிகழ்ச்சிகள் இடம்பெறும். (13-202)

★ ★ ★

யாழ்ப்பாணம்,டிசெ.3

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினரின் ஏற்பாட்டில் நாவலர் குருபூசை விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் மன்றத்தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. (10-202)

★ ★ ★

தென்மராட்சி,டிசெ.3

கைதடி இணுங்கித் தோட்டம் கந்தசுவாமி ஆலயத்தினரும் கைதடி சைவ ஐக்கிய சங்கததினரும் இணைந்து நாளை சனிக்கிழமை ஆலய முன்றிலில் நாவலர் குருபூசை விழா வினை நடத்தவுள்ளனர்.

ஆலய பரிபாலனசபையின் உபதலைவர் ச.வீரசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் மாணவர்களிடையே பேச்சு, கவிதை, வில்லுப்பாட்டு ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (10-117-202)

★ ★ ★

நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் குருபூசை நடைபெறவுள்ளது.

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் பண்ணிசையும் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் ஆகியோரின் சொற்பொழிவுகளும் இடம்பெறும். (10)

வரையறையில்லா முதலுதவிச் சேவையில்

## யாழ். மத்திய கல்லூரி

பரியோவான் முதலுதவிப் படையணியின்

**25ஆம் வருட நினைவு தினமும் வெள்ளி விழா மலர் வெளியீடும்**

போசகர்: திரு.க.இராசதுரை (அதிபர், யாழ்.மத்தியகல்லூரி)
தலைவர்: செல்வன் ச.ஹேமாபிநாத்
பிரதம விருந்தினர்: வைத்திய கலாநிதி வை.தியாகராஜா (தலைவர், செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணம்)
சிறப்பு விருந்தினர்: ஆர்.அசோகன் (உதவி மாவட்ட ஆணையாளர், பரியோவான் முதலுதவிப்படை)
கௌரவ விருந்தினர்: திரு.த.கலாறெஜி (பழைய மாணவன், யா.ம.க.)
இடம்: யாழ்.மத்தியகல்லூரி, தம்பர் மண்டபம்
காலம்: 2004.12.04
நேரம்: காலை 09.00 மணி (பு.நே). (39204)(42-16-19-26)

## அறிவித்தல்

### மாவட்ட நீதிமன்றம், சாவகச்சேரி

வசந்ததேவன் பரந்தாமன் பெண்
சிவநந்தினி
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி
வழக்காளி.

வழக்கு.இல.377/மணநீக்கம் எதிராக

வசந்ததேவன் பரந்தாமன்
தேவரையாளி
நெல்லியடி வடக்கு, கரவெட்டி.
எதிராளி.

வசந்ததேவன் பரந்தாமன்,
தேவரையாளி, நெல்லியடி வடக்கு, கரவெட்டி.

மேற்படி வழக்கில் பதியப்பட்ட பின்னுறுதித் தீர்வை இதன் கீழ்ப்பிரசுரிக்கப்பட்டுள்ளது. தீர்வை தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை இருப்பின் இது பிரசுரமான தினத்திலிருந்து மூன்று (3) மாத காலத்திற்குள் உமது ஆட்சேபனையை இம்மன்றில் தாக்கல் செய்யவும்.

நீதிமன்றக் கட்டளை

வி.நடராசா (J.P.)
பதிவாளர்/பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம், சாவகச்சேரி.

திகதி: 25-11-2004

பின்னுறுதித் தீர்வை
மாவட்ட நீதிமன்றம், சாவகச்சேரி
விவாகரத்து பின்முற்றாக்கும் கட்டளை.

வசந்ததேவன் பரந்தாமன்,
பெண் சிவநந்தினி
வளர்மதி, மட்டுவீல் தெற்கு, சாவகச்சேரி
வழக்காளி.
எதிராக.

இல.377

வசந்ததேவன் பரந்தாமன்
தேவரையாளி,
நெல்லியடி வடக்கு, கரவெட்டி.
எதிராளி.

இவ்வழக்கு 2004ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27ஆம் திகதி மாவட்ட நீதிபதி திரு. பா.சுப்பிரமணியம் முகதாவில் விளக்கத்துக்கு எடுக்கப்பட்ட போது வழக்காளி சார்பில் சட்டத்தரணி செ.பாலகிருஸ்ணன் அவர்கள் சமுகமாயிருக்க எதிராளி சமுகமளிக்கவில்லை. ஆனால், அழைப்பாணை உதயன் பத்திரிகையில் 03-04-2004இல் பிரசுரிக்கப்பட்டபோதும், வழக்காளியால் மன்றில் 07-04-2004 அன்று சமர்ப்பிக்கப்பட்ட பிராதினையும் 27-07-2004 அன்று வழக்காளியால் மன்றில் அளிக்கப்பட்ட சாட்சியத்தினையும் வ1அ என அடையாளமிடப்பட்ட திருமண அத்தாட்சிப் பத்திரத்தையும் நன்கு பரிசீலனை செய்து எதிராளியானவர் வழக்காளியை வன்ம உறவறுப்புச் செய்துள்ளாரெனக் கண்டு வழக்காளிக்கும் எதிராளிக்குமிடையே 1991ஆம் ஆண்டு ஆடி மாதம் 5ஆம் திகதி நடந்த திருமணப் பதிவினை இத்தால் ரத்துச்செய்து தீர்ப்பளிக்கப்பட்டது. மேலும் வழக்காளிக்கும் எதிராளிக்கும் பிறந்த சித்தாரா என நாமம் கொண்ட பெண் குழந்தையின் பாதுகாப்பையும் பராமரிப்பையும் வழக்காளிக்கு வழங்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது. மேலும் வழங்காளி இனிமேல் தனது கன்னிப்பெயர் தவசிப்பிள்ளை ஆறுமுகம் மகள் சிவநந்தினி என நாமத்தைப் பாவிக்கலாமென்றும் திருமணம் செய்யாத பெண்ணுக்குரிய சகல உரிமைகளையும் வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டது.

மேலும் எதிராளி வெளிநாட்டில் வசிப்பதனால் பின்னுறுதித் தீர்வையின் அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதியை உதயன் பத்திரிகையில் பிரசுரம் செய்ய வேண்டுமென்று இத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டது.

2004 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27ஆம் நாள் வரைவு

ஒப்பம்:
வழக்காளியின் சட்டத்தரணி.

ஒப்பம்:
மாவட்ட நீதிபதி,
சாவகச்சேரி

(சி-39442) (26-16-19)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சூளிஅம்மாள் நாராயணசாமி

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது சுதுமலை வடக்கில் வசித்தவருமாகிய திருமதி சூளிஅம்மாள் நாராயணசாமி புதன்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குழந்தைவேலு நாராயணசாமியின் அன்பு மனைவியும் சிறீதரன், விமலராணி, முருகதாஸ், கங்காதேவி, பத்மாதேவி, தேவதாஸ், கபிலதாஸ், குகதாஸ், மணிவண்ணன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2004) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு ஈஞ்சடி, சுதுமலையில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
பிள்ளைகள்.

(39205)(39)

### திருமதி கதிர்காமதாஸ் விஜயகுமாரி

(ஆசிரியை, யா/இளவாலை கன்னியர்மடம் ம.வி.)

இளவாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் ஆஸ்பத்திரி வீதி, சங்கானையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கதிர்காமதாஸ் விஜயகுமாரி 01.12.2004 புதன்கிழமை காலமானார்.

அன்னார் கதிர்காமதாஸின் (Cool Air- K.K.S.) அன்பு மனைவியும் தர்மலிங்கம் - தங்கப்பிள்ளையின் பாசமிகு மகளும் திலீப்குமார் (டென்மார்க்), பிறேம்குமார் (சுவிஸ்), மீனகுமாரி (டென்மார்க்), சாந்தகுமாரி (ஆசிரியை - மல்லாகம் ம.வி.) ஆகியோரின் அன்புச் சகோதரியும் உடுவில் கிழக்கைச் சேர்ந்த மகாதேவன் - நாகரத்தின தேவமலர் (தேவி) ஆகியோரின் அன்பு மருமகளும் தங்கலோஜினி, பிறேமதாஸ், நிர்மலதாஸ், கமலதாஸ் ஆகியோரின் பாசமிகு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2004) வெள்ளிக்கிழமை முற்பகல் 11மணியளவில் முள்ளானை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.

தகவல்:
கதிர்காமதாஸ (கணவர்).

(39201)(26-16-19)

"ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ"

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த திரு.திருமதி பாலமுரளிகிருஷ்ணா (சுவிஸ்) தம்பதிகளின்

**செல்வப்புதல்வி செல்வி அர்ச்சனா**

இன்று (03.12.2004) வெள்ளிக்கிழமை தனது முதலாவது பிறந்த நாளை யாழ்ப்பாணத்திலுள்ள தனது அப்பம்மாவின் இல்லத்தில் வெகுகுதூகலத்துடன் கொண்டாடுகிறார். அர்ச்சனாகுட்டியை அன்பு அம்மா, அப்பா, அப்பம்மா, அம்மம்மா, அம்மப்பா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், சித்திமார், சித்தப்பாமார், அண்ணமார், அக்காமார், உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் யாவரும் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்மாள் அருளைப்பெற்று, சீரும்சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

18/5, கேசாவில் பிள்ளையார் வீதி.
வண்ணை வடமேற்கு.
நாச்சிமார் கோவிலடி.யாழ்ப்பாணம்.

- குடும்பத்தார்.

### கலந்துரையாடல்

'கியூடெக்' உயிர்ப்பூட்டல் மக்கள் குழுவின் ஏற்பாட்டில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாரீசன் றோ.க.த.க பாடசாலையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் உயரப்புலம், பெரியவிளான், விளான, இளவாலை, மாரீசன் கூடல், சகாயபுரம், மாதகல் ஆகிய கிராமங்களைச் சேர்நத மக்கள் கலந்து கொள்ளவுள்ளதாக உயிர்ப்பூட்டல் குழுத் தலைவர் எஸ்.என். உதயகுமார் தெரிவித்துள்ளார்.

(10-95-202)


பழுது பார்த்தல்

டிஜிட்டல், ஸ்டில் & வீடியோ கெமரா, ஸாம் கெமரா பிளேக்ஸ்சேர்கியூற், ஃபிளாஸ் கன்ஸ் லென்சஸ்



*40 தொழில்நுட்ப வல்லுநர்கள்
*30 வருட அநுபவம்
*ஒரு வருட உத்தரவாதம்
*ஓரே நாளில் துரித சேவை

GRAYON

DURST ELECTRONICS (PVT) LTD.
364, Galle Road,
Kollupitiya, Col-3
Tel: 2575480, 2565756
Opp.P.G. Martin & H.N.B.
Near Tourist Hotel Renuka. On Sea side


### சிவதொண்டன் நிலையத்தில் ஆயிலியபூசை

கொழும்புத்துறை யோகசுவாமிகளின் சமாதி நிலையத்தில் நடைபெற்று வந்த 'ஆயிலிய பூசை' இன்று வெள்ளிக்கிழமை இலக்கம் 434,கே.கே.எஸ் வீதியிலமைந்துள்ள சிவதொண்டன் நிலையத்தில் நடைபெறும் என்று சிவதொண்டன் சபையினர் அறிவித்துள்ளனர்.(10-202)

### நெடுந்தீவு பிரதேச சபை
### கேள்வி அறிவித்தல் திருத்தம்

02-12-2004 பக்கம் 4 உதயனில் பிரசுரமாகிய சந்தைக் குத்தகைக்கான கேள்வி அறிவித்தலில் 2004 ஆம் ஆண்டு என்று இருப்பது 2005ஆம் ஆண்டு முழுவதுக்கும் நடத்துவதற்கு என்று திருத்தப்படுகிறது.

ச.போ.தில்லைநாதன்
செயலாளர்,
பிரதேச சபை, நெடுந்தீவு.

(சி-39443)

## Golden Eagle Security Service Jaffna

**கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை**

### வெற்றிடங்கள் - பாதுகாவலர்கள்

தகைமைகள்:

1. க.பொ.த. (சா.த) சித்தி (தமிழ், கணிதம் உட்பட ஆறு பாடங்கள்) இளைப்பாறிய பொலீஸ் /படை உத்தியோகத்தர்களுக்கும், சாரணர், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினருக்கும், விளையாட்டுத்துறை வீரர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
2. மார்பு:- 32" உயரம்:- 5'4"
3. நல்ல தேகாரோக்கியமும், கண்பார்வையும்இருத்தல் வேண்டும்.
4. சம்பளம் :- ரூபா 5100/- பகல், ரூபா 6000/- இரவு } மாதமொன்று

இத்துடன் ஒழுங்குவரவு ரூபா 300/- மாதமொன்றும் E.P.F&E.T.F. வழங்கப்படும்.

தேவைப்படும் ஆவணங்கள்:

a) கிராம அதிகாரி நற்சான்றிதழ்
b) பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
c) பாடசாலை நற்சான்றிதழும், கல்விச் சான்றிதழும்
d) தே.அ.அ., வி.அ.அ. ஆகியவற்றுடன் 04.12.2004 காலை 10.00 மணிக்கு கீழ்க்காணும் காரியாலயத்தில் பிரசன்னமாயிருக்கவும்,

இல.43, கல்லூரி வீதி,
(யாழ்.இந்துக்கல்லூரி மைதானம் முனபாக),
யாழ்ப்பாணம்.

- பணிப்பாளர்.

(C/39444)(42-16-19-26)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

### அருணாசலம் வாகீசபிள்ளை

எமது குடும்பத் தலைவர் **அருணாசலம் வாகீசபிள்ளை** அவர்களின் மறைவுச் செய்திகேட்டு எமக்குப் பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் தொலைபேசி, தந்தி, கடிதம் மூலம் அனுதாபச் செய்தி அனுப்பியர்களுக்கும் அவரது இறுதி யாத்திரையில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், இன்று (03-12-2004) வெள்ளிக்கிழமை நண்பகல் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறு மிகவும் அன்புடன் அழைக்கின்றோம்.

நா.விவேகானந்தன்,
சித்தன்கேணி.

மகள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்.

(39202) (26-16-19)

## இரண்டாம் வருட நீங்காத நினைவலைகள்

### செல்வி தவராசன் ஹிந்துஜா



மண்ணில் 23.07.1998 — விண்ணில் 03.12.2002

அன்பால் உன்னை அரவணைத்து
நின்றேன் ஹிந்துஜா
ஆண்டுகள் நான்கு வயதாகிவிடவே
உன்னை நினைக்காத நாளில்லை
பொன்போல் உள்ளங்கொண்ட ஹிந்துஜா
மின்போல் இருபத்தினான்கு மாதங்கள்
பறந்து ஓடிப்போனது ஹிந்துஜா
ஆறாது ஆறாது - உன் துயர்
அழுதாலும் தீராது ஹிந்துஜா
எங்கள் இதயத்தில் என்றென்றும்
ஹிந்துஜா நினைவுகள் நிலைத்தேயிருக்கும்
ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
என்றென்றும் எமது கண்ணீர் மலைத்துளிகள்
உங்கள் ஆத்மசாந்திக்குக் காணிக்கை.

அப்பா, அம்மா, அக்கா,
அண்ணா, தங்கை, அம்மம்மா,
அம்மப்பா, மாமாமார்.

3 ஆம் வட்டாரம்
குறிகாட்டுவான், புங்குடுதீவு.

(39202) (34-16-19-26) தகவல்: மாமா ஸ்ரீ -(லண்டன்)



'ஓரிடம்' கவிதைத் தொகுதி வெளியீட்டுவிழா அண்மையில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்த வெளியீட்டு விழாவில் திரைப்பட இயக்குநர் எஸ்.ஞானரதன் மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும் -
நூலின் முதற்பிரதியை கவிஞர் எம்.ஐ.எ.ஜெபார் வெளியீட்டுவைக்க பி.கிருஷ்ணானந்தன் பெற்றுக்கொள்வதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். நூலாசிரியர் பொலிகையூர் சு.க.சிந்துதாசன் இரண்டாவது படத்தில் உள்ளார்.
*(படங்கள்: சி.சுந்தரலிங்கம் கரவெட்டிச் செய்தியாளர்)*

## தேசியக்கொடி ஏற்றிய விவகாரம்:
# வடமராட்சி அரசியல்துறையினரும் கண்காணிப்புக்குழுவினரும் சந்தித்துப் பேச்சு!

கரவெட்டி,டிசெ.3

மாவீரர் தினத்தன்று தமிழீழத் தேசியக்கொடி ஏற்றப்பட்ட விடயம் தொடர்பாகப் பருத்தித்துறைப் பொலீஸார் போர்நிறுத்தக் கண்காணிப் புக்குழுவிடம் முறையிட்டதையடுத்து வதிரியில் உள்ள வடமராட்சி அரசியல்துறைச் செயலகத்தில் விடுதலைப் புலிகளைக் கண்காணிப் புக்குழுவின் பிரதிநிதிகள் சந்தித்தனர்.

நேற்று மதியம் 12 மணியளவில் இடம்பெற்ற இச்சந்திப்பில் கண் காணிப்புக்குழுப் பிரதிநிதி றொனிமை வோல்ட், மேலதிகச் செயலாளர் சகிதம் கலந்துகொண்டார். விடுதலைப் புலிகளின் சார்பில் புலிகளின் வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.தயா கலந்துகொண்டார்.

கண்காணிப்புக்குழுப் பிரதிநிதி றொனிமை வோல்ட் இங்கு கருத் துத் தெரிவிக்கையில் -

"26.11.2004 அன்று பருத்தித்துறை பஸ் நிலையத்தில் படையினர் தடுத்தபோதும் அதனை மீறிப் புலிக்கொடி ஏற்றப்பட்டதாகவும் அதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறும் படையினரால் எமக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது" - என்று தெரிவித்தார்.

அதற்குப் பதிலளித்துப் பேசிய வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் தயா -

"அங்கு நடைபெற்ற மாவீரர்தின விழா வடமராட்சி மக்களால் ஏற் பாடு செய்யப்பட்டது. மாவீரர்தினம் சம்பந்தமான நடைமுறைகள் தொடர்பாக மக்களும் இராணுவத்தினரும் கலந்துபேசி எடுத்த முடிவின் படிதான் அன்றைய கொடியேற்றமும் நிகழ்வுகளும் நடைபெற்றன" - என விளக்கமளித்தார்.

தொடர்ந்து கண்காணிப்புக்குழுப் பிரதிநிதி கருத்துத் தெரிவிக் கையில் -

"நாம் சர்வதேச கண்காணிப்புக்குழுவினர் மட்டுமே தவிர நீதிபதிகள் அல்லர். அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள பிணக்குகளைக் கண்காணித்து சுமுக உறவை ஏற்படுத்துவதும் மக்களைப் பாதுகாப்பதும்தான் எமது கடமை. நீங்கள் தெரிவித்த கருத்துக்களை எங்கள் உயர்பீடத்திற்குத் தெரிவிக்கின்றோம்" - என் றார்.

(எ-70-12)


இளவாலை
ஆனைவிழுந்தான்
விநாயகர் தேவஸ்தானம்
உலக ஆன்மாக்களின் நன்மைக்காகவும்
நாம் வாழும் நாட்டின் வளர்ச்சிக்காகவும்
இறைவனை வேண்டி நிகழும்

**விஷேட ஹோமப்பெருவிழா**

நாள்: 04.12.2004 சனிக்கிழமை
நேரம்: காலை 7 மணிமுதல் ஒரு மணிவரை.

விஷேட ஹோமங்கள், அபிஷேகங்களைத் தொடர்ந்து விஷேட பூஜை இடம்பெற்று, மகேஸ்வர பூஜையும் நடைபெறும்.

விநாயகப் பெருமான் அடியார்கள் யாவரும் இந்நிகழ்வு களில் கலந்து பிரார்த்தித்து வேண்டுமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

(39221)(15-13-29) - விழா உபயகாரர்கள்.


## சமூகநல அமைச்சின் ஏற்பாட்டில் செயலகத்தில் பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,டிசெ.3

இலங்கை பெண்கள் பற்றிய தேசியக்குழு வின் பெண்கள் வலுவூட்டல் சமூகநல அமைச்சு பெண்கள் தொடர்பாகவும் அவர்களின் பிரச்சி னைகள் தொடர்பாகவும் ஒருநாள் பயிற்சிப் பட்டறை ஒன்றினை நேற்று யாழ்.செயலக கேட் போர் கூடத்தில் நடத்தியது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்டத்தில் உள்ள பெண்களின் செயற்பாடுகள் பற்றி யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியும் பெண் ணியக் கருத்துத் தொடர்பாக திருமதி சறோஜா சிவச்சந்திரனும் பெண்ணியம் - பொதுநோக்கு தொடர்பாக இலங்கை பெண்கள் பற்றிய தேசி யக்குழுவின் தலைவர் சுவர்ணா சமரசேகரவும் கருத்துக்கள் வழங்கினர்.

இலங்கைப் பெண்கள் பற்றிய தேசியக்குழு வின் பணிப்பாளர் பி.பத்திரகேன மற்றும் பிர தேச செயலர்கள், கிராம அலுவலர், செயலக திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

(எ-203-13)


**கண்ணீர்க் காணிக்கை**

கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில் முதலாய
கோயில்களின் நம்பிக்கைப் பொறுப்பாளர்
பரிபாலனசபை உறுப்பினர்

**அமரர் ஆறுமுகம் சூரியகுமாரன்**

அவர்கள் 28.11.2004 ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானதை யிட்டு அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நம்பிக்கைப் பொறுப்பாளர்,
(39214)(14-13-32) பரிபாலனசபை,
கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில்.


## வினாவிடைப் போட்டி பரிசளிப்பு நாளை

யாழ்ப்பாணம்,டிசெ.3

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநா யகர் ஆலயத்தில் நாளை சனிக்கிழமை மாலை 6 மணியளவில் நாவலர் குருபூசை தினவிழா நடைபெறும்.

குருபூசை தினத்தை முன்னிட்டு நடத்தப் பட்ட சைவவினாவிடைப் போட்டியில் பங்கு கொண்டு வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில் கள் நாளையதினம் வழங்கப்படும் எனக் கூறப் பட்டது. (எ)

## குடும்பத்துக்கு 5 கிலோ கோதுமை மா விநியோகம்

அரியாலை,டிசெ.3

யாழ்.குடாநாட்டில் மாவுக்கு செயற்கைத் தட்டுப்பாடு நிலவிவருவதை அடுத்து, கூட்டு றவுச் சங்கங்கள் குடும்பத்திற்கு 5 கிலோ படி மாவை விநியோகித்து வருகின்றன.

சங்கங்கள் தமது கிளைகள் ஊடாக இந்த மாவை விநியோகித்து வருவதால், கறுப்புச் சந் தையில் நிலவும் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

(எ-17)


**அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு**



அன்புடையீர்,
கடந்த 05.11.2004
வெள்ளிக்கிழமையன்று இறைபதம்
எய்திய எங்கள் குடும்பத் தலைவர்
அமரர்
**மாரிமுத்து சரவணமுத்து**
அவர்களின் அந்தியேட்டிக்கிரியை இன்று (03.12.2004) வெள்ளிக் கிழமை காலை 09.30 மணிக்கு வேலணை சாட்டித் தீர்த்தக்கரையிலும் (05.12.2004) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் வீட்டுக்கிருத்தியக் கிரியையும் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து மதியம் இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொண்டு அன்னா ரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

31/1 சந்தனமாதா கோவில் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (39219)(32-29-15-13)



# மரண அறிவித்தல்கள்

## எல்லுவர் மார்க்கண்டு



நல்லூர், கொண்டலடியைப் பிறப்பிடமாக வும் வதிவிடமாகவும் கொண்ட எல்லுவர் மார்க் கண்டு அவர்கள் நேற்று (02.12.2004) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பவளத்தின் அன் புக் கணவரும் கந்தசாமி, நவரத்தினம் (யாழ். மாநகரசபை), நித்தியானந்ததேவி, தேவராசா (யா.மா.சபை), ஜெகநாதன் (யா.மா.சபை) ஆகி யோரின் அன்புத் தந்தையும் மகேஸ்வரி, பத்மா வதி, பத்மசேகர், மோகனா, வசந்தா ஆகியோரின் அன்பு மாமனா ரும் பொன்னையா, காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் நல்லையா மற்றும் அன்னலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, இன்று (03.12.2004) பிற்பகல் 3 மணிக்கு தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*34, கொண்டலடி வீதி,*
*நல்லூர்.* (39222)(13-15-29)

தகவல்:
குடும்பத்தினர்.

## சுப்பிரமணியம் கனகலிங்கம்



இருபாலை, விதானையார் ஒழுங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் கனக லிங்கம் நேற்று (02.12.2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சுப்பிர மணியம் (கிராமதலைக்காரன் - விதானையார்), கோப்பாய் தெற்கு பர்பதபத்தினிஅம்மா தம் பதிகளின் புதல்வரும் தையல்நாயகி, ஆறுமுக சாமி (இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத் தர்), யோகலிங்கம் (இளைப்பாறிய கிராம சேவையாளர்), நவமணி, கமலாம்பிகை, தர்மலிங்கம், நகுலேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் குணவதி, தங்கரத்தினம், பாலசிங்கம், பாலகிருஷ்ணன், யோகமலர், லோகநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.12.2004) சனிக் கிழமை மு.ப. 10 மணியளவில் 'யோகஸ்தான்' இருபாலை - கோப்பாய் தெற்கில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'யோகஸ்தான்'*
*இருபாலை,*
*கோப்பாய் தெற்கு.* (39218)(33-13-15-29)

தகவல்:
சு.யோகலிங்கம்
(சகோதரர்- இளைப்பாறிய
கிராம சேவையாளர்).



**ராஜா** யாழ்ப்பாணம்



(சி-38750)
5 ஆம் திகதி வரை
அஜித் (இருவேடம்),
பூஜா நடித்த
**அட்டகாசம்** (ரீலிஸ்)
காட்சிகள்: 10.30, 2.30, 6.30
மட்டும். (பு.நே)
6 ஆம் திகதி முதல் **போஸ்**

**நாதன்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்
குளிரூட்டப்பட்டது. (சம்பந்தர் கிளினிக் ஒழுங்கை)
இன்று முதல்
அஜித், சினேகா நடித்த
**ஜனா** (ரிலீஸ்)
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30 (பு.நே.)
தினசரி இரவு 9.00 (பு.நே.)
RAMBO-3
(சி-39052)

**நிலாநுஞ்சலம்** சங்கானை
விஜயகாந், ரமீதாரெட்டி நடித்த
**ராஜ்ஜியம்** (ரிலீஸ்)
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
VAN HELSING
(நகுல படம்)

**நாகம்ஸ் சினிமா** சுன்னாகம்
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக
சரத்குமார், நிகிதா, வடிவேல் நடித்த
டொல்பி ஒலி அமைப்புடன்
**சத்ரபதி**



தினசரி 11.00, 3.00, 7.00 (பு.நே)



# மரண அறிவித்தல்கள்

## திருமதி இமானுவேல் அக்கினேஸ்அம்மா

அடப்பன் வீதி, மடத்தடியைப் பிறப்பிடமாகவும் வளன்புரம், கொழும் புத்துறையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இமானுவேல் அக்கினேஸ்அம்மா அவர்கள் நேற்று (02.12.2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இமானுவேலின் (கோபி) அன்பு மனைவி யும் துரைரத்தினம், ஜீவரத்தினம், எல்மோ, ராஜகுமார், இன்பகுமார், செல்வதி, இராஸ்வதி, கிறிலேஸ்வதி ஆகியோரின் தாயாரும் ஆனந்தம், ஆச்சம்மா, அன்னம், திரேசிஸ்ரா (அருட்செல்வி) ஆகியோரின் சகோ தரியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்கம் இன்று (03.12.2004) வெள்ளிக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு வளன்புரம் புனித சூசையப்பர் ஆலயத் தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, யாழ்.கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வளன்புரம்,*
*கொழும்புத்துறை.* (39223)(29-15-13)

தகவல்:
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

## திருமதி கனகசபை மங்களேஸ்வரி

சாரையடி, புலோலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி கனகசபை மங்களேஸ்வரி நேற்று (02.12.2004) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் வி.கனகசபையின் அன்பு மனைவியும் சிறிதரன் (புலோலி M.P.C.S), புவிதரன், ரவிதரன் (அமரர்), கவிதரன் (அம ரர்), துவிதரன் (மக்கள் வங்கி, நெல்லியடி), மதிதரன் (அமரர்), கிருபாதரன் (மாலைதீவு) ஆகியோரின் அன்புத் தாயாரும் மங்க ளேஸ்வரி, சுபத்திராதேவி, கலைச்செல்வி ஆகியோரின் மாமியாரும் கீர்த்தனா, நிதுசா, கவினன், கயேந்திரன், டிலாஜினி, யசோதா ஆகி யோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (04.12.2004) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புலோலி தெற்கு,*
*புலோலி.* (சி-39463)(29-15-13)

தகவல்:
வி.கனகசபை (கணவர்).

# திருமலை அபிவிருத்தி விடயத்தில் தமிழ்க் கூட்டமைப்பு புறக்கணிப்பு

## சீறுகின்றார் இரா.சம்பந்தன்

திருகோணமலைப் பிரதேசத்தில் எந்த அபிவிருத்தித் திட் டத்தை மேற்கொண்டாலும் அதுபற்றி என்னுடனும் கலந்தாலோசிக்க வேண்டும். ஏனெனில் திருகோணமலை மாவட்டத்தில் அதிகூடிய வாக்குகளைப் பெற்ற ஒரே உறுப்பினர் என்ற அடிப்படையில் எனக்கு அந்த உரிமை உண்டு.

நேற்று நாடாளுமன்றில் நடைபெற்ற குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத் தலைவர் இரா.சம்பந்தன் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது :

திருகோணமலை மாவட்டத்தில் மூன்றாவது எம்.பியாக இடம்பிடித்த ஜே.வி.பி. உறுப்பினருக்கு அபிவிருத்தி விட யங்களில் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் அதிகூடிய மக்களின் ஆதரவைப் பெற்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிடம் திருகோணமலைத் துறைமுகம் மற்றும் சுற்றுலா அபிவிருத்தி பற்றி எதுவும் ஆலோசிக்கப்படுவதில்லை.

எம்மைப் புறக்கணித்துவிட்டு அங்கு எதுவும் செய்ய முடியாது. நாம் கோருவது எமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் அதிகாரம் எமக்கு வழங்கப்படல்வேண்டும் என்பதே.

பிரித்தானிய அரசின் கட்டுப்பாட்டில் துறைமுகம் இருந்த காலகட்டத்தில் துறைமுகத்துடன் ஒட்டிய பிரதேசத்தில் வாழ்ந்த மக்களுக்கு தொழில் வாய்ப்புகள் வழங்கப்பட்டன. பின்னர் குத்தகை அடிப்படையில் அந்த நிர்வாகங்களைப் பொறுப்பேற்ற நிறுவனங்கள்கூட அப்பகுதிகளில் வாழ்ந்த மக்களுக்கே தொழில் வாய்ப்புகளை வழங்கிவந்தன. ஆனால் இன்று அப்படியொரு நிலை அங்கு இல்லை. கிண்ணியா, பாலகாட்டாறு போன்ற பகுதிகளில் துறைமுக விஸ்தரிப்புக்காக 9ஆயிரம் ஏக்கர் காணிகள் பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்டன.

2001 ஆம் ஆண்டு துறைமுகப் பிரதேசத்தில் நிலக்கரிச் சுரங்கம் ஒன்றை தோண்டுவதற்கு திட்டமிடப்பட்டது. இதை நாம் முற்றாக எதிர்த்தோம்.

திருகோணமலையில் எந்த அபிவிருத்தித் திட்டத்தை மேற்கொண்டாலும் அதுபற்றி எம்முடன் ஆலோசிக்கப்படல் வேண்டும் - என்றார் அவர். (எ-க)

# குருநகர் - திருநகர் மோதல்: டக்ளஸ் கவலை

குருநகர் - திருநகர் மக்கள் மோதல்களில் ஈடுபட்டு வருவதையறிந்து வேதனையடைகின்றார் என ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும், அமைச்சருமான கே.என்.டக்ளஸ் தேவானந்தா அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

பேசித் தீர்க்கும்படியான சிறு சம்பவங்கள் பெரும் கோஷ்டி மோதலாக உருவெடுத்து பரஸ்பரம் வீடுகளைத் தீக்கிரையாக்கி, மோதல்களில் ஈடுபடுவதற்கு வழிசெய்யப்பட்டிருப்பதற்கு எமது கட்சி தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

வதந்திகளையும், பொய்ப்பிரசாரங்களையும் செவிமடுத்து அதனடிப்படையில் தொடர்ந்தும் மோதல்களில் ஈடுபடுவதை இரு பகுதி மக்களும் தவிர்த்து, தங்கள் மத்தியிலுள்ள பிரச்சினைகளை சுமுகமாகப் பேசித்தீர்க்க வேண்டும் என்பதே எமது வேண்டுதலும், விருப்பமுமாகும்.

என்றார் அவர். (எ-க)

# சொல்ஹெய்ம் வன்னி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஞர் பாலசிங்கத்திடம் சொல்ஹெய்ம் கேட்டறிந்துகொண்டார் எனத் தெரிகின்றது.

இதேவேளை -

பொறுமையின் எல்லைக் கோட்டிலிருந்து விடுக்கப்படும் வேண்டுகோள் என்று குறிப்பிட்டுத் தலைவர் பிரபாகரன் விடுத்த கோரிக்கையை அதிகம் பொருட்படுத்தாமல் உதாசீனஞ்செய்வது போல - தூக்கியெறிந்து நிராகரிப்பது போல - இலங்கை அரசு உத்தியோகபூர்வ அறிக்கை வெளியிட்டு இருப்பது புலிகளின் தலைமையைக் கடும் சீற்றத்திற்குள் ஆழ்த்தியிருக்கின்றது. இந்தச் சீற்றத்தை நேற்று கிளிநொச்சியில் தம்மைச் சந்தித்த நோர்வே அனுசரணைக் குழுவின் பிரதிநிதியும் கொழும்புக்கான தூதுவ ருமான ஹான்ஸ் பிரட்ஸ்கரிடம் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேரடியாகவே வெளியிட்டார் என அறியமுடிகின்றது.

அரசின் பதில் அறிக்கையைப் புலிகள் நன்கு பரிசீலித்து வருகின்றனர். இது விடயத்தில் திடமான - திட்டவட்டமான - தீர்க்கமான - ஒரு முடிவைப் புலிகள் எடுப்பர் எனத் தெரிகின்றது.

எனினும், நேற்று நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரைச் சந்தித்த சமயம் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் இது விடயத்தில் தமது அமைப்பின் இறுதித் தீர்மானம் எதனையும் அவரிடம் வெளியிடவில்லை எனக் கூறப்பட்டது.

ஹான்ஸ் பிரட்ஸ்கர் தாம் இலங்கை அரசிடமிருந்து எந்தச் செய்தியையும் புலிகளின் குழுவினருக்கு எடுத்துவரவில்லை என்றும் நேற்றுத் தெரிவித்திருக்கிறார்.

நேற்றைய சந்திப்பில் புலிகளின் தலைவரின் மாவீரர் தின உரை தொடர்பான விளக்கங்கள், மாவீரர் தின நிகழ்வுகளின்போது திருகோணமலை உட்படத் தமிழர் தாயகத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் ஆகியவை குறித்தே அதிகம் பேசப்பட்டதாக அறியவந்தது.

நேற்று கிளிநொச்சியில் புலிகளின் சமாதானச் செயலகத்தில் நண்பகல் 12 மணிமுதல் பிற்பகல் 1.15 மணிவரை இச்சந்திப்பு இடம்பெற்றது.

புலிகளின் தரப்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் நோர்வேத் தூதுவருடனான சந்திப்பில் பங்குபற்றினர். (எ-க-5)

# ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எந்தச் சமயத்திலும் நாடாளுமன்ற அமர்வில் பங்குகொள்ளலாம். சபையில் உரையாற்றலாம் என்பது கவனிக்கத்தக்கது.

ஜனாதிபதியின் திடீர் நாடாளுமன்ற வருகையை ஒட்டி நாடாளுமன்றத்துக்கான பாதையில் நேற்றுப் பாதுகாப்புக் கெடுபிடிகள் தீவிரமாக இருந்தன. (எ-க)

# வவுனியா - மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஓமந்தைச் சோதனைச் சாவடி நிலையத்துக்குச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகள் போகாததன் காரணமாக ஏ-9 வீதி திறக்கப்படவில்லை.

காலை முதல் கொழும்பில் இருந்து வந்த அனைத்துப் பயணிகளும் பெரும் சிரமத்துக்குள்ளாகினர். அவர்கள் நேற்று முழுநாளும் வவுனியாவில் தங்கவேண்டியநிலை ஏற்பட்டது.

இளைஞர் குழு ஒன்று வவுனியாவில் ரயில் நிலைய வீதியில் ரயர்களைப் போட்டு எரித்தது. இதன் காரணத்தால் பொலீஸாருக்கும் இளைஞர் குழுவுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. இதன்போது இரண்டு இளைஞர்கள் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர். வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோரின் தலையீடு காரணமாக உடனடியாகவே அவர்கள் விடுதலைசெய்யப்பட்டனர்.

இதற்கிடையில், வவுனியா வைரவப் புளியங்குளம் பகுதியில் இருந்த பொலீஸாரின் காவலரண் ஒன்று நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாதவர்களினால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. இது தொடர்பாகப் பொலீஸார் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு முறைப்பாடு செய்தனர். இதனை அடுத்துப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகள் சம்பவ இடத்தைப் பார்வையிட்டனர்.

பண்டாரிக்குளம் - வவுனியா வீதியில் அதிக எண்ணிக்கையில் ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டதன் காரணமாக மக்கள் எவரும் போக்குவரத்துச் செய்யமுயாத நிலை ஏற்பட்டது. இளைஞர் குழு வீதிகளில் நின்று மக்கள் எவரையும் போக முடியாமல் தடுத்தது. சைக்கிளில் சென்றவர்களின் சைக்கிள் சில்லில் காற்றுத் திறந்து விடப்பட்டது.

நகரில் பொது வைத்தியசாலையும், தனியார் வைத்தியசாலை ஒன்றுமே திறந்து இருந்தன. ஏனைய சகல கடைகளும் சிற்றுண்டிச் சாலைகளும் மூடப்பட்டிருந்தன. இதன் காரணமாக மக்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளானார்கள். கண்டி வீதியால் செல்வதற்காக வந்து ஓமந்தைச் சோதனைச்சாவடி மூடப்பட்டிருந்ததால் நேற்று முழுநாளும் வவுனியாவில் தங்கிய பயணிகளும் உணவு, குடிதண்ணீர் பெற்றுக் கொள்ள முடியாமல் பெரும் அவதிப்பட்டனர். வவுனியா காமினி மகா வித்தியாலயத்திற்கு மட்டுமே நேற்று மாணவர்கள் வருகை தந்தனர். எனினும், சிறிது நேரத்தில் அந்தப் பாடசாலையும் மூடப்பட்டது. மொத்தத்தில் பூரண கதவடைப்பு வவுனியாவில் இடம்பெற்றுள்ளது.

இதேநிலைமைதான் மன்னாரிலும் நிலவியதாகக் கூறப்பட்டது. மன்னார் மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலும் நேற்று முழு அளவில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

மக்கள் கூட்டத்தைப் பயன்படுத்திப் படையினரைச் சீண்டிவிடப் புலிகள் முயற்சிக்கின்றனர் என்று தகவல் கிடைத்த பின்னணியில், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அதிகாரிகள் சோதனைச் சாவடியில் பிரசன்னமாகியிருக்கவில்லை. இதனால் சோதனைச் சாவடிகளைத் திறக்க முடியவில்லை என்று படைத்தரப்பு தெரிவித்தது. (எ-3-12)

# இந்தியாவிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் திரும்பிவருவதற்கான ஏற்பாடுகளை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம் மேற்கொண்டிருந்தது.

இவ்வாறான மேலும் பலர் படிப்படியாகத் திரும்பி தமது சொந்த இடங்களில் மீளக் குடியேறுவார்கள் என அகதிகளுக்கான ஐ.நா. தூதரக வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிட்டன. (எ-க)

# நோர்வேத் தூதுவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமான இச் சந்திப்பு சுமார் ஒரு மணித்தியாலம் இடம் பெற்றது.

இச்சந்திப்பில் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக, திருகோணமலையில் இடம்பெற்றுவரும் இனமோதல்கள் பற்றியும், நாட்டின் ஏனைய பகுதிகளில் இடம்பெற்றுவரும் வன்முறைகள் பற்றியும் அரசியல்துறைப் பொறுப்பாளர் தூதுவருக்கு எடுத்து விளக்கினார். (எ-5)

# படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ். எழிலன், நகரப் பொறுப்பாளர் சிவகுமார் ஆகியோரும், படைத்தரப்பில் திருகோணமலை மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சமன் குலதுங்க, பொலீஸ் அத்தியட்சகர் உபாலி ஹேவகே ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கண்காணிப்புக் குழுவின் சார்பில் டின்வின் ஜோன் எல்டன், ஜோன் சிலோனி ஆகியோர் பங்குபற்றினர். (எ-க-12)

# நாடாளுமன்றில் மகேஸ்வரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சருமான மகேஸ்வரன் உரையாற்றும் போது தாம் ஒரு கப்பல் உரிமையாளராக இருந்த சமயம் தமக்கு விளைவிக்கப்பட்ட அநீதிகளை சபையில் அப்பட்டமாக வெளிப்படுத்தினார்.

இலங்கைக் கடற்பிராந்தியத்தில் ஒரு தமிழனின் கப்பல் ஓடக்கூடாது என கட்டாயத்தடை விதிக்கப்பட்டது. இதற்கெல்லாம் காரணம் ஜனாதிபதியே என்று அவர் குற்றஞ்சுமத்தினார்.

கொழும்புத் துறைமுகத்தை ஒரு நிறுவனத்துக்குத் தாரைவார்த்துக் கொடுத்ததன் மூலம் பிரான்ஸில் ஆடம்பர மாளிகை ஒன்றை அன்பளிப்பாகப் பெற்றார் அவர் என்றும் மகேஸ்வரன் எம்.பி. குறிப்பிட்டார்.

இந்தச் சந்தர்ப்பத்திலேயே பிரதி அமைச்சர் டிலான் பெரேராவும், நாடாளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வாவும் அநாகரிகமான வார்த்தைகளால் மகேஸ்வரனுடன் மோதினர்.

அதேவேளை, மேர்வின் சில்வா மூன்று முறை ஆசனத்தில் இருந்து எழுந்து எதிர்க்கட்சிப் பக்கம் செல்ல முயன்றார்.

அமைச்சர் மங்கள சமரவீரவும் ஏனையோரும் அவரைத் தடுத்துவிட்டனர்.

அப்போது சபைக்குத் தலைமை தாங்கிய நாடாளுமன்ற உறுப்பினர் மயோன் முஸ்தபாவினால் சபையில் அமைதியை ஏற்படுத்த முடியவில்லை.

தொடர்ந்தும் மகேஸ்வரன் எம்.பி. உரையாற்றிக்கொண்டிருந்தார். அப்போதும் சபையில் ஒரே கூச்சல், குழப்பம் நீடித்தது.

இவ்வேளையில், சபாநாயகர் சபைக்குத் தலைமை ஏற்றார். அப்போதும் சர்ச்சை தொடர்ந்தது. இந்த வேளையில் பிரதியமைச்சர் டிலான் பெரேராவும், மேர்வின் சில்வாவும் தத் தமது ஆசனங்களில் இருந்து பாய்ந்துவந்து மகேஸ்வரன் எம்.பியைத் தாக்க முயன்றனர்.

அதிர்ஷ்டவசமாக படைக்கல சேவிதரும், சில ஆளும் கட்சி உறுப்பினர்களும் இவர்களைப் பிடித்து இழுத்து அரசுத்தரப்புக்குள் கொண்டு வந்துவிட்டனர். ஆளும் கட்சி உறுப்பினர்களும் எழுந்துவிட்டனர்.

ஆனால், மகேஸ்வரன் எம்.பி. அங்கம் வகிக்கும் ஐ.தே.கட்சியின் உறுப்பினர்கள் சபையில் இருந்தபோதும் ஒருவர்கூட மகேஸ்வரன் எம்.பிக்கு ஆதரவாக ஒரு வார்த்தையேனும் பேசவில்லை. இதே நிலையைத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களும் கடைப்பிடித்தனர். இந்தச் சர்ச்சைகளுக்கு இடையில் மகேஸ்வரன் எம்.பிக்கு ஒதுக்கப்பட்ட நேரமும் முடிந்துவிட்டதால் சபாநாயகரின் அறிவித்தல்படி மகேஸ்வரன் தனது பேச்சை முடித்துக் கொண்டார்.

அப்போது சபைக்குள் வந்த அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, மகேஸ்வரன் எம்.பியின் பேச்சை வன்மையாக ஆட்சேபித்தார்.

இனி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மகேஸ்வரன் எம்.பியின் கேள்விகளுக்கு இந்தச் சபையில் தாம் பதிலளிக்கப் போவதில்லை என்று அவர் கூறியதோடு மகேஸ்வரனை ஒருமையில் பேசினார்.

இதனால், மீண்டும் சர்ச்சை ஏற்பட்டது. சபாநாயகர் சபையில் அமைதியை ஏற்படுத்த சிரமப்பட வேண்டியதாகிவிட்டது. சபையை ஒத்திவைக்காமலே நிலைமையை ஒருவாறு சமாளித்தார் சபாநாயகர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையின் கௌரவத்துக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் நடந்துகொண்டதால் சபாநாயகரின் பணிப்பின் பேரில், பார்வையாளர் கலரியிலிருந்த பாடசாலை மாணவர்கள் மட்டும் அச்சமயம் வெளியேற்றப்பட்டனர். (எ-க)

ONLINE CLASSES
OFFICE APPLICATIONN
ஆரம்பம்: 05-12-2004
பகல் 10.00 மணி
2 வாரங்கள் மட்டுமே!!
அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க மிகக் குறைந்த கட்டணத்தில் மிகக்குறுகிய காலத்தில் பரந்த கணனி அறிவினைப் பெற்றிட சிறந்த வழி காட்டுகிறது.
இப்பிரிவானது,
- பாடசாலைக் கல்வியை முடித்துக் கொண்டோர்
- நேர்முகத் தேர்வுக்குத் தோற்றவுள்ளோர்
- அரச, தனியார் நிறுவன உத்தியோகத்தர்கள்
ஆகியோருக்கென விசேடமாக ஆரம்பிக்கப்படவுள்ளது
உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்
Director
IBMS, # 410, K.K.S. Road, Jaffna.
021 222 3165 (c/39456)

கணக்கீடு
S.சயந்தன்
2005 DAY CLASS
கிரயக்கணக்கீடு
ஆரம்பம்:03.12.2004 (Fri.)
Wed., Fri. 4.30 p.m.
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்.நகர்.
(39220)

வணிகக்கல்வி கணக்கீடு
கல்வி நிலையம் கொக்குவில்
புதிய கல்வி ஆண்டு 2005 இற்கான
பிரத்தியேக வகுப்புகள் ஆரம்பம்
06.12.2004 திங்கட்கிழமை காலை 6.30 a.m.
தரம் 10, O/L வணிகக்கல்வி கணக்கீடு
A/L2006 உற்பத்திக்கணக்கு
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
ஆசிரியர்: K. அற்புதராஜா (B.Com.Dip. in Edu.)
கொக்குவில் மேற்கு, கொக்குவில்
(39191) T.P: 077 6048872




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.12.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.